


ஸ்டார் ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட்

(ரிஜீஸ்டர்ட்)

16, வித்வான் பொன்னுச்சாமி பிள்ளை தெரு,
வடக்காவணிமூல வீதி, மதுரை.

மெட்டீரியா மெடிக்கா

6-ம் மாதப் பாடம்



Star Homoeopathic Institute,

(Registered.)

MADURAI.



17-வது அத்தியாயம்.

41. கல்கேரியா பாஸ் (Calcarea Phos)

டாக்டர் சூஸ்லரின் பயோகெமிஸ்ட்ரி என்ற 12 தாது உப்புக்களில், மிகவும் அவசியமான ஒரு தாது உப்பு. 'கல்கேரியா கார்பைப்' போலவே இதுவும் ஊட்டக்குறைவு எலும்பு வளர்ச்சி இல்லாத குழந்தைகளுக்கு மிகவும் உபயோகமாகின்றது. ஆயினும் வித்தியாசங்கள் தெளிவாக இந்த இரண்டு மருந்துகளுக்கும் காணப்படுகின்றது, 'கல்கேரியா கார்ப்' கொடுக்கவேண்டிய கேஸ்களில் குழந்தைகள், பருத்து ஊளச்சதையுடன், கொள கொளவென்று இருக்கும். **'கல்கேரியா பாஸ்'** கொடுக்கவேண்டிய கேஸ்களில் குழந்தை மெலிந்தும், தோஷப்பட்டும், தேரை விழுந்தது போன்றும், வயிறுமட்டும் ஊதியும் காட்சியளிக்கும். **எப்பொழுதும் தலையில் அதிக வியர்வை காணும்.**

1. இரண்டு வருஷம் ஆகியும் சரிவர பல் முளைக்காமல் இருக்கும் குழந்தைகளுக்கும், பல் முளைக்கும்போது ஏற்படும் சகல தொந்திரவுகளுக்கும், அதாவது வாந்தி, வயிற்றோட்டம் பச்சை நிறத்துடனும், மிகச் சப்தத்துடனும் வெளியாகும். இவைகளுக்குக் கொடுக்கலாம்.

2. ஜலதோஷம் அடிக்கடிப் பிடித்து நெஞ்சில் சளியுடன், குழந்தை வர வர இளைத்துக்கொண்டும், மெலிந்தும், (அதாவது விலா எலும்புகளை வெளித்துருத்திக் காண்பிக்கும்படியான அளவு மெலிந்த குழந்தைகள்) இவர்களுக்கு 30 வீரியத்தில் சில நாட்கள் நீடித்துக் கொடுத்தால் தான் டீ. தொந்திரவுகள் நீங்கும்.

3. **எலும்புருக்கி நோய்க்கும்,** (Bon's T. B.) எலும்பு முறிவிற்கும், முறிந்த எலும்புகள் ஒன்று கூடுவதற்கும் மிகவும் உபயோகமாகும்.

4. **சில குழந்தைகள்** ஆகாரம் உண்ட உடனே வெளிக்குப்போகும் பழக்கத்துடன் இளைத்துக்கொண்டே வந்தாலும் ஒரு சஞ்சீவியைப்போல உதவும். இம்மாதிரி குழந்தைகளுக்கு சிறுநீரில் 'பாஸ்பேட்' என்ற வெண்மையான நிறத்துடன் ஒரு வஸ்து கலக்கப்பட்டு **அரிசி கழுவிய நீரைப்போன்று** மூத்திரம் வெளியாகும். இதற்கு இம்மருந்துடன் ஆசிட்பாஸ் 6xயும் மாற்றி, மாற்றிக்கொடுக்கலாம்.

42. கல்கேரியா சல்ப்யூரிகா (Calcarea Sulphurica)

இதுவும் பயோகெமிஸ்ட்ரி உப்புகளில் ஒருவகை உப்பாகும். இரணங்கள் மஞ்சள் சீழுடன் இருப்பதை நிவர்த்திக்கும். கட்டிகள், பிளவைகள், சீழ்கோர்த்த சிரங்குகள், புண்களை ஆற்றும்.

முக்கிய உபயோகம்:— 1. கட்டிகளை உடைக்க முதலில் சிலிகா அல்லது சைலீஷியாவைக் கொடுத்து, உடைக்கச் செய்து துவாரம் ஏற்பட்ட பிறகு இதைக் கொடுத்தால், துரிதமாக ஆற்றும்.

2. **சீழ்பிடித்த இரணங்கள்,** சிரங்குகள் மிக்க ஆழத்திலிருப்பின் "கல்கேரியா சல்ப்" தான் வேலை செய்து ஆற்றக்கூடியது. ஆழத்தில் இல்லாத லேசாக மேல் பாகத்தில் காணப்படும் சிரங்குகள் புண்களை 'ஹீப்பார் சல்பர்' என்ற மருந்தைக் கொடுத்து ஆற்றலாம்,

3. **கண் மணி பாதிக்கப்பட்டு,** கெட்டியான, மஞ்சள் நிறமுள்ள பீழை வெளித்தள்ளப்பட்டு இருக்கும் கண் வேக்காட்டிற்கும், நகச்சுத்தி, விரல்சுத்தி, மூத்திரப்பையில் ரணம் ஏற்பட்டு சீழ் இரத்தத்துடன் வெளிவருவதற்கும், மிகவும் சிறந்த மருந்து. காதுகளில் சீழ் மஞ்சளாகவும் நாற்றத்துடனும் வந்து அதனால் காது கேளாமைக்கும் உபயோகிக்கலாம்.

43. காக்டஸ் கிராண்டிப்ளோரஸ் (Cactus Grandiflorus)

இருதய சம்பந்தமான, இருதயத்தை இருக்கும்உணர்ச்சியுடன் ஏற்படும் இரத்த ஓட்டக் கோளாறுகளுக்கு உபயோகமாகும் மருந்து.

முக்கிய குறிகள்:— இறுக்கம், அழுத்தும் உணர்ச்சி, நெருக்கம், இதனால் மார்பு அசைய முடியாது. இக்குறிகள் எப்பாகத்திலிருந்தாலும் (உதாரணமாக கருப்பை, யோனி, ஆசனத்துவாரம் போன்ற இடங்களில்) இம்மருந்து தான் கொடுக்கப்படவேண்டும்.

1. **வாதநோய்களினாலோ,** அல்லது வேறு காரணங்களினாலோ உண்டான இருதய வியாதியில் இருதயத்தை ஒரு இரும்புப்பட்டையை வைத்து இறுக்கினாற் போன்ற உணர்ச்சி இருந்தாலும் டை வியாதியின் காரணமாய் அதிகமான இரத்தம் பெரும் மூளையில் சேர்ந்து, (தலையில் கனத்த அழுத்தும் உணர்ச்சியுடன்) மூக்கிலிருந்தும், வாயிலிருந்தும் இரத்தம் கொட்டினாலும், இம்மருந்தைக் கண்டிப்பாய்க் கொடுக்கவும்.

2. இம்மாதிரி இருதயக் கோளாறுடன், சிலருக்கு ஏற்படும் **இரத்த மூலத்திற்கும் சி**றந்தது. வெளியேறும் இரத்தம் உடனே **சீக்கிரத்தில் கட்டிகளாய்** மாறிவிடும்.

3. பெண்களின் மாதவிடாயின்போது, போக்கு கட்டி தட்டியும் கருப்பாயும், நின்றால் அதிகப்போக்கும், படுத்தால் போக்கு நின்றுவிடுவதும். இத்துடன் இருதயக் கோளாறும் இருந்தால் நன்கு வேலை செய்யும்.

4. இருதய படபடப்பு, மயக்கத்துடன் மூச்சுத்திணறல், முக்கியமாய் இடது பக்கம் படுத்தால் ஏற்படுகின்றது. இருதய நடை (அதாவது நாடி) அடிக்கடி மாறும், நின்று

நின்று ஓடும் நாடி, ஜில்லிட்ட வியர்வை தாய் திராவக மாயும், மற்ற வீரியங்களிலும் உபயோகிக்கலாம்.

கவனிப்பு:—இடது பக்கமாய் படுப்பதாலும், மாடிப் படிகளில் ஏறிப்போவதினாலும், மத்தியான நேரத்திலும், (பகல் 11 மணி அல்லது இரவு 11 மணிக்கு வியாதி அதிகரிக் கும்) திறந்த வெளியிலும் அமைதியாயிருந்தாலும் வியாதி குறையும்,

44 காம்போரா (Camphora)

இது கிழக்கு ஆசியாவிலுள்ள ஜப்பான், சைனு போன்ற தேசங்களில் வளரும், கற்பூர மரத்தின் பிசினிலிருந்து தயா ரிக்கப்படுகின்றது. காலரு வியாதிக்கு மிக முக்கிய மருந்து கள் என்று ஹானிமான் காலத்தில் நிருபிக்கப்பட்ட மூன்று மருந்துகளில், காம்போரா தான் சிறந்ததாக இருக்கின்றது.

அவையாவன:— (1) காம்போரா, (2) குப்ரம்மெட் டாலிகம், (3) விராட்ரம் ஆல்பம்,

உபயோகம்:—விஷபேதி என்ற காலரு வியாதியில் உடல் பூருவும் சில்லிட்டும் (பிணம் போன்ற சில்லிப்பு) உடல் வலிமை மிகக் குறைந்தும் லேசான இழுவையும் இருந்தாலும் (முக்கியமாக நாக்கு, மூக்கு, காதுகள் முதலி யன பனிக்கட்டிபோல் சில்லிப்பாகி விட்டபோதிலும், வியாதியஸ்தர் அந்த நிலைமையில் தான் போர்வையை தூர எறிவார், போர்த்திககொள்ள விரும்பமாட்டார்.) இந்த முக்கியக் குறிகளை உடைய எந்த வியாதியிலும் காம்போரா நன்கு வேலை செய்து காப்பாற்றிவிடும்.

காலரு வியாதிக்கு '**குப்ரம்மெட்டாலிக்கம்**' கொடுக்க வேண்டுமானால், தசைகளில், கெண்டை ஏறுதல் அதிக

மான இழுவை, இழுப்புகள் இருந்துகொண்டே கை, கால், விரல்கள், உட்புறமாக மடக்கப்பட்டிருக்கும், இக்குறியை பிரதானமாகக் கவனிக்கவும். சாதாரணமாகக் காலரு சம யத்தில் தடுப்பு மருந்தாகவும் இதைக்கொடுக்கலாம். ஷை வியாதிக்கு விராட்ரம் ஆல்பம் கொடுக்கவேண்டிய முக்கியக் குறி, "நெற்றியில் மிகக் குளிர்ந்த வியர்வையும், ஏராளமான போக்கும்" இருந்தால் கொடுக்கலாம்.

கவனிப்பு:— (a) சரீரம் குளிர்ந்து, சாவு, மரணம் நேரிடும்படியான குறிகள் தோன்றின சமயத்தில் தேகத் தில் சூடு உண்டுபண்ண இதைக் கண்டிப்பாய் கொடுக்க வேண்டும். ஆரம்ப ஜலதோஷத்திற்கும் கொடுக்கலாம்.

(b) இது சகல ஹோமியோபதி மருந்துகளையும் நொடிப்பொழுதில் முறிக்கும் வல்லமை உடையது. ஆகை யால் மற்ற மருந்துகளுடன் இதை வைக்காமல், தனியான ஓர் இடத்தில் வைக்கவும்.

45. கார்போ வெஜிடபிள்ஸ் (Carba Vegitabilis)

நாம் உபயோகிக்கும் அடுப்புக்கரி (கரிக்கட்டை) இவை களிலிருந்து வீரியப்படுத்திய முறையில் மருந்தாக உபயோக மாகின்றது. பிராணுபத்து சமயங்களிலும், அவசர நேரங் களிலும், அதாவது மரணத்திற்கு முன் அநேகமாகக் காணப் படும் க்ஷீண நிலைமைகளில் **சரீரம் நீல நிறமாகுதல், உடல் சில்லீட்டு** எல்லாம் ஓய்ந்து விடும், கால கட்டத்தில் கொடுத் தால் ஒரு சில உயிர்கள் பிழைக்க வழியுண்டு.

முக்கியக் குறிகள்:—உடல் நீலம் பூத்தல், சில்லிப்பான மூச்சு, முக்கியமாக, கால்பாகத்திலிருந்து முழங்கால் வரை யிலும் பனிக்கட்டியைப்போன்ற சில்லிப்பு மூச்சுத்திணற லுடன், அடிக்கடி **விசிறியைக்கொண்டு வீசச்சொல்வர்,** வயிற்

றில் அதிக வாயுவு உப்பிசம், எரிச்சல் காணும். எரிச்சலுடன் புளிச்ச ஏப்பம் விடுவர், கழிவுப் பொருள்கள், மலம், மூத்திரம், வியர்வை அதிக நாற்றம் அடிக்கும்.

உபயோகம்:— (1) டைபாயிட், சில விஷ சுரம் போன்ற கடுமையான வியாதிகளின் கடைசிக் கட்டத்தில் ஷை குறிகளுடன் நீலம் பூத்தும் (முகம், உதடு, கை, கால், நகங்கள் நீல நிறம் அடைதல்) அதிகமான காற்றையும் எப்பொழும் விசிறி வைத்து விசிறிக்கொண்டே இருப்பதையும் விரும்பினால் "கார்போ வெஜிடபிள்ஸ்" 39, 200 வீரியங்களில் கொடுக்கவும். ஆனால் இந்த இரண்டு குறிகளும் இல்லாமல் முன் சொன்ன எரிச்சல், கால் சில்லிடுதல், கழிவுகள் அதிக நாற்றம், பிணக்களையுடன் இருக்கும் எந்த வியாதியின் கடைசிக் கட்டத்திலும் 'ஆர்சனிக்கம் ஆல்பம்' என்ற மருந்தை 200 வீரியத்தில் கொடுக்கவும்.

(2) வயிற்றுக் கோளாறுகளில். சுலபமாய் ஜீரணிக்கக் கூடிய வஸ்துக்கள் கூட ஜீர்ணமாகாமல், தற்காலிகமாக உணவை உட்கொண்டவுடன் வயிறு பொருமுதல், வயிற்றில் வாயு உப்பிசம் அதிகமாகி, வயிறு வெடித்து விடுவது போன்ற அவ்வளவு காற்று உப்பிசத்தால் மூச்சுவிடத் திணறலும், வெளிக்காற்றைக் குடிக்கவேண்டும் என்ற விருப்பமும் ஏற்பட்டு, சதா முகத்தில் விசிறி வைத்து வீசச்சொல்லுவார். புளித்த ஏப்பம், பால் ஒத்துக்கொள்ளாமை இவைகளுக்கு 6x அல்லது 30 வீரியங்களில் கொடுக்கலாம்.

(3) சில நீடித்த வியாதிகளான ஆஸ்துமா, நாளுக்கு நாள் சரீர பலம் குறைந்து கொண்டேவருதல். இதுபோன்ற நோய்கள் முன் சில வருடங்களுக்கு முன்னால் உதாரணமாக சிறு பிராயத்தில், கக்குவான் இருமல், கணைச்சூடு ஏற்பட்டு அதிலிருந்தே, தற்பொழுது வருடா வருடம் ஆஸ்துமா என்ற காச நோய் தொடர்ச்சியாக வந்து கொண்டிருப்ப

தற்கும், சிறு பிராயத்தில் வயிற்றுக்கோளாறு ஏற்பட்டு, வயிற்றோட்டம், பித்த வாயு வலி நீடித்திருப்பின் கண்டிப்பாய் 30-க்கு மேற்பட்ட வீரியங்களில் கொடுக்கக் குணம் காணலாம்.

(4) வாயினால் பேசும்பொழுதும், பல் தேய்க்கும் பொழுதும் பல் ஈறுகளிலிருந்து (ஈறுகளின் பலம் குறைந்து தொட்டால் கூட) இரத்தம் வருவதற்கும் முக்கியமாக உதவக்கூடிய மருந்து.

(5) நுரையீரல் நோய்களிலும் கூட, அதாவது மழை நேரங்களில் சாயங்கால வேளைகளில் உண்டாகும் தொண்டை கற கறப்பு, கிழவர்களுக்கு ஏற்படும் ஆஸ்துமா போன்ற வியாதிகளில் நெஞ்சில் அதிகமாக எரிச்சலும், சில சமயங்களில் எரிச்சல் இல்லாமல் அதிகக் கபம், கோளை மார்பில் சேர்ந்து மூச்சு விட முடியாமல் திணறிக்கொண்டிருப்பதற்கும், முகத்தில் விசிறி வைத்து விசிறிக் கொண்டிருந்தால் தான் சற்று மூச்சுவிட முடியும் என்று தோன்றிய நிலைமையில் கண்டிப்பாய் கேட்கும்

(6) அஜீர்ணத்தினால் ஏற்படும் நாள்பட்ட இரத்த சோகைக்கு, 'சைனா' என்ற மருந்துடன் மாற்றி மாற்றிக் கொடுக்கலாம்.

46. காலண்டுலா (Calendula)

இந்த மருந்து இரணங்களை, சீழ்கோர்க்கவிடாமல் காப்பதோடு, வெகு சீக்கிரத்தில் ஆற்றும் வல்லமை உடையது. பெரும்பாலும் தாய்த்திராவகத்தை வெளிஉபயோகமாக தண்ணீரில்கலந்து ரணங்களைக்கழுவி சுத்தப்படுத்தியும், கட்டிகள் பழுத்து உடைவதற்கு சூடான தண்ணீரில் கலந்தும், மேல் பிரயோகமாக ஒத்தடம் கொடுக்கவும், வாஸ்லைன் கலந்து களிம்பாகவும் உபயோகப்படுகின்றது.

இதர உபயோகம்:—பற்களைப் பிடுங்கியதால் ஏற்படும் இரத்தப் பெருக்கை நிறுத்த உள்ளுக்கு வீரியப்படுத்திய மருந்து 6x க்கொடுக்கவும், வெளிப்பிரயோகமாககாலண்டுலா லோசனைத்தடவவும். இதைப்போலவே வெட்டுக்காயங்கள், குழிப்புண்கள், சீழ்கட்டிகள். இவைகளுக்கு வெளிச் சிகிட்சையும், உள் சிகிட்சையும் செய்யவும்.

47. காலிகார்பானிக்கம் (Calicarbonicum)

பொட்டாசியம் என்ற பொருளிலிருந்து பலவிதமான காலி ஔஷதங்கள் தயாரிக்கப்படுபவைகளில் இதுவும் ஒன்று. பற்பல நீடித்த வியாதிகளைப் போக்க வல்லமை உடைய மருந்தாகும்.

முக்கியக் குறிகள்:— எந்த வியாதியிலும் சுருக் சுருக் கென்றும், கொக்கி போட்டு இழுப்பது போன்றும் உள்ள குத்துவலிகள், **அதிகாலை சுமார் 3 மணிக்கு** உபாதைகள் கூடுதலாகுதல், முதுகு வலியுடன் வியர்வையும் பலவீனமும் தோன்றுதல், **கண்களின் மேல் இமைகளில்,** புருவத்திற்கும் இமைகளுக்கும் மத்தியில் நீர் சுரப்புள்ள, பை போன்ற வீக்கங்கள்.

உபயோகம்:— (1) காலையில் முகம் கழுவும் போது மூக்கிலிருந்து இரத்தம் கொட்டுவதற்கு, (அம்மோனியம் கார்ப், ஆர்ணிக்காவைப்போல) உபயோகிக்கலாம்.

(2) வலிகள் உதாரணமாக பிரசவித்த பின்னரும், நுரையீரல் சம்பந்தமான வியாதிகளிலும் ஷை குறிகளை உடைய வலிகள் திடீர் திடீரென்று தோன்றுவதும். அவ் விதமே மறைவதுமாக இருக்கும், சில சமயம் குத்துவலி கள் அசைந்தாலும் அசையாவிட்டாலும், வியாதியுள்ள பக்கமாய் படுத்தாலும் அல்லது அமுக்கினாலும், ஓய்வாய் இருக்கும் சமயங்களிலும் அதிகரிக்கும். (பிரயோனியா

என்ற மருந்திற்கு எதிரிடையாக இக்குறிகள் இருக்கின்றன) என்ற மருந்திற்கு எதிரிடையாக இக்குறிகள் இருக்கின்றன) சுவாச கோசம் என்ற நுரையீரல் வேக்காட்டில் மார்பின் வலது பக்கத்தின் கீழே வலிகள் தோன்றி பின்புறம் முதுகுக் குப்போகும், இக்குறியே இம்மருந்தை உபயோகிக்கத் திறவு கோலாகும். முன்னே சொன்ன குறிகளுடன் கூடிய க்ஷய ரோகத்திற்கும் (T. B. க்கும்) ஆரம்பத்திலும், முற்றிய பிற கும் கொடுக்கலாம்.

(3) கருச்சிதைவு ஏற்பட்ட காரணத்தால் அதிகமான இரத்தம் வெளியேறி அதனல் பலவீனம், வியர்வை, முதுகு வலி ஏற்படுவதற்கு முக்கியமான மருந்தாகும். இச்சமயங் களில் காய்ச்சல் இருந்தால் கண்டிப்பாய் இதைக் கொடுக் கக்கூடாது.

வலதுபக்கத் தலைவலி, கண் பார்வை மங்கலுடன் (கண் முன்னல் கரும்புள்ளிகள் தோன்றி மறைவு) உண்டா கும், ஒற்றைத் தலைவலிக்குக் கொடுக்கலாம்.

(4) மாதவிடாய் போக்கு சரிவர போகாமல் மிகவும் குறைந்தும், உடல் நீர் சுரப்புடன் மேலிமைகள் வீங்கியும் இருப்பதற்கும், மாதவிடாய்க்கு முன்னும், மாத விடாயின் போதும் ஏற்படும் அதிகமான இடுப்பு வலிக்கும் கொடுக்க லாம். (ஏக காலத்தில் சிலருக்கு இடுப்பிலும், வயிற்றிலும், சேர்ந்தே வலிகள் தாங்க முடியாமல் இருக்கலாம்.) சாதா ரணமாக நடு முதுகில் ஏற்படும் குத்தும், வெட்டும், வலி களுக்கும் சிறந்தது,

(5) வயிற்று உப்பிசம்:— அதாவது சிறிது ஆகாரம் உட்கொண்ட உடனே வாயுவாக மாறி அடிவயிறு பெருத் தும், வயிற்றில் வலி ஆரம்பித்து முதுகுப் பக்கம் பரவு மானல் இதைக் கொடுக்கலாம்.

இதர உபயோகங்கள்:—இருதய நோய், நீர் சுரப்பு என்ற மகோதரம், ரத்த சோகை, தொண்டையில் உருண்டையான உணர்ச்சி, மூச்சுத்திணரலுடன் சேர்ந்து வரும் பல வியாதிகளுக்கும் முன் சொன்ன முக்கிய குறிகள் இருந்தால் நன்கு வேலை செய்யும்.

கவனிப்பு:— இம்மருந்தை நாள் ஒன்றுக்கு 2 வேளைகள் காலை, மாலை கொடுக்கலாம், இரண்டொரு தினங்கள் தான் கொடுக்கவேண்டும். அத்துடன் சுரம் இல்லாத நேரங்களில் தான் பிரயோகம் பண்ணவேண்டும்.

48. காலிபைக்ரோமிக்ம் (Kalibichromicum)

இதுவும் காலி ஔஷதங்களில் ஒன்று. மூக்கு, வாய், தொண்டை, நுரையீரல், சுவாசக் குழாய், அன்னபாதை என்ற அலிமெண்டரிகேனல். மூத்திர சம்பந்தமான உறுப்புகள் முதலிய அவயவங்களிலுள்ள மெல்லிய ஜவ்வுகளிலும், சளி ஜவ்வுகளிலும் உண்டாகும் பல நோய்களுக்கும் சிபிலிஸ் சமபந்தமுள்ள நோய்களுக்கும் உபயோகமாகும்.

முக்கியக் குறிகள்:— மூக்கு, தொண்டை இவைகளிலிருந்து வெளியாகும. கோழை. சளி (1) வழவழப்பாயும பிசுக்கென்று ஒட்டுந்தன்மையுடனும், இழுத்தால் கம்பி போன்றும், கயிறுபோன்று நீண்டும் இருத்தல் (2) மூக்குச் சளியானது சிராய் சிராயாகவும், சிறு துணுக்குகளாகவும் மாறி மாறி மூக்கடைத்தலும், வெளியாவதும். (3) சிறு சிறு இடங்களில் மாத்திரம் வலிகள் (அதாவது வலிக்கின்ற பாகத்தில் ஓர் வட்டமான பொட்டு வைத்து மூடிவிடலாம்) அப்படிப்பட்ட சிறு இடத்தில் வலி இருந்தாலும் அது மிகக் கடுமையாயிருப்பதுடன் திடீர் திடீரென்று இடம் மாறும். (4) சர்மத்தில் வட்டமான, ஒழுங்கான விளிம்புகளுடன் (ஓர் மெஷினல் வெட்டி வைத்த மாதிரி) கூடிய குழிப்புண்கள்.

உபயோகம்:— (1) ஜலதோஷத்தின் ஆரம்பத்தில் சளி வெல்லப்பாகு போன்றும், முற்றிய பின் மூக்கிலிருந்து கம்பிபோல நீளமான சளி வெளியாகும்பொழுதும் உபயோகிக்கலாம். அடிக்கடி ஜலதோஷம் பிடிக்கும் நபர்களுக்கும், குழந்தைகளுக்கும் உபயோகிக்கலாம். ஷை குறிகளுடன் வெளியாகும் கழிவுப் பொருள்கள் எந்த வியாதியில் ஏற்பட்டாலும் இதைக் கொடுக்கலாம்,

(2) **டிப்தீரியா** என்ற தொண்டை அடைப்பான் வியாதிக்கும் கொடுக்கலாம். டான்சில் என்ற தொண்டை அழற்சிக்கும் கொடுக்கலாம். உள் நாக்கு நீர்க்கொண்டு (ஓர் சிறிய பலூன் போன்று ஊதி) அதிகமான வீக்கத்துடன் இருப்பதற்கு இந்த மருந்து அவசியம் கொடுக்க வேண்டியதாகும்.

(3) **பீர், சாராயம்** குடித்து அதனால் வயிற்றில் **வட்டமான புண்கள்** ஏற்பட்டு, வாந்தியும், குமட்டலும், (சுத்தமான மஞ்சள் நிறமான தண்ணீர் வாந்தி பண்ணுதல்) குடலில் ஏற்பட்டு, நாள்பட இருக்கும் புண்கள், குன்மம் என்ற வயிற்றுவலி. சாப்பிட்டவுடன் வயிற்றில் கனமான உணர்ச்சியுடன் அடி வயிற்றில் ஏற்படும் வலிகளுக்கு மிகச் சிறந்த மருந்து.

(4) முன் சொன்ன முக்கிய குறிகள் இருக்கும் சில நோய்களுக்கு உதாரணமாக வயிற்றுக் கடுப்பு, சீதபேதி பெண்களின் வெள்ளை ஒழுக்கு, மேக வெட்டை போன்ற வியாதிகளில் பாகு போன்ற போக்கும், மஞ்சள் கரையை ஏற்படுத்தக்கூடியதாயும் இருந்தால் "காலிபைக்ரோமிகம்" நிச்சயம் குணமாக்கும்,

(5) **தலைவலியானது** ஆரம்பிக்கு முன் கண்கள் பார்வை மங்கி, தலைவலி ஏற்பட்டவுடன் கண் மங்கல்

நீங்கி விடுவது முக்கிய குறியாகும். வலியானது தலை முழுவதும் இருக்காமல் ஒரு சிறிய இடத்தில்தான் காணும்.

49. காலின் சோனியா (Collinsonia)

மலச்சிக்கல் என்ற வியாதிக்கு ஒரு சிறந்த மருந்து. பேதி மருந்துகளைச் சாப்பிட்ட போதிலும் மலம் போவதில்லை. பிடிவாதமான மலச்சிக்கல், வழக்கமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மலச்சிக்கல் இவற்றை நிவர்த்திக்க சுமார் 22 தினங்கள் வரை காலை, மாலை கொடுக்கவும்.

உபயோகம்:— (1) மூல நோய்களில், வலி எடுத்து நாள்பட உபத்திரவம் பண்ணினாலும், வலி எடுக்காமல், இரத்தம் மட்டிலும் போகும் ரத்த மூலத்திற்கும், இதைக் கண்டிப்பாய் கொடுக்கவும். மூலநோயின் போதும், மலச் சிக்கலின் போதும், மாதவிடாய் வலியுடன் தோன்றும் பெண்களுக்கும் உபயோகிக்கலாம்.

(2) **மலச்சிக்கல்** மூல உபத்திரவமான வலி. அதே சமயத்தில் மார்பிலும், வலி மாறிமாறித் தோன்றுதல், ஆசனத்தில் (மலப்பையில்) அமுக்கும் உணர்ச்சி சதா இருப்பதுடன், மலம் வெளியாகும்பொழுது வலி எடுக்கும் சிலருக்குகு வாயு உப்பிசம் வயிற்றில் வலி இவைகளுக்கும் உபயோகமாகும். (ஆசனத்தில் அரிப்பு முக்கியமாக இருக்கும்)

(3) **பிரசாரகர்கள்**, பாடகர்கள், சதா குரலை உபயோகித்து அதனால் ஏற்பட்ட இருமலுக்கும் கொடுக்கலாம்.

50. காலோ பில்லம் (Caulophyllum)

இந்த மருந்து பெண்களின் கர்ப்பப்பையின் தசைகளில் வேலை செய்யும், குறைப்பிரஸவம், பிரஸவவலி விட்டு விட்டு வருதல், பொய்யான பிரஸவ வலி முதலிய உபாதை

களுக்கும்; சிறு மூட்டுகளில் ஏற்படும் வாத வலிகளுக்கும், தசை தொடை சம்பந்தமான வலிகளுக்கும் உபயோக மாகும்.

முக்கிய குறிகள்:— அடி வயிற்றில் விட்டு விட்டும் கவ்வி கவ்வி பிடித்து இழுக்கும் வலி, குறுக்கே ஓடிப்பாயும் கடுமையான வலி

உபயோகம்:— (1) பிரஸவ வலி ஏற்பட்டவுடன் காலோபில்லம் கொடுத்துவர, சீக்கிரத்தில் பிரஸவம் ஆகும். சிலருக்கு விட்டு விட்டு வந்தாலும் கொடுக்கலாம்.

(2) **கர்ப்பச் சிதைவு** :— 3வது மாதத்தில் ஏற்படுவ தற்கும், வழக்கமாக, அடிக்கடி (அபார்சன் Abortion) கர்ப்பச்சிதை ஏற்படுபவர்களுக்கு இத்துடன் காலிபாஸ் என்ற மருந்தையும் மாற்றி மாற்றிக் கொடுத்து வந்தால், சிதைவைத் தடுத்து, கர்ப்பத்தைக்காத்து, சுகப்பிரஸவத்தை துரிதப்படுத்தும்.

(3) கை கால்களிலும், விரல்களிலும் உள்ள ருமாடிஸம் என்ற வாத வலிகளுக்கும் கொடுக்கலாம்.

(4) **பெண்கள் பூப்படையும்** தருணத்தில் (முதன் முதலில் மாதவிடாய் ஆகும் காலத்தில்) தமிழ் நாட்டில் புஸ்பவதியாகிவிட்டாள் என்று அழைக்கப்படும் நேரத்தில் சிலருக்கு ஒருவித வலிப்பும், பேய் பிடித்தது போன்ற நிலைமையும், மயக்கமும், இழுவையும் உண்டாகின்றது. இதற்கு ஆங்கிலத்தில் **ஹிஸ்டீரியா** (Hysteria) என்று பெயர். இதற்கும் இம்மாதிரி உள்ள காக்கை வலிப்பு பிமாதி ஏற்படும் பெண்களுக்கும் மிக்க உபயோகமுண்டு.

51. கலோசிந்திஸ் (Colocynthis)

இந்த மருந்து அடி வயிற்று வலிகளுக்கு நிவாரணியாக

வும், அடிக்கடி கோபப்பட்டுக்கொண்டிருக்கும் நபாகளுக்கும், கோபத்தினால் ஏற்பட்ட கோளாருகளை நீக்கவும் வல்லமை உடையது.

முக்கியகுறிகள்:— வயிற்றுவலி தாங்க முடியாது. **கடுமையாய், இருக்கிப் பிடிக்கும் வலி,** நரம்பு சம்பந்தமாக ஏற்படும் வலி, அடிவயிற்றில் வலி, அதனால் தன் உடம்பை **முன்பக்கமாய் வளைத்துக்கொள்வதாலும், வலியுள்ளபாகத்தை தலையணை, கெட்டியான** வஸ்துவைக் கொண்டு கையினால் இறுக அழுக்கிக்கொள்வதாலும் வலி சற்று குறையும். சுகமாகத் தோன்றும்.

உபயோகம்:— (1) வயிற்று வலிக்கும், கண்களில் ஏற்படும் வலிகளுக்கும், வலியுள்ள பாகத்தை அமுக்கிக் **கொள்வதினால் சுகமாகத் தோன்றினால்** இம் மருந்தைக் கொடுக்கலாம். இக் குறியுடன் கூடிய நரம்பு சம்பந்தமான வலி உதாரணமாக முகத்தின் இடது பாகத்தில் விக்கமும், கிழிக்கும் தெறிக்கும் வலியாகஇருப்பதற்கும் மிக்கஉபயோகமுண்டு. (இந்த முகவலிகளுக்கு **"மெக்னிஷியாபாஸ்"** என்ற மருந்தும் கொடுக்கலாம்) இந்த மாதிரி வலியுடன் கூடிய **வயிற்றுப் போக்கு வியாதிக்கும், சீதபேதி** என்ற **வயிற்றுக் கடுப்பிற்கும்** கண்டிப்பாய்க் கொடுக்கவும். சில சமயம் லேசான ஆகாரமோ, தண்ணீரோ உட்கொண்டவுடன் வயிற்றுளைச்சல், வயிற்றில் வலி, வாந்தி முதலியன ஏற்படும். அத்துடன் **கோபமும் கட்டில் அடங்காது.**

(2) பெண்களுக்கு, கர்ப்பப்பை வலிகளில், ஷை குறிகளுடன் அமுக்கிக்கொண்டால் வலி குறைவது. இதற்கும் காலோசிந்திஸ் கொடுக்கலாம்.

(3) இடுப்பிலிருந்து பின்பக்கமாக குதியங்கால் வரை

ஏற்படும் கடுமையான வலி அதாவது துடை நரம்பு வாதம் (Sciatica) என்று சொல்லும்படியான நரம்பு சம்பந்தமான வியாதியில் காலோசிந்திஸ் கொடுக்கவும். வலியானது சுண்டிச் சுண்டி இழுக்கும். கடுமையான தன்மையுடன் இருக்கும்.

கவனிப்பு:—(A) கோபத்தினுலும், மனக்கசப்பினுலும் ஏற்படும் கோளாருகளுக்கு 'சாமோமில்லா' என்ற மருந்தும் உபயோகப்படுகின்றது. வயிற்று வலியில் 'சாமோமில்லா' கொடுக்க வேண்டுமானுல், வியாதியஸ்தர் வலி வந்த சமயம் தரையில் ஒரேயடியாக புரண்டு, உருளுவார்கள். 'காலோசிந்த்' மாதிரி உடம்பை வளைக்க மாட்டார்கள்.

(B) கோபத்தினுல் வியாதிகள் அதிகரிக்கும். உடலை இரண்டாக வளைத்தல், வலியிள்ள பாகத்தை அமுக்கிக் கொள்ளுதல், உஷ்ண ஒத்தடம் கொடுத்தல் இவைகளினுல் உபாதைகள் குறையும்.

(C) ரத்த சீதபேதி, சீதபேதி, வயிற்றுப் போக்கு இவைகள் பெரும்பாலும் வெயில் காலத்தில்தான் ஏற்படுகின்றது. ரத்த சீதபேதிக்கு "காலோசிந்திஸ், 'மெர்க்கூரியஸ் கரோஸிவஸ்' இந்த இரண்டு மருந்துகளையும் மாற்றி மாற்றி கொடுக்க முக்கால்வாசி கேஸ்கள் குணமாகும்.

N. B:— இடுப்பு வலி விசேஷமாக வலது இடுப்பிலிருக்கும்.

52 காஸ்டிகம் (Causticum)

இந்த மருந்து மூன்று விதமான தோஷங்களாகிய ஸோரோ, ஸிபிலிஸ், சைகோஸிஸ் இவைகளை நீக்கக்கூடிய சக்தி பொருந்தியதாக இருக்கின்றது. மெடுல்லா ஆப்லாங்கேட்டா என்ற முகுளம் போன்ற சிறு மூளையின் அடிப்பாகத்திலும், மூச்சுக்குழாய்களிலும், குரல்வளை(சப்தப்பெட்டி) சம்பந்தமான நரம்புகளிலும் ஆழ்ந்து வேலை செய்கின்றது.

முக்ய குறிகள்:— பாரிசவாதம், பாரிசவாயுடன் கூடிய பலவீனம், தொண்டை, நாக்கு, கண் இமைகள், முகம், கால், கைகள், போன்ற தனித்தனி உறுப்புகளில் பாரிச வாயுவினால் செயலற்று, ஏதாவது ஒரு உறுப்பு உணர்ச்சி அற்றுப்போகும்படியான நிலையில் நன்கு குணமளிக்கின்றது. இவ் வியாதிகள் சிறுகச்சிறுக அதிகரிக்கும்.

உபயோகம்:— (1) சொட்டுச் சொட்டாக மூத்திரம் கழிதல், முதல் தூக்கத்தில் படுக்கையிலேயே சிறுநீரை விட்டுவிடுதல், மூத்திரத்தை அடக்கமுடியாமை, இவ்வுபாதிகளை நீக்க 30 வீரியத்தில் கொடுக்கவும். ஒன்பது அல்லது நிறைமாத கெர்ப்பஸ்திரிகளுக்கு மூத்திரம் சரியாகப் பிரியாமல் தடைபட்டுப் போகும் நேரத்தில் காஸ்டிகத்தை 30 வீரியத்தில் கொடுத்தால், மூத்திரத்தை வெளியேற்றி சுகத்தைக் கொடுக்கும். இருமினாலும், தும்மினாலும் மூத்திரம் தானாகவே வெளியாகுதல் இதற்கு முக்கியமான மருந்தே. (2) ருமாடிசம் என்ற கீல்வாதம், வாய்வு சம்பந்தமான நரம்புவலிகளுக்கும், மூட்டுகளில் (முழங்கை, முழங்கால்) பிடிப்பு வலி, அல்லது கிழிக்கும் வலியுடன் பலவீனம் இருக்கும். மூட்டுகளை அசைக்க முடியாது. கரடுதட்டி பெருத்து விடுதலுக்கும் இந்த வியாதிகள் எல்லாம், நாள்பட, சிறுகச் சிறுக அதிகமாகிக்கொண்டே வரும். இதற்கு 200 வீரியத்தில் கொடுக்கவும். முக்கியமாக பலவீனத்தினால் வலதுபக்கத்தில் ஏற்படும் பாரிச வாய்வுகளுக்கும், தனித்த ஒருசில அவயவங்கள் மட்டிலும் பாதிக்கப்படும் பக்ஷவாத நோய்க்கும் மிகச் சிறந்த மருந்து. இம் மாதிரி நாள்பட்டிருக்கும் உபாதைகளுக்கு காஸ்டிகத்துடன் சலபர் 200யும் இடை இடையே கொடுக்கவும். (3) சிலருக்கு பெருங்குடலில் பாரிச வாயு நோயினால் சக்தி இழந்து, ஏற்பட்ட மலச்சிக்கலில், அவர்கள் நின்றால்தான் மலம் வெளியாகும்;

உட்கார்ந்து வெளிக்கு (மலம்) போவது கிடையாது. இக்குறியிருந்தால் காஸ்டிகம் குணமளிக்கும்.

உட்கார்ந்தால் மலம் மூத்திரம் போகாமல் நின்றபடியே மலம் போவது முக்கிய குறியாகும்.

(4) வயிற்றுக் கோளாறுகளில் பசி அதிகமாகத் தானிருக்கும், ஆனல் **ஆகாரத்தைப் பார்த்தவுடன் பசி போய்விடுதல்:** மேலும் வயிற்றுனுள் **சுண்ணும்பை வேக வைப்பது போன்ற** எரிச்சல் உணர்ச்சியுடன் கூடிய வயிற்றுப்பிசம், மற்ற வயிற்று வியாதிகளுக்குக் கண்டிட்டாய் காஸ்டிகத்தை 200 வீரியத்தில் கொடுக்கலாம்.

(5) **சாதுவாகவும்,** அப்பாவியாகவும் இருப்பவர்களுக்கு மனவருத்தம், துக்கம், கவலை போன்ற காரணங்களினுல், நாளா சரியாக ஏற்பட்ட பைத்திய வியாதிக்கு காஸ்டிகம் உபயோகமாகும்.

(6) **சர்மத்தில்** ஏற்படும் கடினமான பாலுண்ணி போன்ற வளர்ச்சிகளுக்கும், உடலில் ஏற்படும் அரிப்புகளுக்கும் நல்ல மருந்து.

கவனிப்பு :- எந்த வியாதியிலும் குறிப்பாக இருமல், வயிற்று கோளாறு இவைகளில் வியாதியஸ்தர் குளிர்ச்சியான தண்ணீரைப் பருகினுல் நோய் சமனப்படும். மற்ற நோய்களில் பாதிக்கப்பட்ட பாகங்களில் எரிச்சல் புண் உள்ள உணர்ச்சி இருக்கும்.

எச்சரிக்கை :- காஸ்டிகத்திற்கு முன்னும், பின்னும் பாஸ்பரஸ் கொடுக்கக்கூடாது. பகல் காலத்தில் மட்டிலும் பாஸ்பரஸ் போக்கு அதிகப்பட்டிருக்கும் பெண்களுக்கு மாதவிடாய் போக்கு அதிகப்பட்டிருக்கும் பெண்களுக்கு நிதானமாய் கொடுக்கவும்.

N. B. தீராது என்று கைவிடப்பட்ட பல நீடித்த வியாதிகளை தீர்க்க வல்லமையுடைய மருந்து.

53. கிராபைடிஸ்

(Craphites)

தமிழ் வைத்தியர்கள் கருவங்கம் என்று அழைக்கும் படியான காரீயமே, நம் ஹோமியோ முறையில் சிகிச்சைக்கு மருந்தாக உபயோகிக்கப்படுகின்றது.

மனக்குறிகள் :- நாம் சொல்லும் எதிலும் உறுதி மனப்பான்மை இல்லாதிருத்தல், பயங்காளித்தனம் இவைகளுடன் ஏதாவது வேலை செய்து கொண்டிருக்கும் போதும், சாதாரணமாக சும்மாயிருக்கும்போதும் தன் கைகள் அல்லது **கால்களை** ஆட்டிக் கொண்டேயிருக்கும் படியாவும். **மற்றகுறிகள் சர்ம வியாதியில் பிசுபிசுப்பான தேனை போன்ற ஒட்டும் தன்மையான நீர் வெளிக்கிளம்பும்.** வியாதியஸ்தரின் நகங்கள் எல்லாம் விகாரமுற்று சொத்தையாகவும், தடித்து கோணலாகவும், வளருதல்; வெடித்திருக்கும் நகங்கள்.

உபயோகம் :- (1) சதை பெருத்து, பருத்த சரீரமுடைய பெண்கள், மலச்சிக்கல் கஷ்டத்துடன், தாமதித்து வெளியாகும் மாதவிடாய் கோளாறுகளுக்கும், (மாதவிடாய் மிகக் குறைந்தும்) சரீர அசதிக்கும் உபயோகிக்கலாம். பெண்களின் வெள்ளைப் போக்கு எனப்படும் வெட்டை **நீர் குபீர் குபீரென்றும்,** அதிகமாகவும், பகல், இரவு எந்நேரமும் **ஒழுகிக்** கொண்டேயிருந்தால் **கிராபைடிஸ்** தான் கொடுக்க வேண்டும். இந்த ஒழுக்கு விசேஷமாக, மாதவிடாய்க்கு முன்னும், பின்னும் இருக்கும்; அத்துடன் அதுபட்ட இடங்களில் **இரணமும், அறிப்பு, எரிச்சலும்** ஏற்படும்.

(2) **சர்ம வியாதிக்கு** கரப்பான், படை, பத்து இவைகள் உதாரணமாக, காதுகளின் சந்து, துடை சந்து

புறங்கை, பாதம், விரல்கள் முழங்கால் முதலிய இடங்களில் பிசின் போன்ற பிசுபிசுப்பான நீர் கசிந்து கொண்டேயிருந்தால் கண்டிப்பாய் கொடுக்கலாம். மேலும் அந்த பாகங்கள் கறுப்பு நிறமுடையதாக மாறிவிடும். தன்மையுடன், அறிப்பு சொறிந்தால் நீர் கசிதல் முக்கியக் குறிகளாகும்.

(3) பெண்களின் கருப்பையில் உண்டாகும் புற்று நோய், இரணம், வலிகளுக்கும், ஸ்தனங்கள் கல்போல் கடினமாகி விடுதல் போன்ற நோய்களுக்கு கொடுக்கலாம்.

(4) **மலச்சிக்கல்** வியாதியில், மலம் காய்ந்து பெரிய உருண்டையாகவும், முடிச்சு முடிச்சாகவும் கோழை கலந்தும் இருக்கும். மலத்தை வெளியேற்ற அதிகமாய் முக்க வேண்டிய நிலையில் கிராபைடிஸ் கொடுத்தால் நன்கு வேலை செய்யும். இம்மாதிரி வியாதிகளில், வியாதியஸ்தர்களுக்கு மிக முக்கியமான அதிசயக் குறி ஏற்படுகின்றது. அதாவது வண்டியில் பிரயாணம் செய்யும் போதும், இரைச்சல் சத்தம் நிறைந்த இடங்களில் போகும் பொழுதும் காது நன்றாகக் கேட்கும். பெருத்த மலம் கஷ்டத்துடன் வெளியேற்றப்பட்ட பின் கொஞ்சம் சீதமும் வெளியாகலாம். அல்லது அபானத்தில் வெடிப்பும், மலம் கழிந்தவுடன் எரிச்சலும் காணப்படலாம்.

கவனிப்பு :- முன்சொன்ன குறிகளுடன் தோன்றும் நீடித்த வியாதிகளுக்கு 30, 200 வீரியங்களிலும், சாதாரணமாக தோன்றி மறையும் அக்யூட் வியாதிகளுக்கு 6 வீரியத்திலும் கொடுக்கலாம்.

கிராபைட்ஸ் கொடுக்கப்பட வேண்டியவர்கள் பெரும்பாலும், மலச்சிக்கலுடனும், சரீரம் பருத்து ஊளைச்சதைப் பிடித்தும், குளிர்கின்ற உணர்ச்சியுடனும், சற்று குளிர் காற்றுப்பட்டவுடனே சளி பிடிக்கும் திரேகவாகுடன் இருப்பார்கள்.

54. குப்ரம் மெட்டாலிக்கம்

(Cuprum Metallicum)

இது செம்பு என்றழைக்கப்படும் தாமிரம் என்ற உலோகப் பொருளிலிருந்து வீரியப்படுத்தி கீழ்கண்ட நோய்களுக்கு உபயோகப்படுத்துகின்றோம்.

மூளை வியாதிகளுக்கும், கக்குவான் என்ற இருமலுக்கும், காலரா போன்ற வியாதிகள் இவைகளில், கெண்டையேறுதல் தசை சுருங்குதல் வலிப்புகள் பிரதானக் குறிகளாக இருக்கும்.

மனக்குறி.- பிறரைத் தன்புறுத்தவும், கடிக்கவும் ஆவல். ஜன்னி பிதற்றல் இவைகளில் முகம் நீலநிறமாகவும், மூத்திரம் தடைப்பட்டும் இருக்கும்.

உபயோகம்.- (1) காலரா வியாதியில் கெண்டையேறுதல், அதிகமாகக் காணப்பட்டால் கொடுக்கலாம். (மற்ற மருந்துகளான, காம்பர், விராட்ரம் ஆல்பம் ஞாபகத்திலிருக்க வேண்டும்.

(2) கக்குவான் என்று சொல்லாத இருமல் வியாதியால் அடுத்தடுத்து இருமி அவஸ்தைப்படும் குழந்தைகள், விறைத்தும், சுவாசம் தடைப்பட்டும் வலிப்புகளும் வரக்கூடிய நிலையிலிருந்தால் கண்டிப்பாய் 'குப்ரம்' கொடுக்க வேண்டும். இருமலின், களைப்பு, ஆயாசம் முக்கியமாக இருக்கும். பச்சைத் தண்ணீர் சாப்பிட்டால் இருமல் குறையும் (தாகம் இருக்கும்.) சாதாரண வறண்ட இருமலுக்கும் அவ்விதமே இருக்கும்.

(3) **காக்கை வலிப்புக்கும்** கொடுக்க கூடிய மருந்து. மற்ற வலிப்பு நோய்கள் நீடித்திருந்தாலும் இதைக் கொடுக்

கலாம். (அதாவது பெண்களின் மாதாந்திர தீட்டுவலியுடன் ஏற்பட்டு வீக்நாட்களில் வலிப்பு, கெண்டையேறுதல்) (பிரசவித்த பிறகு உண்டாகும் வலிப்பு, கெண்டையேறுதல்) சாதாரணமாக முன்பாக வரும். அதிகரிக்கும். திடீரென்று திரேகம் குளிர்ந்தும், இவைகளுடன் கூடிய மரணத் தருவாயில் இதைக் கொடுக்க தேவையேற்படும்.

(4) கடுமையான வயிற்றுவலியில் நோயாளியின் வயிறு உள்பக்கமாக இழுத்துக் கொண்டு பள்ளமாகத் தெரிந்தால் இம்மருந்தைக் கொடுக்கலாம்.

கவனிப்பு:-(1) எந்த வியாதியிலும் முதன் முதலில் கை விரல்களும், கால்விரல்களும் மாத்திரம் இழுக்க ஆரம்பித்து, பின்னர்தான் உடல் பூராவும் இழுவை பரவும்.

(2) இழுப்பு, இசிவு, வலிப்பு நோய்களில் கண்கள் மூடப்பட்டிருந்தால், கண் **விழிகள் தானாகவே சுழன்று** கொண்டிருக்கும். அத்துடன் அடிக்கடி தன் நாக்கை (பாம்பு போன்று) வெளியே நீட்டுவதும், உள்ளே இழுத்துக் கொள்வதுமாக இருக்கும்.

(3) எந்த வியாதியும் (தலைவலி உள்பட) **மிக** உக்ரமாயும், கடுமையான வலிகளுடன் தான் ஏற்படும்.

55. குர்ச்சி

(Kurchi)

இது அடிவயிறு, மலப்பை, மலக்குடல் போன்ற உறுப்புகளின் வியாதிகளுக்கு உபயோகமாகின்றது. தாய் திராவகமாகத்தான் உபயோகிக்க வேண்டும்.

உதாரணம் :- அஜீர்ணம், வயிற்றுவலி, **வயிற்றோட்டம் சீதபேதி,** ரத்தசீத பேதி, இரத்தம் கொட்டும் **மூலவியாதி,** **கர்ப்பப்பை**யின் இரத்தப்பெருக்கு, ரத்த வாந்தி போன்ற **பல வியாதி**களுக்குக் கொடுக்கலாம். சிலருக்கு மலம் சாதாரணமாக கழியும்போது ஏற்படும் ஆசனவலி, வயிற்றில் வலியுடன் முக்கல், இதற்கும் கொடுக்கலாம்.

பித்தநீரை குறைக்க [illegible] மருந்தாகவும், நீடித்த விட்டுவிட்டு வரும் முறைக் [illegible] உபயோகப்படும் மருந்தாகவும். [illegible] இதை [illegible] கொடுத்துவர **சீக்கிரத்தில்** நல்ல பலன் கிட்டும்.

56 கொரால்லியம் ரூப்ரம்

(Corallium Rubrum)

கிரந்தி சம்பந்தமான, ஆண், பெண் குறியின் நுனி பாகத்தில், வெளியே, ஏற்பட்ட மேக இரணங்களுக்கும், அந்த பாகத்தில் தூர்ச்சலை [illegible] போக்குவதற்கும் 6 x முதல் 30 வீரியம் வரையில் கொடுக்கலாம்.

முக்கிய உபயோகம் :- [illegible] இருமல்களில் இடைவிடாமலும், இருமல் மிக வேகமாயும், கடுமையாயும் இருக்கும் இருமல் வியாதிகளுக்கு முதன்மையான மருந்து. இம்மாதிரியான [illegible] உபயோகமாகும்.

57. கோபைவா

(Copaiva)

(1) முக்கியமாக, வெள்ளை, வெட்டை (Gonorrhoea) என்ற கடுமையான வியாதியின் ஆரம்பக் கட்டத்திலும் உப

யோகப்படும் மருந்தாகும். (சிறுநீர் [illegible] [illegible] பெருகிருக்கும் சிறுநீர் கழியும் உணர்ச்சி அடிக்கடி ஏற்படும்.)

(2) சாதாரணமாக மூத்திரப் பை வியாதிகளில் [illegible] வெளிப்போக்கும் காலம் அல்லது கோழை [illegible] சேர்ந்தும், [illegible] சேர்ந்தும், அல்லது சீழ் போன்ற [illegible] பொறுக்க முடியாத நாற்றத்துடனும் (அருவருக்கத்தக்கதாயும், சகிக்கமுடியாத வாடையுடனும்) இருந்தால் கண்டிப்பாய் இம்மருந்துதான் கொடுக்க வேண்டும்.

58. கோல்சிகம்

(Colchicum)

வாய்வு சம்பந்தமான வாதவலிகள், ரூமாடிஸம் என்ற கீல்வாயு, மூட்டுகளில் வீக்கத்துடன் கூடியவலி, இவைகளுக்கு முக்கியமாக உபயோகப்படும் மருந்து. இருதய வலிக்கும், சீரண கோளாறுகளுக்கும் உபயோகமுண்டு.

முக்கியக் குறிகள் :- வியாதியஸ்தருக்கு சமையல் செய்யும் பொருள்களின் வாசனைகூட கடுமையான குமட்டலை ஏற்படுத்துவதே பிரதான குறியாகும். இக்குறி [illegible] வைத்து [illegible] மாக, [illegible] வியாதிகளுக்கும் இந்த மருந்தினைத் [illegible] செய்து குணமளித்து விடலாம். [illegible] ஓசை, ஸ்பரிசம், வாசனை போன்ற வெளி விஷயங்களில் உணர்ச்சி அதிகமாய் ஏற்படுதல் [illegible] முன்கோபம்.

உபயோகம் :- (1) மூட்டுகளில் ஏற்படும் கீல்வாயு வலி (Rheumatism) வாய்வு வாதவலிகள், இடம்விட்டுக்க

யிருந்து [illegible] க்கும் [illegible] யும் (இருக்கும்.) ஒரு இடத்தில் சிலையாக வலிகள் [illegible] ஒரு இடங்களுக்கு மாறிக் கொண்டேயிருக்கும். [illegible] அதிகரிக்கும்

(2) [illegible] வரும் [illegible] [illegible], [illegible] தலைவலியானது [illegible] க்கம் செல் [illegible] டி சகல வலிகளும், அசைந்தாலும், தொட்டாலும் அதிகமாகும்.

(3) **வயிற்றுக் கோளாறுகள்** :- (a) சாப்பாட்டில் அதிக விருப்பம். ஆனால் சாப்பாட்டின் [illegible] வுடன் குமட்டலும், ஒக்காளமும் [illegible] டுவிடும்.

(b) பானைபோன்று [illegible] (காற்[illegible]ம், [illegible] ட்பிசமும் அடி வயிற்றில் அதிகமாகி [illegible] அடி வயிறு வெடித்துவிடும்போல் தோன்றும்.)

(c) **வயிற்றுப்போக்கு**, வயிற்றோட்டம் இவை கள் இரவில் மாத்திரம் அதிகமாக [illegible] (இது முக்கியக் குறியாகும்).

(d) மார்கழி, தை மாதங்களில் [illegible] வயிற்று கடுப்புக்கும் **பசியாமை**, அக்னி மந்தம், போன்ற அஜீரண சம்பந்தமான வியாதியானது நீடித்தாலும், வயிற்றில் கடுமையான ஜில்லென்ற குளிரும் உணர்ச்சி அல்லது எரிச்சல் உணர்ச்சி தோன்றும் இவ்விரு உணர்ச்சிகளும், ஒன்றுக் கொன்று [illegible] கரைந்து [illegible] போய் விடும். இந்நடன் வயிறு [illegible] காணப்பட்டால் கோல்சிகம் [illegible] மருந்தாகும்.

(4) **இருதய சம்பந்தமான வலிகள்**, நீர்சுரப்பு, வீக்கம், இருதயத் துடிப்பு சரிவரக் கேளாமை, நாடி மெதுவாக நடத்தல் முதலிய உபாதைகளுக்கும் சிறந்த மருந்தாகும்.

59. சல்பர்

(Sulphur)

இது [illegible] மாக நமது [illegible] கிடைக்கக்கூடிய செல்லிக்காய் கந்தகம் என்ற [illegible] லிருந்து [illegible] படுத்திய மருந்தாகும்.

உபயோகம் :- மூலம், ம[illegible], [illegible] வயிற்றுப்போக்கு: சொறி சிரங்கு, [illegible] [illegible] படை போன்ற தோல் வியாதிகளுக்கும் அதிகமாக சிற [illegible] கோர் [illegible] கட்டிகள், [illegible] வரும் [illegible] இவைகளுக்கும், மற்ற [illegible] வியாதிகளில் கொடுக்கும் மருந்துகள் வேலை செய்யா [illegible] டித்து [illegible] வைப்பதற்கு முக்கியமாய் கொடுக்கக் கூடிய [illegible] மருந்தாகும். இது சரீரத்திலுள்ள சகல உறுப்புகளிலும் வியாபித்து வேலைசெய்யக்கூடிய மருந்து.

முக்கியக் குறிகள் :- (1) [illegible] சரீரம் மெலிந்தும், ஒல்லியாகவும், [illegible] யும் (அதாவது உட்கார்ந்திருக்கும்போதும், நடக்கும்போதும் [illegible] போன்ற [illegible] இருப்பார்கள்.)

(2) ஆயாசம், அழுக்குப் [illegible] ற்றம் [illegible] தோற்றத்தை உடையவர்கள்.

(3) காலையில் சுமார் 11 ம[illegible] வயிறு [illegible] அமுங்குவது போன்ற உணர்ச்சி.

(4) [illegible] நித்திரையும், சீக்கிரத்தில் விழிக்கக்கூடிய தன்மை உடையவர்கள்.

(5) விசேஷமாக தலை, உ[illegible] கை, உள்ளங்கால் பாதங்களில் எரிச்சல்.

(6) [illegible] குடிப்பான், ஆனால் ஆகாரம் மிகவும் கொஞ்சமாக சாப்பிடுவான்.

(7) அடிக்கடி [illegible] வயிற்றுப்போக்கு ஏற்பட்டு படுக்கையை விட்டு [illegible], எழுந்திருக்காமலும் மலம் கழிக்க [illegible].

(8) [illegible] நடுப்பகலிலும் [illegible] அதிகமாதல்.

(9) மந்தமாக அதிகப்போக்கு, [illegible] பெற்றவர். தன்னை [illegible] அதிகக் கவலைப்படுதல்.

(10) நாட்பட்ட வியாதிகளில் தன் சரீரத்தின் அவஸ்தைகளை [illegible] முணுமுணுத்துக் கொண்டிருப்பான்.

(11) குளிக்கவும், தன்னை சுத்தமாக்கிக் கொள்ளவும் விரும்பாதவர்கள்.

(12) குளிக்கும் [illegible] தவறாமல் [illegible] அதிகரித்தல் அடிக்கடி [illegible] சரீரம் கெட்ட நாற்றமடித்தல்.

(13) கண், [illegible], மலத்துவாரம் இவைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு வஸ்துக்கள் எரிச்சலும், சொறசொறப்பும் உண்டாக்கக் கூடியதாயிருத்தல்.

(14) [illegible] பூச்சி [illegible] குழந்தைகளுக்கும்; இனிப்பு, மது [illegible] என்ற சாராயம் கலந்த பானங்களை அருந்த [illegible] அதனால் ஏற்படும் கோளாறுகளுக்கும் கொடுக்கலாம்.

(15) அதிக [illegible] தேக்கத்தினால் [illegible] காது, கண், மலத்துவாரம், யோனி முதலிய பாகங்கள் இரத்தம் [illegible] போன்று அதிக ரத்தச் சிவப்பாக இருக்கும்

[illegible]களுக்கும், சர்ம [illegible] மேல் பூச்சு மருந்துகளைப் போட்டு [illegible] அமுக்கப்பட்டதால் [illegible] சகல கோளாறுகளையும் வெளிப்படுத்திக் குணத்தை உண்டாக்கும்.

கவனிப்பு :- மேலே குறிப்பிட்ட குறிகளைக் [illegible] மாகக் கவனித்து அக்குறிகளின் தன்மையை [illegible] வியாதியஸ்தர்களுக்கு **'சல்பர்'** கொடுக்க வேண்டும். மற்ற மருந்துகளின் வேலையை துரிதப்படுத்துவதற்கும் 'சல்பரை' இடையிடையே கொடுத்துவர வேண்டும். 'அக்கோனைட்' என்ற மருந்து கொடுக்கும்போது 'சல்பரை' ஒரு டோஸ் கொடுத்தால் அவ்வியாதி முழுவதும் [illegible] விடும்.

எச்சரிக்கை :- இரவில் தூக்கம் இல்லாதவர்களுக்கு சல்பரைக் கொடுத்தால் தூக்கம் வரும். ஆனால் மற்றவர்களுக்கு கொடுத்தால் தூக்கம் வராது.

60. சாமோமில்லா

(Chamomilla)

இந்த மருந்து மனக்குறிகளை மட்டுமே முக்கிய ஆதாரமாய் கொண்டு, தேர்ந்தெடுத்து கொடுக்கப்படுகின்றது. பெண்களுக்கும், கைக்குழந்தைகளுக்கும், பாலர்களுக்கும் ஏற்படும் பல கோளாறுகளுக்கு சாமோமில்லா நல்ல ஔஷதம்.

மனக்குறிகள் :- (1) வியாதி வந்த சமயம் வியாதியின் உபத்திரவத்தினால், அதைத் தாங்கமுடியாத சரீரவாகை உடையவர்களுக்கு மனம் மாற்றம் ஏற்பட்டு, **கோபமும், சிடு மூஞ்சித்தனமும்** உண்டாகும். அதனால் நண்பர், பெரியவர், உறவினர் என்றதெல்லாம் மறந்து, மரியாதைக்

குறைவாகவும், இழிவாகவும் பேசுவார். முன்கோபம், ஆத்திரம், சிடுசிடுப்பு இத்தியாதி மனக்குறிகள், (உதாரண மாக யாரேனும், கேள்விகள் கேட்டாலும், உற்றுப் பார்த் தாலும் வியாதியஸ்தருக்குப் பிடிக்காது) ஏற்பட்டுவிடு கின்றன. முகத்தில் ஒரு கன்னம் சிவந்தும் சூடாகவும், மறு கன்னம் வெளுத்தும், சில்லென்றும் இருக்கும்.

(2) இதேமாதிரி குழந்தைகளுக்கு தவிட்டாக, பல் முளைக்கும்போது ஏற்படும் கோளாறுகளில், (**வயிற்றுவலி**, வயிற்றோட்டம், காய்ச்சல், இருமல், ஜலதோஷம்) போன்ற வியாதிகளில், அளவு மீறிய கோபமும்; சிடுசிடுப்புடனும், இருக்கும். பல விளையாட்டுப் பொருள்களை கேட்டு அழும். கொடுத்தால் தூக்கி எறிந்துவிடும். அப்பேர்பட்ட குழந் தைகளை சதா தூக்கிக் கொண்டிருந்தால் தான் சமாதான மாய் அழாமல் இருக்கும் குழந்தைகளுக்குப் பல் முளைக் கும்போது ஏற்படும் வயிற்றோட்டம், **பச்சை நிறமாயும்,** (அழுகிய முட்டை போன்ற நாற்றம்) துர்வாடையுடனும் இருக்கும்.

உபயோகம் :- (1) கீல்வாயுவலி, நரம்புவலி தசைவலி இவைகளினால், தாங்க முடியாமல் ஷெ மனக்குறிகளுடன், சதா நடந்துகொண்டே யிருப்பார்கள். பெண்களுக்கு பிரசவவலி இடுப்பில் ஆரம்பித்து துடைகளின் உள் பக்கத் தில் பரவும். யோனிவாய் விரைப்பாயிருக்கும். ஷெ மனக் குறி பிரதானமாயிருக்க வேண்டும்.

(2) வயிற்றுவலி தாங்க முடியாமல் கோபத்துடன் சிலர் தரையில் புரளுவார்கள்.

(3) காரணம் தெரியாமல் கர்ப்பப்பையில் வலி ஏற் படுகின்றது. அதாவது சில தாய்மார்களுக்குத் தன் குழந் தைக்கு பால் கொடுக்கும் ஒவ்வொரு தடவையும் வலி ஏற்பட்டு, மிக்க அவஸ்தையும், அடிவயிற்றைப் பிசைவது

போன்றும் காணப்படுகின்றது. இந்த மாயவலிகளுக்கும் சாமோமில்லா கொடுத்தால் வலி நின்றுவிடுகின்றது.

கவனிப்பு :- (a) வலியுள்ள பாகத்தில் சர்மம் உஷ்ண மாயும், சிறிது உஷ்ணமான வியர்வையுடனும், காணலாம். அல்லது மரமரத்த உணர்ச்சியுடன் வலி ஏற்படலாம்.

(b) கடுமையான சுரம், (காய்ச்சல்) அடிக்கும் போது, **ஒரு கன்னம் சிவந்து சூடாகவும் மறுகன்னம் வெளுத்து சில்லென்றும்** இருக்கும். அத்துடன் கண் பாப்பா என்ற (Pupil) கண்மணி விரிந்தும், நிலைக்குத்திய பார்வையும் ஜன்னியும் இருக்குமானால் 'சாமோமில்லா' விற்குப்பின் பெல்லடோனா கொடுக்கவேண்டும்.

(c) எதிலும் அளவுக்கு மிஞ்சிய உணர்ச்சி களுடன் இருப்பதால் இரவில் உள்ளங்காலில் சாதாரண எரிச்சல் ஏற்பட்டு தன் கால்களை, படுக்கைக்கு வெளியே நீட்டி தரையில் ஊன்றிக் கொள்வர்.

N. B. இந்த மருந்தின் வியாதியஸ்தருக்கு சாந்தம் அமைதி என்பதே ஏற்படாது.

61. சின்னினம் ஆர்ஸனிக்கோசம்

(Chininum Arsenicosum)

இது ஆர்சனிக்கம், சிங்கோனா என்ற இரண்டு மருந்து களையும் கூட்டுச் சேர்த்துச் செய்த மருந்தாகும். ஆகவே இந்த இரண்டு மருந்துகளின் குறிகளும் தோன்றும். முறை சுரம், பிறகு சகல விதமான பலக் குறைவிற்கும் நாள்பட்ட இடுப்பின் பலம் குன்றி ஏற்படும் வலிகளுக்கும் உபயோகப்படுத்தலாம்.

முக்கியக் குறிகள் :- சோர்வும், பலவீனமும், இருதயம் இடுப்பு போன்ற பாகங்களில் எரிச்சலுள்ள வலிகள்; சுரம் முறை வைத்துத் தோன்றுதல், கை கால்கள், முழங்கால் முதலிய பனிக்கட்டி போல் சில்லென்று இருக்கும்

62. சின்னினம் சல்ப்யூரிகம்

(Chininum Sulphuricum) Sulphate of Quinine

இது கொய்னாவிலிருந்து தயாரிக்கப்படும் மருந்து. மலேரியா என்ற குளிர் முறை சுரத்திற்கு நல்ல மருந்தாகும். குறிப்பிட்ட காலத்தில் தவறாமல் பகல் 3 மணிக்கு வரும் குளிர் காய்ச்சல், நடு முதுகில் மார்புறைக்குப் பின்பக்கம் முள் எலும்புகளில் குளிர், அதிகமான வலி உணர்ச்சியுடன் தோன்றும். சுரத்தின்போது தாகமும், வியர்வையும், மிகுந்த களைப்பும் ஏற்படுவது தான் முக்கியக் குறிகளாகும். மேலும் மேற்படி நோயுடையவர்களின் நாக்கு அனேகமாய் **சுத்தமாகவே** இருக்கும்.

மேற்படி சுரத்தினால் ஏற்படும் **கல்லீரல், மண்ணீரல் வீக்கம், வலிகளுக்கும்** இதைக் கொடுக்கலாம்.

63. செலிடோனியம்

(Chelidonium)

சாதாரணமாக ஈரல் வியாதிகளுக்கே உபயோகப்படுகின்றது என்றாலும், கல்லீரல் சம்பந்தமான நீடித்த வியாதிகளுக்கும் உபயோகமாகின்றது. இது ஒரு பித்த நிவாரணியாகும். காமாலை, வலது பக்கத்து இடுப்புவலி, நிமோனியா, வயிற்றுப் போக்கு மஞ்சள் நிறமாகப் போவதுபோன்ற வியாதிகளுக்கு நல்ல மருந்தாகும்

முக்கியக் குறிகள் :- பின் முதுகுப் பக்கம், வலது தோள்பட்டை எலும்பிற்கும் கீழாக உட்புறத்தில் சதா வலி **இருந்து** கொண்டிருப்பதுவே பிரதான குறியாகும்.

இதர குறிகள் :- அதிகச் சூடான பானங்களை குடிக்கப் பிரியம். சில வியாதியில் வலது பாதம் சில்லென்று இருத்தல்; அல்லது விரல் நுனிகள் சில்லென்று இருக்கும். சிறிது அசைந்தாலும் வியாதி அதிகரித்தல் முகம், கண், சர்மம், மூக்கு, கன்னங்கள், கை, மலம், மூத்திரம் எல்லாம் மஞ்சள் நிறத்துடனிருக்கும்.

உபயோகம் :- (1) கல்லீரல் வலி, ஈரல் பெருத்தல், மஞ்சட் காமாலை, மஞ்சள் நிறமான பித்தம் **வாந்தி** எடுத்தல் போன்ற வியாதிகளுக்கு முதன்மையான மருந்தாகும். (வலது விலா எலும்பிற்கும் கீழே கல்லீரல் பாகத்தைத் தொட்டால் புண்போல வலிக்கும்; நாக்கு மஞ்சள் நிறத்துடன் தடித்தும், பற்கள் நாக்கில் பதியும்; வாய் கசப்பு, புளிப்புள்ள பதார்த்தங்களில் விருப்பம்;) இக் குறிகளுடன் கூடிய சுரத்திற்கும் **காய்ச்சல் வியாதிக்கும்** சிறந்த மருந்தாகும்.

(2) மேற்படி பிரதான குறியுடன் கூடிய **வலது பக்க** நிமோனியா சுரத்திற்கும் உபயோகமாகும். இச் சுரத்தில் சுவாசிக்கும்போது நுனிமூக்கு விரிந்தும், சுருங்கியுமாகும்.

(3) பித்தக் கோளாறுகளில் ஏற்படும் இருமலுக்கும் கொடுக்கலாம். அஜீர்ணம் வயிற்றுப்போக்கு மஞ்சளாகப் போனால் செலிடோனியத்தை அவசியம் கொடுக்க வேண்டும். களிமண் நிறத்தில் வயிற்றுப்போக்கு ஏற்படுவதற்கும் இதை கொடுக்கலாம்.

குறிப்பு :- (a) மேற்படி கல்லீரல் சம்பந்தமான கோளாறுகளுடன், சிறு குழந்தைகளுக்கு அடிக்கடி ஏற்படும் கடுமையான மார்ச்சளி ரோகத்திற்கு செலிடோனியம் 3x சில நாட்களுக்கு கொடுக்கவும்.

(b) வயிற்றுவலி, வயிற்றுக் கோளாறு முதலியவைகளில் **ஆகாரம் சாப்பிட்டவுன்** உபத்திரவங்கள் **நிற்கும்**.

64. செலீனியம்

(Selenium)

ஆண்களின் ஜனன உறுப்புகளிலும், அதைச் சேர்ந்த நரம்புகளிலும் விசேஷமாக இந்திரியப் பொருள்களிலும் எலும்புகளிலும், பற்களிலும் வேலை செய்யக்கூடிய முக்கியமான மருந்தாகும். உதாரணமாக ஆண் தன்மைக் குறைவு, சரீர பலவீனம், தூக்கத்தில் இந்திரியஸ்கலிதம் இந்திரியம் கெட்டியாக இல்லாமல் நீர்த்துப் போதல், காம இச்சை அதிகம். ஆனால் போகத்தில் ஈடுபட முடியாமை. மலம் கழிக்க முக்கும் போதெல்லாம் பால் போன்ற நிறத்தில் இந்திரியம் வெளியாதல், இக்குறியுடன் கூடிய நீடித்த மலச் சிக்கலுக்கும் நல்ல மருந்தாகும்.

முக்கியக் குறிகள் .- கோடை கால உஷ்ணம் தாங்க முடியாது: சிறிது வேலை செய்தாலும் களைப்பும், வியர்வையும் உண்டாகும். [illegible] போன்ற பானங்களை அதிகமாக விரும்பி சாப்பிடுவார். சூரிய வெப்பம் கொஞ்சங்கூட ஒத்துக் கொள்ளாது. சூரியன் உதயமானதிலிருந்து உடல் வலிமையும், ஊக்கமும் குறைந்து நடுப்பகலில் (உச்சி வெயிலில் மிகச் சீக்கிரம் களைத்துப் போய் விடுவார்; பிறகு சூரியன் மேற்கே மறைந்தவுடன் வலிமையும், ஊக்கமும் திரும்பியாகிக் கொண்டே வரும். ஆகவே இவ் வியாதியஸ்தருக்கு பகலில் சூரிய வெப்பத்திற்குத் தகுந்தபடி பலவீனமும், களைப்பும் குறைந்தும் கூடியும் ஏற்படும். தூக்கத்தில் [illegible] விருப்பம் ஆனால் தூங்கியபின், எழுந்[illegible]டன் [illegible]னம், அசதி அதிகமாதல்.

தலைவலி - [illegible] அதிகமாக சாப்பிட்டதினாலும், இந்திரிய நஷ்டத்தினாலும் சூரிய வெப்பத்தினாலும் சிலருக்கு இட[illegible]க்கக் கண்ணின் மேல் பாகத்தில் தலைவலி ஏற்படுகின்றது. இந்த [illegible]க்கத் தலைவலிக்கு நல்ல மருந்து.

கவனிப்பு :- (a) எந்த கடுமையான வியாதிக்குப் பின் ஏற்படும் பலவீனத்தைப் போக்கி, ஊக்கத்தை உண்டாக்க வைட்டமின். டானிக் போன்றவைகளைக் கொடுப்பதற்குப் பதிலாக, செலீனியத்தை 200 [illegible] வாரம் இரு முறை [illegible] வேளைகள் கொடுக்க நல்ல பலன் ஏற்படும்.

(b) ஆத்மரதம் அல்லது முஷ்டிமைதுனம் என்ற கொடிய செய்கைக்குப் பலியானவர்களின் சகல [illegible] களையும் நிவர்த்திக்கும் ஓர் அற்புத சஞ்சீவி '[illegible]' என்ற (Buforana) மருந்தையும் மாற்றிமாற்றி கொடுக்கலாம். [illegible] செய்கைகளினால் ஏற்பட்ட காக்கை வலிப்பு [illegible] திரும்.

65. சைனா

(China)

சிங்கோனா என்று சொல்லும்படியான மருந்துதான் சைனா என்று அழைக்கப்படுகின்றது. அதிகமான [illegible] சீத வயிற்றோட்டம், வயிற்றுக் கடுப்பு முதலிய நோய்களுக்குப் பின் ஏற்பட்ட பலவீனத்திற்கும்; ஊட்டச்சத்து குறைந்த கோளாறுகளுக்கும் உதாரணமாக, அதிக [illegible] [illegible] வெளியேறியதாலும், அமிதஸ்திரீ போகத்[illegible], முஷ்டிமைதுனம், பெண்களுக்கு ஏராளமான [illegible] வெள்ளைப்பாடு இவைகளினால் ஏற்படும் பல[illegible]ரும் [illegible] [illegible]. மேலும் ஸ்திரீகள் [illegible] அதிகமாக கொடுத்த பின் ஏற்படும் [illegible], இரவில் சில ஆண்களுக்கு தூக்கத்தில் [illegible] வெளியாதல் (சொப்பனஸ்கலிதம்) [illegible] அதன்பின் வரும் மிதந்த பலவீனத்திற்கும், [illegible] [illegible] [illegible]

கொண்டிருப்போர்களுக்கு ஏற்படும் பலவீனத்திற்கும் சிறந்த மருந்து.

முக்கியக் குறிகள் :- சுரம், வலிகள், முறை வைத்து (ஒரு நாள் விட்டு) வருதல்; வயிற்று உப்பிசம்; உடலின் ஜலநீர்ச்சத்து (உடலிலுள்ள உயிர்த் தண்ணீர்) வெளியேறுதல் அதிகமான உணர்ச்சிகள்.

உபயோகம் :- (1) குளிர்சுரம், மலேரியா என்ற சுரம் இவைகள் முறையாக குளிர், காய்ச்சல், வியர்வை ஆகிய மூன்று கட்டங்களும் மிகத் தெளிவாய் ஒரு நாள் விட்டு அல்லது 15 நாட்களுக்கு ஒரு தடவை வருதல். அதிகமான காய்ச்சலின்போது தாகம் எடுக்காது. குளிர் தோன்றுவதற்கு முன் தாகம் எடுக்கும். குளிர் வந்தவுடனே தாகம் மறைந்துவிடும். இந்தாகத்தின் "அதிசயமான தாகக் குறி" என்னவென்றால், (தண்ணீர் குடித்தவுடன் தாகம் நிற்பதுதான் இயற்கை நியதி) ஆனால் அவ்விதம் இல்லாமல் தாகத்திற்கு ஒவ்வொரு தடவையும் தண்ணீர் குடித்த பிறகு மீண்டும் தாகம் அதிகமாவதுதான்.

(2) வலிகள் அவ்விதமே முறை வைத்து வருவதும் குறித்த காலத்தில் ஏற்படுவதுடன் வலியுள்ள பாகத்தை லேசாகத் தொட்டாலும் வலி அதிகமாகும்; ஆனால் அதே பாகத்தை **பலமாக அழுத்தினால்** வலியானது குறையும் (சௌகரியம் ஏற்படும்.)

(3) இரத்த சோகையுடன் ஜீரணமாகாமல் வயிற்றுப் போக்கு ஏற்படுபவர்களுக்கு உபயோகப்படும்.

(4) **ஈரல்கட்டி, காய்ச்சல்கட்டி :-** சில குழந்தைகளுக்கு அடிக்கடி காய்ச்சல் ஏற்பட்டு அதனால், கல்லீரலும், மண்ணீரலும் பெருத்து விடுவதற்கும், பித்தப்பை வலிகள், பித்தநீர் குறைதல் இவைகளுக்கு சைனா 30, சியானோதஸ்

அமெரிக்கானஸ் 3x செலிடோனியம் 3x இம்மூன்றையும் மாற்றி மாற்றிக் கொடுக்கவும்.

(5) **வயிற்றுக் கோளாறுகள் :-** வயிற்றில் வலி அதிகமான வாயு (காற்று) உற்பத்தியாகி அடிவயிறு பருத்து, ஏப்பம் அடிக்கடி விட்டாலும் கூட உபாதை தணிவதில்லை. கொஞ்சம் கொஞ்சமாக அடிக்கடி ஆகாரம் சாப்பிட விருப்பம், அவ்விதமான பசி மந்தம், (காதடைப்பு ஹோ என்ற இரைச்சல்) இம்மாதிரி வாயு உபத்திரவங்களுக்கு இம்மருந்துடன் மாக்னிஷியா பாஸ், காலோசிந்த் இவைகளையும் மாற்றி மாற்றிக் கொடுக்கலாம்.

கவனிப்பு :- சிங்கோனு என்ற கொய்னாவை அலோபதியர்களால் கொடுக்கப்பட்டு அதனால் ஏற்பட்ட கோளாறுகளுக்கு, உதாரணமாக காது இரைச்சல், சப்தம் தெளிவாக கேளாமல் செவிடு ஏற்படுதல், தலைவலி, **தலைச் சுற்றுதல் கண் பார்வை மங்குதல்,** இருதய பலவீனம் குடிமயக்கம்போல் மயங்குதல் அத்துடன் ஜன்னி, மூச்சுத் திணறல், வலிப்பு முதலிய பலவீனங்களுக்கு இதை 30 அல்லது 200 வீரியங்களில் கொடுக்கலாம்.

எச்சரிக்கை :- கல்கேரியா பாஸ், ஸெலீனியம் டிஜிடாலிஸ், பெர்ரம் மெட்டாலிக்கம் இவைகளுக்குப் பின் சைனாவைக் கொடுக்கக்கூடாது.

66. ஸபீனா

(Sabina)

இது பெண்களுக்கே மிகவும் உபயோகப்படும் மருந்து. கர்ப்பாசயக் கோளாறுகளுக்கு சிறந்தது.

உதாரணமாக :- அமித ரத்தப் பெருக்கு, பெரும்பாடு. மூன்றாவது மாதத்தில் வழக்கமாக ஏற்படும் கருச்சிதைவு

குறைப் பிரஸவத்தின்போது ஏற்படும் உதிரப் பெருக்கை உடனே நிறுத்தக்கூடிய நிச்சயமான மருந்தாகும். சாதாரண பிரஸவத்திற்குப் பின் ஏற்படும் ரத்தப் பெருக்கு அமிதமாயிருந்து, அசைவதினாலும், மேலும் அதிகப்படுமானால் கண்டிப்பாய் 'ஸபீனா' கொடுக்கவும்.

முக்கியக்குறி :- இடுப்புவலி, பிரஸவவலி போன்ற வலி பாயும் வலியுடனும், கீழ் முதுகிலிருந்து இடுப்புக்கூடு எலும்புவரைப் பரவி, பாயும் வலியாயும் காணப்படும். ரத்தப் பெருக்கு கட்டி கட்டியும், நாற்றமாயும் குபீர் குபீரென்றும் ஏராளமாகவும் இருப்பது முக்கிய குறிகளாகும்.

வேறு உபயோகம் :- (1) மாதவிடாய் அடக்கப்பட்டு, வெள்ளை ஒழுக்கு மிகுந்த நாற்றத்துடனும், மாமிசத்தைக் கழுவின தண்ணீர் போன்ற நிறத்துடனும் இருந்தால் சிறந்த மருந்தாகும்.

(2) அதிகக் காம இச்சையை அடக்கவும், குறைக்கவும் உதவும்.

(3) மணிக்கட்டு, கணுக்கால் கால்கட்டை விரல் மூட்டுகளில் ஏற்பட்ட வீக்கத்தைப் போக்க வல்லமையுடைய மருந்து. அத்துடன் குதியங்காலில் விட்டுவிட்டு வலி ஏற்படுவதற்கும் நல்ல மருந்தாகும்.

(4) அத்திக்காய் போன்ற பாலுண்ணிகள் (கெட்ட சதை வளர்ச்சி) பொறுக்க முடியாத அரிப்பும், எரிச்சலுடனும் இருப்பின் இதை நிவர்த்திக்க 200 வீரியத்தில் கொடுக்கலாம்.

(5) முன்சொன்ன பாயும் வலிகளுடன், கர்ப்பச் சிதைவு ஏற்படும்படியான நிலைமையில் இதைக் கொடுத்தால் சிதைவைத் தடுக்கலாம்.

67. ஸிகூடா விரோசா

(Cicuta Virosa)

முக்கியக் குறிகள் :- இசிவு, இழுப்பு, வலிப்பு, காக்கை வலிப்பு இவைகளுக்கு உபயோகமாகும் மருந்துகளில் 'ஸிகூடா விரோசா' வும் ஒன்று. ஆனால் இந்நோய்கள் மிகக் கடுமையாயும், பயங்கரத் தன்மையுடனும் வரும்; முக்கியமாக வலிப்பு தலையில் ஆரம்பித்து பிறகு மற்ற பாகங்களுக்குப் பரவி **தலை, கழுத்து** போன்ற பாகங்கள் **பின் பக்கமாய் வில்லைப்போல்** வளையும். பயங்கரமான சப்தத்துடன் இழுப்பு ஆரம்பித்து, சுரத்துடன் கடுமையாகி வாய்க்கிட்டியும், வாயில் நுரை தள்ளியும், சில சமயம் நுரையுடன் இரத்தமும் கலந்து இருக்கும். கைகள், கால்கள் (போன்ற அங்கங்கள்) கோணல் கோணலாக் இழுக்கப்பட்டும், விறைப்பாயும், வில்லைப்போல் பின்புறம் வளையும்.

உபயோகம் :- (1) சிறு குழந்தைகளுக்கு பால் குடிக்கும் போதும், குடலில் பூச்சித் தொந்தரவுகளினாலும், பற்கள் முளைக்கும் காலங்களிலும், ௸ விதமான வலிப்புகள் கடுமையாய் வருவது சகஜம், அப்பொழுது 'ஸிகூடா' வை மறக்காமல் 30 வீரியத்தில் கொடுக்க வேண்டும். அதாவது ௸ வலிப்புகள் கடுமையா யில்லாமல் சாதாரண நிலையிலிருந்தால், 'சீனா' தான் கொடுக்க வேண்டும்; சீனா கொடுத்தும் சௌகரியமாக வில்லை என்றால் 'ஸிகூடா' வைத்தான் கொடுக்க வேண்டும்.

(2) ௸ வியாதிகள் மூளை, முள்ளந்தண்டு தாபித ரோகத்திலும் வரலாம். (Cerebro — Spinal Meningitis — செரிப்ரோ ஸ்பைனல் மெனிஞ்ஜைடிஸ்) அல்லது மூளை, முள்ளந் தண்டில் கடுமையான அடிபட்டதனால் அதன்பின் வரும், நீடித்து இருக்கும் வலிப்புகளுக்கும். 'ஆர்னிக்கா'

என்ற மருந்து கொடுத்தும் குணம் காணாத ஷி வியாதிகளுக்கும் ஸிகூடா ஓர் சஞ்சீவியாகும்.

(3) சர்மக் கோளாறுகளில் **அரிப்பு என்பதே ஏற்படாமல்**, தலையிலும், முகத்திலும், மீசையிலும் அனேகக் கொப்புளங்கள் தோன்றி அவைகள் ஒன்றுடன் சேர்ந்து கெட்டியான மஞ்சள் நிறம், தேன் போன்ற நிறங்களில் பொருக்குகளாக மாறி அடைகளாகத் தோற்றமளிக்கும் இக் கோளாறுக்கும் நல்ல மருந்து.

68. ஸிங்கம் மெட்டாலிகம்

(Zincum Metallicum)

இது துத்தநாகம் என்ற உலோகப் பொருளிலிருந்து தயாரிக்கப்பட்ட மருந்தாகும். இது மூளை, முள்ளந்தண்டு, மோட்டார் நரம்பு, உணர்ச்சி நரம்புகளின் வியாதிகளில் வேலை செய்யக்கூடியது. இரத்தத்திற்கு இரும்புச்சத்து எப்படி அவசியமோ, அதைப்போலவே நரம்புகளின் சக்திக்கும் ஸிங்கம் மெட்டாலிகம் அவசியமாகின்றது. நரம்புத் தளர்ச்சியினால் உடல் மிகவும் பலவீனப்பட்டு, எந்த வேலைகளையும் செய்ய முடியாமலும், விஷயங்களை சீக்கிரம் புரிந்து கொள்ள முடியாமலும் சக்தியற்று இருப்பவர்களுக்கு இன்றியமையாத மருந்தாகும். மேலும் உடலின் உயிர்ப்புச் சக்தியை ஊக்குவிக்கவும் கொடுக்கலாம்.

முக்கியக் குறிகள் :- உட்கார்ந்திருக்கும்போது முதுகில் வலி, நடந்து கொண்டால் வலி ஏற்படுவதில்லை, சாதாரணமாய் பின் கழுத்தில் வலி. நடந்தால் வலி இருப்பதில்லை. வியாதியஸ்தர் தன் கால்களை எப்பொழுதும் ஆட்டிக் கொண்டேயிருப்பார். அதிக நரம்புத் தளர்ச்சியினால் உடல் பூரவும் நடுக்கம் — நடுக்கத்தை வியாதியஸ்தரின் முயற்சியால் நிறுத்த முடிவதில்லை. (நடுங்குதல், தசைகள் சுருட்டி

இழுத்தல், அல்லது தள்ளுதல் போன்ற வலிப்புகள்: பரபரப்பு இக்கோளாறுகளை நிவர்த்திக்கும்). தூக்கத்தில் திடுக்கிட்டு எழுந்திருத்தல், கதறுதல்.

உபயோகம் :- (1) மெனிங்ஜைட்டிஸ் என்ற மூளை சம்பந்தமான வியாதிகளில் வியாதியஸ்தர் தன் தலையை உருட்டி, பற்களை கடித்தல், மயக்கம், பார்வை மங்குதல் கண் விழிகள் சொருகுதல், முகம் ஒரு சமயம் சிவந்தும், மறுசமயம் வெளுத்தும் இருத்தல் முதலிய குறிகள் காணப்பட்டால் இதைக் கண்டிப்பாய்க் கொடுக்கவும்.

(2) சிறு குழந்தைகளுக்கு ஏற்படும் இசிவு, வலிப்பு நோய்களுக்கு. ஒரு காலும் கையும் தன் அறியாமல் ஆடிக் கொண்டிருக்கும்; அல்லது பற்பல தசைகளை வெடுக் வெடுக்கென்று பிடித்து இழுக்கும் வலிப்புகளுக்கு இதைத் தான் கொடுக்க வேண்டும்.

கவனிப்பு :- சர்மக் கோளாறு பூர்ணமாக வெளியாகாமல், தோன்றியும், தோன்றாமலுமாக, ஏற்படும் ஷி வியாதிகளுக்கு ஏற்ற மருந்து ஸிங்கம் மெட்டாலிகம் தான். சில குழந்தைகள் இருமும்போது அது தன் ஜனன உறுப்புகளைக் கெட்டியாக இறுக்கிப் பிடித்துக் கொள்ளும். சில ஆடவரும், பெண்டிரும் மர்ம உறுப்புகளில் சதா தொட்டுக் கொண்டும், அரிப்பு ஏற்பட்டு செயற்கை முறைகளில் புணர்ச்சி இன்பத்தை அடைந்து, அதனால் ஏற்பட்ட நரம்புத் தளர்ச்சிக்கும் '**ஸிங்கம்**' அவசியமாய்க் கொடுக்க வேண்டும். ஸிங்கம் மெட்டாலிகத்திற்கு முன்பும், பின்பும் **நக்ஸ்வாமிகா, சாமோமில்லா** கொடுக்கக் கூடாது.

69. ஸிலிகா அல்லது ஸைலீஷியா

(Silica or Silicisa)

மனக் குறிகள் :- மன உறுதி இல்லாமல், உணர்ச்சிகள் சரீரங்களில் அதிகரித்தல். குழந்தையிடம்

அன்பாகப் பேசினால் கதறி அழும்; அகம்பாவத்துடனும், பிடிவாதமாயும் இருக்கும்.

விசேஷக் குறிகள் :- இதுவும் நோயாளியின் சரீர வாகை அனுசரித்து பல வியாதிகளுக்கு உபயோகமாகி வருகின்றது. கை, கால்கள் குச்சி போல் இளைத்தும், கன்ன குழி விழுந்தும், சர்மம் சுருங்கி கிழத்தோற்றத்துடனும் குழந்தைகளாக இருப்பின், வயிற்றிலுள்ள கோளங்கள் பெருத்து அதனால் வயிறு தொப்பைபோல் பெருத்தும்; தலையில் ஏராளமான வியர்வையுடனும், உண்ணும் உணவுச் சத்து உடலில் ஒட்டாமலும், வளர்ச்சிக் குறைவுடனும்; தலையானது அளவுமீறி பருத்தும், உச்சிக் குழிகள் மூடப் படாமலும், குழந்தை துரும்பாயிருக்கும். ஆனால் உடம்பு கணைச் சூடுடனும், காய்ந்து மிருக்கும். பாதங்களில் வியர்வை. ஷெ குறிகளை உடைய பெரியவர்களுக்கு எந்த நோயிருப்பினும் கொடுக்கலாம்.

உபயோகம் :- (1) ஷெ சரீரவாகு உடையவர்களுக்கு வளர்ச்சி குறைந்து நீடித்திருக்கும் நிலையில் மலச்சிக்கல் ஏற்பட்டு விடுவது சகஜம். மலம் பாதி வெளிவருவதும், வெளிவந்த மலம் பாதி உள்ளே திரும்பிப் போய் விடுவதும்; எவ்வளவு முக்கி முயற்சித்தாலும், மலம் வெளியாகாமல், வந்த பாதி மலமும்கூட உள்ளே போய்விடுவதும் சிலருக்கு வயிற்றுப்போக்கு கூட ஏற்பட்டு ஷெ சரீரவாகு ஒத்திருந்தால் 'ஸிலிகா' நன்கு உபயோகப்படும்.

(2) **டான்சில்** என்ற தொண்டைச் சுரப்பிகள் வீங்குதல், அதனால் உணவை விழுங்க முடியாமல் வலி, வேக்காடு போன்ற நோய்களுக்கு சிறந்த சஞ்சீவியாகும் 12x வீரியத்தில் கொடுக்கவும்.

(3) முதிர்ந்த டி. பி. என்ற க்ஷயரோகிகளுக்கும் **கணைச்சூடுள்ள** தாய்மார்களுக்கும் குழந்தைக்குப் பால்

கொடுக்கும் ஒவ்வொரு தடவையும் யோனியிலிருந்து இரத்தம் கசிதல். யோனியில் உருண்டையாயுள்ள தசைக் கட்டிகள் ஏற்படுவதற்கும் கொடுக்கலாம். கணைச் சூடுள்ள குழந்தைகளுக்கும் க்ஷயம் (T. B.) போன்ற நோய் ஏற்படக் கூடிய நிலையிலுள்ள குழந்தைகளுக்கும் உபயோகமாகும்.

(4) இரவில் மட்டும் வரக்கூடிய அல்லது அம்மாவாசை தினங்களில் ஏற்படக்கூடிய **காக்கை வலிப்பு** நோய்க்கும் நல்ல மருந்து.

(5) **சுரப்பிகள், ஸ்தனங்கள்** கல்போல் கடினமாகி விடுதல், அல்லது சீழ் பிடிக்கும் அழற்சிகள், இரணங்கள், எலும்பு சம்பந்தமாயிருந்தாலும், தேகத்தின் கெட்டியான அல்லது மிருதுவான பாகங்களில் ஏற்பட்டாலும், கோளங் களில் ஏற்பட்டாலும் சீழ் பிடித்த பிறகு ஸிலிகா நன்கு வேலை செய்யும்.

(6) தலைவலி, கிறுகிறுப்பு, பின் கழுத்தில் ஆரம்பித்து தலையின் பக்கமாய் கண்களுக்குப் பரவும்.

(7) பொதுவாக உடல் சக்திக் குறைவால், குளிர்ந்த காற்று ஒத்துக்கொள்ளாமல், சிறிது காற்றுப் பட்டாலும் கூட ஜலதோஷம் பிடித்துவிடும். இவருக்கு சரீரத்தில் குளிர்ந்த உணர்ச்சி இருப்பதால், கோடை காலத்திலும் கூட கம்பளி உடுப்பு அணிந்து கொள்வார். இவர் எப்பொழுதும் தன் தலையை மூடிக்கொண்டே தூங்குவார்கள்.

கவனிப்பு :- கட்டிகளை பழுக்கச்செய்து உடைக்கவும், சீழ் கோர்த்த கொப்புளங்களை சீக்கிரத்தில் குணப் படுத்தவும் ஹீபார்சல்பர், கல்கேரியாசல்ப் இவைகளுக்குப் பிறகு கொடுக்கலாம். கட்டிகளில் சீழ் வெளியானவுடன் புதிய சதை வளர்ந்து பள்ளமான இடத்தை மேவி தழும்பு படவும் உதவி செய்கின்றது. பவுத்திரம் பழுத்து மஞ்சள்

நிறமான கெட்டியான சீழ் வெளிவருவதற்கும், நீர்த் துவாரத்திலிருந்து வெளியாகும் மஞ்சள் நிறமான கனேரியா என்ற வெள்ளை, வெட்டை வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து.

ஷை வியாதியை உடையவர்களுக்கு, உள்ளங்கால், பாதம் இவைகளில் நாற்றமுள்ள வியர்வை என்ற ஒரு குறியை ஆதாரமாக வைத்து 'ஸிலிகா' வைக் கொடுத்ததில் குணம் காணப்பட்டிருக்கின்றது.

70. ஸீனு
(Cina)

இந்த மருந்து குழந்தைகளுக்கு அடிக்கடி உபயோகமாகின்றது. குழந்தைகளுக்கு ஏற்படும் பூச்சித் தொந்தரவுகளினால் ஏற்படும், வலிப்பு, காச்சல், வயிற்றுவலி, அஜீர்ணம், வயிற்றுப்போக்கு கக்குவான் இருமலுக்கு இவைகளில் கீழ்க்கண்ட முக்கியக் குறிகள் இருந்தால் கண்டிப்பாய் குணமளிக்கும்.

முக்கியக் குறிகள் :- குழந்தைகள் சிடுமூஞ்சிகளாகவும், சதா தூக்கச் சொல்லி அழுதுகொண்டும், தூக்கிக் கொண்டாலும் கூட அழுதல், தொட்டியில் போட்டு ஆட்டினாலும் கூட தூங்காமல் அழுது தொந்திரவு கொடுக்கும். பிறர் தன்னைத் தொடுவதும் பார்ப்பதும் கூட பிடிக்காது; விளையாட்டுப் பொருள்களைக் கொடுத்தால் வாங்காது, கொடுப்போரை அடிக்கும். (இதுவரையிலும் இக்குறிகள் கிட்டத்தட்ட 'சாமோமில்லா' வை ஒத்திருக்கின்றது. ஆனால் 'சாமோமில்லா' வில் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டால் அழுகை சாதாரணமாயிருக்கும்) 'ஸீனு' குழந்தைகளைத் தூக்கிக் கொண்டாலும் அழத்தான் செய்யும். இதனால் அடிக்கடி மூக்கை விரலால் நோண்டிக் கொண்டேயிருக்கும். சதாகாலமாகக் கதறி அழும். தூக்கத்தில் அடிக்கடி தூக்கிப் போடுவதும் அல்லது திடீரென்று திடுக்கிட்டு எழுந்திருந்தாலும், தூக்கத்தில் பற்களை நறநற வென்று கடிப்பதும் காணப்படும் குழந்தைகளுக்கு அடிக்கடி பசி ஏற்பட்டு, சதா ஏதாவது ஆகாரம் சாப்பிட்டுக் கொண்டேயிருக்கும்; அல்லது ஏதாவது தின்னவேண்டும் என்ற ஆசையினால், தரையில் கிடப்பவைகளை பொறுக்கித் தின்றுவிடும். அல்லது பசியே இருக்காது. இம்மாதிரி அடிக்கடி பசி, பொறுக்கித் தின்னும் சுபாவமுடைய குழந்தைகளுக்கு ஏற்படும் ஷை நோய்களுக்குச் சிறந்த மருந்து.

விசேஷ உபயோகம் :- (1) ஷை குறிகளையுடைய குழந்தைகளில் சிலருக்கு, தான் கழிக்கும் மூத்திரம் சிறிது நேரத்தில் வெண்மையான நிறத்தை அடைவதும், கட்டிகளாக மாறுவதும் ஏற்படுகின்றது. மூத்திரம் **பால்போல் வெண்மையாக** மாறுவதை ஸீனு மாற்றும். குழந்தைகள் குப்புறத் தரையில் படுத்துக் கொள்ளும்.

(2) கக்குவான் இருமலில் தூக்கிப் போடுவதும், நடுக்கம், இழுப்புடனும் வரும் வலிப்பும் இருந்தால் 'ஸீனு' கொடுக்க வேண்டும்.

(3) **பூச்சித் தொந்தரவுகளை** அகற்றுவதற்கு, இம் மருந்தையும், கல்கேரியா ப்ளோரிகத்தையும், 30 வீரியங்களில் மாற்றி மாற்றிக் கொடுக்கலாம்.

71. ஸீகேல் கார்நூட்டம்
(Secale Cornutum)

இதை விரிப்பப்படுத்தாத நிலையில், இதற்கு எர்காட் என்று பெயர். அல்லோபதிக் வைத்திய முறையில், ஸ்திரீகளுக்கு ஏற்படும் இரத்தப் பெருக்கை நிறுத்த உபயோகிக்

கின்றார்கள். தசைகளையும், இரத்தக் குழாய்களையும் சுருங்க வைக்கும் சக்தி இந்த எர்காட் என்ற மருந்திற்கு இருப்பதினால் சில பெண்கள் சீக்கிரம் பிள்ளையைப் பெறுவதற்கும் கருவை சிதைத்துக் கொள்வதற்கும் உபயோகித்து மீளாத் துயரத்திற்கு ஆளாகின்றார்கள். நாம் இதை விரிவுபடுத்தி, கீழ்க்கண்ட வியாதிகளுக்கு உபயோகிக்கின்றோம். இது மிகவும் **மெலிந்த திரேகவாகையுடைய** பெண்களுக்குத்தான் சிறப்பாக வேலை செய்கின்றது.

முக்கியக் குறிகள் :- உடலையே இறுக்குவது போன்ற உணர்ச்சி, வெளியே தோல் சிலுசிலுப்பாயிருக்கும், ஆனால் நோயாளிக்கு உள்ளே எரிச்சல் இருக்கும்; மதமதப்பு, சர்மத்தில் சுருக்கங்கள், சோகை பிடித்து ஜீவகளையில்லாத முகத்தோற்றம். இரத்தம் முறிந்து தண்ணீர் போன்று நீர்த்து, கருநிறங் கொள்ளுதல்.

உபயோகம் :- (1) மெலிந்த பெண்களின் கெர்ப்பப் பையிலிருந்தும், அல்லது வேறு உறுப்புகளிலிருந்தும் ஏற்படும் இரத்தப் பெருக்கு வியாதியில் வெளியாகும் இரத்தமானது நீர்த்துப்போய் கருத்த நிறத்துடன், இடைவிடாமலும், மெதுவாகவும் மாதக் கணக்கில் வெளியாகிக் கொண்டிருந்தால் 'ஸீகேல்' தான் கொடுக்கவேண்டும்.

(2) ஷீ சரீரவாகையுடைய பெண்களுக்கு, **அபார்ஷன்** என்ற கர்ப்பச் சிதைவு ஏற்பட்ட சமயங்களிலும், பிரஸவம் ஆன பிறகும், மாதவிடாய் காலங்களிலும் கர்ப்பப் பையானது சுருங்காமல், இரத்தப்போக்கு, அல்லது ஒழுக்கு ஏற்படுவதற்கும் மிக்க உபயோகமுண்டு. சில ஸ்திரீகளுக்கு பிரஸவ வலியானது குறைந்தும் சரியான படி ஏற்படாமல் அதிக நேரம் மிக்க வருத்தமும், வேதனையும் உண்டானபோது இதை 200 வீரியத்தில் கொடுத்தால் பலனைக் காணலாம்.

(3) வாந்திபேதி என்ற காலரா முற்றின நிலையில் வியாதியில், எல்லா பாகங்களும் தளர்ந்தும், பனிக்கட்டி போல் சில்லென்று குளிர்ந்து விடுதல் இவ்வியாதிக்கு ஆரம்பத்தில் 'காம்பர்', பின்னர் 'ஸீகேல்' கொடுத்தால் குணமாகும். கடுமையான வியாதிக்குப் பின்வரும் வலிப்பு நோய்களில் கை, கால் துவண்டு விரிந்து விரல்கள் வெளிப் பக்கமாக வளைந்து இருக்கும்.

(4) சர்ம வியாதியில், முக்கியமாக கிழவர்களுக்கு ஏற்படும் சிரங்குகள், புண்கள் புரையோடி, அல்லது [illegible]கள் அழுகி, கருப்பு நிறத்துடன் இருப்பவைகளுக்கு சிறந்த மருந்து. இம்மாதிரி உள்ள குஷ்ட சம்பந்தமான புண்களுக்கும் உபயோகமாகும்.

72. ஸீயனோதஸ் அமெரிக்கானஸ்

(Ceanothus Americanus)

இது கல்லீரல், மண்ணீரல் பெருத்து, குத்து வலியுடன் ஏற்படும் சகல கோளாறுகளுக்கும், காச்சல், ஜலதோஷச் சளி, மூச்சுத்திணரல், இருமல் இவைகளுக்கு மிக்க உபயோகமுண்டு. மலேரியா என்ற சுரத்தினாலோ அல்லது வேறு சுரங்கள் அடிக்கடி வருவதினாலோ ஷீ ஈரல்கள் பெருத்துவிடுவதுண்டு.

முக்கியக் குறிகள் :- குளிர், பனி இவைகளைக் கண்டால் நோயாளி பயப்படுவான். [illegible] சூடுள்ள இடங்களில் இருந்தாலும், குளிர், பனி காற்றினால் ஷீ நோய்கள் அதிகமாகும். இடது பக்கம் படுத்துக் கொள்ள மாட்டான். அப்படியே இடது பக்கம் படுத்தால் நோய்கள் அதிகரிக்கும். இக்குறிகளை உடைய ஷீ வியாதிகளில் ஈரல் பெருத்தலுக்கு சிறப்பாக வேலை செய்யும். தாய்த் திராவகமாகத்தான் கொடுக்கவேண்டும்.

73. டிரோசிரா

(Drosera)

இது குழந்தைகளின் **கக்குவான்** என்ற இருமலுக்கு சிறந்த மருந்தாகும். சுமார் 30 வீரியத்தில் ஒரே தடவை தான் கொடுக்க வேண்டும். மேலும் சாதாரணமாக தொண்டையில் குருகுருத்த உணர்ச்சியுடன் தோன்றும் இருமல் வியாதியில் கீழ்க்கண்ட குறிகள் இருந்தால் நல்ல பலன் கிட்டும்.

முக்கியக் குறிகள் - இருமல் நள்ளிரவில் குடித்தாலும், பேசினாலும், சிரித்தாலும், உண்ணத்தினாலும், கீழே படுப்பதினாலும், நடு இரவிலும் அதிகரிக்கலாம். குறிப்பாக குழந்தைகள் கீழே தலையைச் சாய்த்து படுத்தவுடன் குறு குறுத்த உணர்ச்சியும், தொண்டையில் அருவருப்புடனும் இருமல் அதிகமாகும். அடிவயிற்றிலிருந்து இருமல் கிளம்பி, அடிக்கடி விட்டுவிட்டு இருமல்; ஒவ்வொரு தடவையும் இருமல் ஆரம்பித்து அதிக நேரம் நீடித்துத் தொண்டையை அடைத்து, மூச்சுவிட சிரமப்படுதல். கக்குவான் இருமலில் குழந்தைகள் இருமிய பிறகு உண்ட ஆகாரத்தை அல்லது கோழையை வாந்தி எடுக்கும், சில குழந்தைகளுக்கு மூக்கு வழியாயும் இரத்தம் வரலாம்; அல்லது இரத்தம் கலந்த சளி, உமிழ்நீர் வாந்தியாகும். விட்டு, விட்டுத் தோன்றும், கடுமையான இருமலினால் வலிப்புகள் ஏற்படலாம்.

கவனிப்பு :- கக்குவான் இருமலுக்கு முதலில் நக்ஸ் வாமிகாவும், பின்னர் டிரோசிராவை 30 வீரியத்திலும் கொடுத்து மறுவாரம் தான் வேறு மருந்துகளைக் கொடுக்க வேண்டும். ஒருவாரம் வரை இருமல் குறைந்து வரு கின்றதா என்பதைக் கவனித்துத்தான் வேறு மருந்துகளைக் கொடுக்கவேண்டும்.

74. டியூபர் குலினம்

(Tuber Culinum)

இது T. B. என்ற க்ஷய சம்பந்தமான (டியூபர் குளாசிஸ்) வியாதியினால் நுரையீரல்களிலிருந்து வெளியேற் றப்படும் கோழை (Sputum ஸ்பூட்டம்) யிலிருந்து தயாரிக் கப்படுகின்றது. இந்த மருந்தை பல நாட்களுக்கொருதரம் தான் கொடுக்க வேண்டும். ஏனென்றால் இதை ஒரு தடவைக் கொடுத்தால் உடனே சரீரத்தில் புகுந்து வெகு நாட்கள் தங்கி ஆழ்ந்து வேலை செய்யும் சக்தி வாய்ந்தது. க்ஷயரோகம் பீடிக்கப்பட்ட குடும்பங்களில் ஜனனமாகும் நபர்களுக்கு உண்டாகும் பற்பல வியாதிகளில் பல சந்தர்ப் பங்களில் இந்த 'டியூபர் குலினத்தை'க் கொடுத்தால் தான் மற்ற மருந்துகள் சரீரத்தில் வேலை செய்ய ஆரம் பிக்கும். க்ஷயரோகம் ஏற்படுமோ என்று சந்தேகப்பட்ட நேரங்களில் அவ்வியாதியஸ்தருக்கு ஒரே ஒருடோஸ் 200 வீரியத்தில் கொடுத்தால், க்ஷயரோகத்தை தடுத்துவிடும். மேலும் க்ஷயரோகம் ஏற்பட்ட பிறகும் இந்த மருந்தை சரியான விதத்தில் மற்ற மருந்துகளுடன் கொடுத்துவர பல வியாதியஸ்தரைக் குணப்படுத்தியிருக்கிறோம்.

முக்கியக் குறிகள் :- மனக்குழப்பம், அடிக்கடி முன் கோபம், புகார் சொல்லுதல், நிதானமாகப் பேசாமல், அடிக் கடி இடம் மாறிக்கொள்ளுதல், திறந்த வெளிக்காற்றில் பிரியம், ஜன்னல்களை அடிக்கடி திறந்து வைத்துக் கொள்ளு தல், சங்கீதத்தில் வெறுப்பு. ஊர் சுற்றிக்கொண்டிருக்க விரும்புதல், ஒரே இடத்தில் பல நாட்கள் தங்கி வசிக்கப் பிரியம் இல்லாமை. அடிக்கடி இடம் மாற்றி வைத்தியமும் செய்து கொள்ளுதல்.

வியாதிக் குறிகள் :- காரணமின்றி அடிக்கடி ஜல தோஷம் பிடித்தல்; குறிகள் எப்பொழுதும் இடம் மாறி

மாறியும்; திமர் திடீரென்றும், ஒரு அவயவத்திலிருந்து மற்றொரு அவயவத்திற்கு மாறுவதுமாயிருக்கும் அவஸ்தைகள். இரவு பகல் எந்த நேரமும் தாகம் எடுத்தல். இரவில் இருமல் அதிகம். நன்முக உணவு உட்கொண்டாலும் சரீரம் நாளுக்குநாள் இளைத்தல். (மிகவேகமாக நம்ப முடியாத அளவு உடல் மெலிந்து விடுதல்) அதிகாலை சுமார் 3 மணியிலிருந்து தூக்கம் கெடுதல். இரவில் ஏராளமான வியர்வை. மாலையில் குளிர், சூடு மாறிமாறி ஆரம்பித்து நடு இரவுவரை நீடித்திருக்கும். தலையில் பேன் அதிகரித்து சடை விழுதல் க்ஷயரோகத்தில் பெரும்பாலும் இடதுபக்க நுரையீரல் பாதிக்கப்படுதல். வெளியேற்றப்படும் கபம், கோழை பச்சை நிறத்துடனும் மிக நாற்றத்துடனும் சீழ் போன்றும் இருத்தல்.

கவனிப்பு :- கழுத்தில் ஏற்படும் கட்டிகளைக் கரைப்பதற்கும், அடினாயிட் என்று அழைக்கப்படும் தொண்டையில் ஒருவித சதை வளருவதைத் தடுப்பதற்கும், 200 வீரியத்தில் ஒரே டோஸ் கொடுக்கலாம். க்ஷய வியாதிக்கு இம்மருந்தைக் கொடுத்த பின் ஹைட்ராஸ்டிஸ், கல்கேரியா பாஸ் இவைகளை நீடித்துக் கொடுத்து வந்தால் அந் நோயாளக்கு புஷ்டி உண்டாகும்.

75. டிஜிடாலிஸ்

(Digitalis)

இது இருதய சம்பந்தமான வியாதிகளுக்கு தனிப்பட்ட மருந்தாகும். இருதயம் பாதிக்கப்படுவதினால் சிலருக்கு கை, கால், பாதங்கள், அடிவயிறு ஆகிய பாகங்களில் வெளுத்த, மென்மையான வீக்கம், ஏற்பட்டுவிடுகின்றது. இம்மாதிரியான வியாதிகளுக்கு கீழ்க்கண்ட குறிகள் இருந்தால் இதைக் கொடுக்கவும். உடனே இருதயத்தை சரியானபடி இயங்கச் செய்து மூத்திர உறுப்புகளை வேலை

செய்ய வைத்து மூத்திரத்தை அதிக அளவில் வெளியேற்றி, வீக்கத்தைக் குறைக்கும். இம்மாதிரி இருதயக் கோளாறுடன் சில சமயங்களில் மஞ்சட்காமாலை வியாதியும் சேர்ந்துவரும். அப்பொழுது சரீரம் பூராவும் மஞ்சள் நிறமாகி, மலம் களிமண் மாதிரியும், மூத்திரம் பழுப்பு நிறத்துடனும், நாடி நடை மெதுவாகவும் செல்லும்

முக்கியக் குறிகள் :- நாடி மிகவும் மெதுவாகவும், நிமிஷம் ஒன்றுக்கு 50 முதல் 60 க்குள் இருதயத் துடிப்பு இருக்கும். சரிவர இல்லாமல் மூன்றுக்கு ஒன்று விட்டு, விட்டு ஏற்படுவதும், அடிக்கடி பெருமூச்சு, திடீரென்று உடல் சக்தி முழுமையும் குறைந்து மிகுந்த பலவீனமாகி ஓய்ந்து உட்கார்ந்து விடுதல். பேசமுடியாமை, கண் இமை, முகம் வெளுத்தல், நாக்கும் உதடும் வெளுத்து விடுதல், மூச்சுவிடச் சிரமம். வியாதியஸ்தருக்குத்தான் அசைந்தாலும், நகர்ந்தாலும் கூட தன்னுடைய இருதயம் நின்றுவிடுமோ என்று நினைத்தல்.

இத்தியாதிக் குறிகளை எல்லாம் நாம் ஒரு வியாதியஸ்தரிடம் பார்க்கும்பொழுது, அவ்வியாதியஸ்தர் எவ்வளவு பிராணவஸ்தையுடன் இருக்கின்றார் என்பது தெரியவரும். இந்நோயாளிகளுக்கு சில வேளைகள் இதைக் கொடுத்து பின்னர் வேறு மருந்துகளையும் கொடுக்கலாம்.

76. தூஜா

(Thuja) Thuja Occidentalis

தூஜா, ஆக்ஸிடென்டாலிஸ் என்ற செடியிலிருந்து தயாரிக்கப்படும் மருந்தாகும். மேகவெட்டை, கிரந்தி சம்பந்தமுள்ள நாள்பட்ட வியாதிகள்; சர்மத்தில் அரிப்பு சொறி, நமைச்சல்களுடன் தோன்றி, வளர்ந்துவரும் பாலுண்ணி போன்ற வளர்ச்சிகள்; அம்மை ஊசி குத்திக்

கொள்வதினால் பெரியவர்களுக்கு ஏற்படும் வயிற்றுப் போக்கு அதனால் குழந்தைகளுக்கு வந்த காய்ச்சல், சுரம் போன்ற வியாதிகளுக்கும் முக்கியமாய் உபயோகமாகும் மருந்து.

மனக்குறிகள் :- அடிவயிற்றில் ஏதோ உயிருள்ளவைகள் நகருவது போன்ற உறுதியான எண்ணங்கள், பேசினாலும், வேலைகள் செய்தாலும், மிகவேகமாயும் தடபுடலாயும், அவசர புத்தியுடன் சகல காரியங்களையும் செய்யும் குணம். தன்னருகே யாரோ பழக்கமில்லாதவர் படுத்திருப்பதுபோன்ற உணர்ச்சி. தன் ஆத்மா தன் உடலை விட்டுப் பிரிந்து போனதாகவும், தன் அங்கங்கள் உதாரணமாக கை, கால்கள் கண்ணாடியினால் செய்யப்பட்டது போலும், அவைகள் எளிதில் உடைந்து விடநேரிடும் என்றும், மனதில் உறுதியான எண்ணங்கள், அபிப்பிராயங்கள் தோன்றுதல்.

வியாதியின் குறிகள் :- வலிகள், உபாதைகள் இடது பக்கமே வரும். இடது அரையிடுக்குப் பாகங்களில் கடுமையான வலி. பெண்களுக்கு இடது சினைப்பையில் வலி. இம்மாதிரி உபாதை உடையவர்கள் மேகவெட்டை, மேகக் கிரந்தி வியாதிகளில் இதற்கு முன் அவஸ்தைப்பட்டு, அதை தற்காலிகமாகக் குணப்படுத்திய வரலாறு கூறுவார்களானால் அவர்களுக்கு ' தூஜா ' ஓர் நிகரற்ற நிவாரணியாகும். முகம் எண்ணெய் தடவினாற்போல், பளபளப்பா யிருத்தல்.

முக்கிய உபயோகம் :- (1) கனோரியா என்ற மேக, வெள்ளை, வெட்டை வியாதியைத் தகுந்த சிகிட்சை செய்யாமல், உள் அமுக்கிய காரணத்தால் உண்டான சகலவிதமான வியாதிகளுக்கும், உதாரணமாக, வெள்ளை நோய் மறைந்து, ரூமாடிஸம், குடல்வாதம் போன்ற நோய்கள் ஏற்படின். ' தூஜா ' கொடுக்கவேண்டியது.

(2) **பால் உண்ணி** என்ற சதை வளர்ச்சிக்கு, தாய்த் திராவகத்தை மேல் பூச்சாகவும், 30 வீரியமுள்ள மருந்தை உள்ளேயும் கொடுத்தால் நிவர்த்தியாகும்.

(3) **ஒருவகைப் பைத்திய நோயில்.** நோயாளியின் பக்கத்தில் யாரோ ஒருவர் இருப்பது போலும், தன்னை ஒரு தேவதை அல்லது மாயாசக்தி பிடித்திருப்பதாகவும், தன் கால்கள் கண்ணாடி போன்றும் மெட்டி போன்றும் இருப்பதாகவும் அடிக்கடி சொல்லுவர். இதற்கும் கொடுக்கலாம்.

இதர உபயோகங்கள் :- பற்களின் நுனி கெடாமல் வேர்ப்பாகம் சொத்தையாகுதல், பற்கள் நொறுங்குதல், பற்களில் ஊத்தைப் பொருக்குகள் சேர்ந்திருத்தல், நகம் வளர்ச்சி குன்றி நிறம் மாறி சிதறுதல். தலையில் மயிர் கொட்டுதல், காதுவலிகள். அழற்சிகளினால் சீழ்வருதல், மலச்சிக்கல், பாதிமலம் வெளிவருவதும் அது மீண்டும் உள்ளே சென்று விடுவதும், மலம் கழிக்கும்போது கடுமையான வலி, கண்ணை மூடினால் தலை சுற்றுதல், உச்சந்தலை, நெற்றி, பக்கங்களில் ஏற்படும் தலைவலி, தலைவலியானது ஒரு ஆணியைக் கொண்டு துளை போடுவதுபோல் இருத்தல். மூத்திரம் பெய்த பின்னும், பெய்யும்போதும் வெட்டும் கடுமையான வலி, நின்று நின்று மூத்திரம் வெளியாகுதல். (கர்ப்ப ஸ்திரீகளுக்கு மூன்றாவது மாதத்தில், கெர்ப்பம் கலைந்துவிடுதல் போன்ற நிலைமையில் அதாவது சிதைவு ஏற்பட முதலில் சிறிதளவு இரத்தம் வெளியாகும்போது கொடுத்தால் கெர்ப்பச் சிதைவைத் தடுக்கலாம்.

கவனிப்பு :- முன் தத்துவம் என்ற பாடத்தில் கூறியது போல், மூன்றுவித மியாஸம் என்ற தோஷங்களுக்கு முறையே, சோரா விஷத்திற்கு சோரினமும், சிபிலிஸ் விஷத்திற்கு சிபிலினமும், சைகோஸிஸ் விஷத்திற்கு மெடோரினமும் ஞாபகத்திலிருக்க வேண்டும். அதேபோல்

மற்ற மருந்துகளும் ஷை மூன்று மியாங்களுக்கும் கீழ்க் கண்ட விவரப்படி உபயோகமாகின்றது.

விஷத்திற்கு :

சோரா — ஸல்பர்

சிபிலிஸ் — மெர்கூரியஸ் சொலுபுலிஸ்

சைகோசிஸ் — தூஜா

ஆகையினால் மேக சம்பந்த முடையவர்களுக்கு மற்ற வியாதிகளுக்கு சிகிட்சை செய்யும்பொழுது 'தூஜா' வை இடையே கொடுத்தால் தான் வியாதி சீக்கிரம் குணமாகும்.

77. நக்ஸ்வாமிகா

(Nuxvomica)

எட்டிக் கொட்டை என்ற ஒருவித விஷச்சத்துள்ள பொருளிலிருந்து வீரியப்படுத்தி நாம் மருந்தாக உபயோகிக்கின்றோம். இது ஆண்களின் ஔஷதம் என்று பொதுவாகக் கூறப்படுகின்றது. ஏனென்றால் நவநாகரீக வாழ்க்கையில் அதிகமாக ஈடுபட்டு தன் உடலை கெடுத்துக் கொள்ளும் அநேகம் ஆண்களுக்கு ஏற்படும் சகல கோளாறுகளுக்கும் மிக முக்கியமாய் உபயோகமாகின்றது.

மனக்குறிகள் :- பொறுமைக் குணம், சிடுசிடுத்து எதற்கெடுத்தாலும் சண்டை போடுதல், பழிவாங்கும் எண்ணம், பிறரிடம் நம்பிக்கை இல்லாதிருத்தல், கோழைத்தனம் சஞ்சலம், எந்த விஷயத்திலும் உறுதியில்லாமை, பிறரைச் சந்தேகித்தல்.

வியாதி உண்டாகும் காரணங்கள் :-

(1) சரீர உழைப்பில்லாமல் சதா நாற்காலி, சாய்வு நாற்காலி (ஈஸிசேர்) இவைகளில் உட்கார்ந்து, சுகவாழ்வு நடத்துபவர்கள்.

(2) சதா உட்கார்ந்தபடியே வேலைசெய்யும் குமாஸ்தாக்கள், கணக்குவேலை பார்ப்பவர்கள்.

(3) காப்பி, டீ, லாகிரி வஸ்துக்கள், மதுபானம் இவைகளை மிகப்பிரியமாய் சாப்பிடக்கூடியவர்கள்.

(4) உயர்தர வாழ்க்கை, நாகரீக மோகம், இவைகளால், மிளகு, இஞ்சி, சீரகம், பெருஞ்சீரகம், கிராம்பு, மிளகாய், கொத்தமல்லி, பெருங்காயம் போன்ற சுவைதரும் பொருள்களை மிதமின்றி உபயோகித்து உணர்ச்சி வசப்பட்டவர்கள், அமித ஸ்திரீபோகம், போக உணர்ச்சிகளில் ஈடுபட்டவர்கள்.

(5) அமிதவேலை, அமிதபோகம், சந்தான அமித உணவு இவைகளுக்குத் ஆளானவர்கள்: இரவில் அதிக நேரம் விழித்தல், சினிமா பார்த்தல் இக்காரணங்களினால் சில வியாதிக்கு ஆளானவர்கள். பல மருந்துகளையும் சாப்பிட்டு உடம்பை கெடுத்துக் கொண்டவர்கள். ஷை காரணங்களினால் ஏற்பட்ட சகல கோளாறுகளையும் நீக்க வல்லமை உடைய மருந்து நக்ஸ்வாமிகா. ஆகையால் நாம் முதன் முதலில் நம்மிடம் வரும் நோயாளிகளுக்கு இம்மருந்தை ஒருடோஸ் கொடுத்து பிறகு மற்ற மருந்துகளைக் கொடுக்கவேண்டும்.

வியாதியின் குறிகள் :- கீழே கண்ட மலக்குறி தான் பிரதானம்.

(1) மூலம், மலச்சிக்கல், இந்த வியாதிகளில் பெருங்குடல் பாதிக்கப்பட்டு அடிக்கடி வெளிக்குப்போக (மலம் கழிக்கும் உணர்ச்சி) தூண்டுதல் ஏற்படும். ஆனால் மலம் போவதில்லை. பிரயத்தனம் செய்தால் மலம் சிறிது போகும். அல்லது கொஞ்சம் கொஞ்சமாக அடிக்கடி மலம் பிரியும். இம்மாதிரிக் குறி, சீதபேதி என்ற வயிற்று கடுப்பு நோய்

களிலும் காணலாம். மேலும் அபானத்தில் ஏற்படும் எரிச்சலும், கடுப்பும், வலியும் மலம் வெளியானவுடன் சிறிது நேரத்திற்கு குறைந்தும் இல்லாமலிருப்பதும் இம் மருந்தின் விசேஷக் குறிகளில் ஒன்று.

(2) சில சமயங்களில் **ஷை மலக்குறியுடன்** மூல நோயும், முதுகுவலியும் சேர்ந்தே வரும். அப்பொழுது வியாதியஸ்தர் படுக்கையில் திரும்பிப் படுக்க முடியாது. எழுந்திருந்து உட்கார்ந்தபடியே மறுபக்கம் திரும்பிப் படுக்கவேண்டும். இம்மாதிரி முதுகுவலியானது சர்தாரணமாக அமித சிற்றின்பம், இயற்கைக்கு மாறான வழிகளில் புணர்ச்சி செய்தல் இவைகளினால்தான் ஏற்படுவதாக வியாதியஸ்தர்களின் சொற்களிலிருந்து தெரியவருகின்றது.

(3) **கர்ப்பு ஸ்திரீகளுக்கு** ஷை மலக்குறியுடன் கூடிய உபாதைகளுக்கும் பயனற்ற பிரஸவங்களுக்கும் பிரஸவ காலங்களில் ஷை மலக்குறியுடன் ஏற்படும் இரத்த ஒழுக்கிற்கும் மிகச்சிறந்த மருந்தாகும்.

(4) பெண்களின் மாதவிடாய் கோளாறுகளில் அதாவது வழக்கத்திற்கு மாறுபட்டு சீக்கிரமாக போக்கு ஏற்படுதல், மாதவிடாய் ஏராளமாகவும், பல நாட்கள் வரை நீடித்தும் இருக்கும். அத்துடன் ஷை மலக்குறிகளும் இருந்தால், நக்ஸ்வாமிகா தான் சிறந்த மருந்து.

(5) **கலலீரல் கோளாறு** :-வயிறு, கல்லீரல் கோளாறுகளினால், ஆகாரம் சாப்பிட்ட ஒன்று அல்லது இரண்டு மணிநேரம் கழித்து வயிற்றில் உப்பிசமும், ஒரு கனத்த உணர்ச்சியுடன் வயிற்றை அமுக்கினால் வலியும். வேதனையும் தோன்றும்; அத்துடன் இடுப்பைச் சுற்றிலும் ஆடைகளை இறுகலாக அணிய முடியாத அளவு வேதனை கடுமையாயிருக்கும். இதற்கு "நக்ஸ்வாமிகா" சிறந்த மருந்து.

(6) **தலைவலி** :- நெற்றியில் புருவத்திற்கு மேல் பாகங்களில், வயிற்றைப் புரட்டிக் கொண்டும், வாந்தி எடுக்கும் உணர்ச்சியுடன் தலைவலி காலை நேரங்களில் முக்கியமாகத் தோன்றும். பித்தம் அதிகரிப்பதினாலும் மலபந்தம், மூலத்தினாலும் ஏற்படும் தலைவலிகளுக்கும் நல்லது. தலைவலி சூடான அறைகளில் சிறிது சௌகரியம் ஏற்படும். அதிக உடல், மனம் உழைப்பினாலும், நேரந் தவறி சாப்பிட்டதினாலும் ஏற்படும் தலைவலிகளுக்கும் நல்ல மருந்து.

மூத்திரக் குறி :- அடிக்கடி மூத்திரம் கழிக்கத் தூண்டுதல், ஆனால் மூத்திரம் வருவதில்லை. சில சமயம் லேசான எரிச்சலுடன் கொஞ்சமாக மூத்திரம் பிரியும். வயதானவர்களுக்கு ஆண்குறி நீண்டு பெரிதாகி, மூத்திரம் அடக்க முடியாமல், சொட்டு சொட்டாக ஒழுகிக் கொண்டிருக்கும்.

(7) **சுரம்** :- காய்ச்சலில், சூடு அதிகமாக நெருப்பைப் போல் உடம்பில் கொதிக்கும். உடலில் மற்ற பாகங்களை விட கழுத்திலும் முகத்திலும் மட்டும் சூடு அதிகரித்தும், சிவந்த சிவப்புமாக இருக்கும். இம்மாதிரி கடுமையான காய்ச்சல் இருந்த போதிலும் வியாதியஸ்தருக்கு உள்ளூர குளிர் அதிகமாகவே இருக்கும். ஆகையால் கம்பளிகளைக் கொண்டு சகல பாகங்களையும் மூடி போர்த்திக் கொள்வார். எந்தப் பக்கமும் திரும்ப முடியாமல் படுத்தபடியே இருப்பார். உடலில் சிறிதளவு வெளிக் காற்றுப்பட்டாலும், அல்லது லேசாக அசைந்தாலும் குளிர் அதிகமாகிவிடும். போர்வையை எக்காரணத்தினாலும் அகற்ற முடியாமல் போர்த்திக் கொண்டபடியே தான் படுத்திருக்க முடியும். இக்குறிகள் எந்த சுரத்தில் காணப்பட்டாலும் நக்ஸ்வாமிகா நல்ல பலனைக் கொடுக்கும்.

(8) **ஜலதோஷம்** :- இது முக்கியமாக ஜீரணக் கோளாறினால் ஏற்படுகின்றது. உதாரணமாக [illegible]ரைவிட்டு

அயலூர்களில் தங்கி அங்கே சாப்பிட்ட ஆகார விகற்பங்களினால் ஏற்படலாம். அந்த ஜலதோஷத்தினால் வியாதியஸ்தருக்கு மூக்கடைப்பும். அதாவது இரவில் படுத்திருக்கும் போது அதிகமாக மூக்கடைப்பு மூக்கினால் சுவாசிக்க முடியாது.

கவனிப்பு :- (a) காலை நேரத்திலும், அதிகமாக மனதிற்கு வேலை கொடுத்த பிறகும், உணவு உட்கொண்ட பிறகும் வியாதியஸ்தரின் எல்லாக் குறிகளும் அதிகமாகும். அதாவது அசௌக்கியமாயிருப்பது போன்ற நிலைமை.

(b) மூலநோயில் அபானத்தில் அதிக எரிச்சலும் வலியும் இருந்தால் "நக்ஸ்வாமிகா 30, சல்பர் 30" மாற்றி மாற்றி கொடுத்தால் சுகமாகும்.

(c) உணவு உட்கொண்ட பிறகும், உணவு ஜீரணம் ஆகாமல், வயிற்றுப்புரட்டலுடன், தோன்றும் ஆஸ்துமா போன்ற மூச்சுத்திணறல் வியாதிக்கும் கொடுக்கலாம். ஏப்பம் பிரிந்தால் சிறிது சமனப்படும்.

எச்சரிக்கை :- நக்ஸ்வாமிகாவிற்கு முன்பும், பின்னரும் "லிங்கம் மெட்டாலிகம்" கொடுக்கக்கூடாது.

78. நேட்ரம் மூரியாடிகம்
(Natrum-Muriaticum)

இது நாம் தினமும் ஆகாரத்தில் சேர்த்து சாப்பிட்டுக் கொண்டுவரும்படியான உப்பே. ஆழ்ந்து வேலைசெய்து லேரா விஷத்தை நீக்கும். ஹோமியோபதியின் தத்துவத்தை விளக்கி வைத்த முக்கியமான மருந்துகளில் ஒன்று.

மலேரியா, குளிர், முறை சுரங்களுக்கு அடிக்கடி தேவைப்படும். தலைவலி இரத்த சோகை, சூதகப்பாண்டு, நீர்ப்பவெட்டை, மலச்சிக்கல், உதடு, ஆசனவாய் வெடிப்பு

இருதய படபடப்பு; கரப்பான் கடி, போன்ற வியாதிகளுக்குச் சிறந்த மருந்து.

மனக்குறி :- அதிக வியாகூலம், மனத்தளர்ச்சி, எதற்கெடுத்தாலும் அழும் சுபாவம். யாரேனும் ஆறுதல் சொன்னாலும். உற்சாகப்படுத்தி தேறுதல் சொன்னாலும். அதனால் வியாதியஸ்தருக்கு வருத்தமும் அழுகையும் அதிகமாகுமே தவிர குறையாது. அதிக உப்புச் சேர்த்த பொருள்களை அதிகமாகச் சாப்பிடுவர்.

வியாதிகளின் குறிகள் :- இளைத்த உடல், அதிலும் உடலைவிட கழுத்து அதிகமாக இளைத்திருத்தல்.

(1) மலேரியா சுரம், குளிர்சுரம், விட்டுவிட்டு வரும் முறைசுரம் போன்ற வியாதிகளில் குளிரும் சுரமும் காலை 10 அல்லது 11 மணிக்குக் குறிப்பாக ஒரு ஒழுங்காக ஏற்படும். குளிரானது நீண்டநேரம் இருந்து காண்பது ஒரு குறிப்பிடத்தக்க முக்கிய குறியாகும். பிறகு வியர்வை ஏற்பட்டவுடன் எல்லா உபாதைகளும் மறைந்துவிடும். கொய்னாவை சாப்பிட்டு அமுக்கப்பட்ட முறைசுரம், மீண்டும், மீண்டும் வந்தாலும்; நேட்ரம்மூர் அதைக் குணப்படுத்தும். வாயில் கொப்புளங்கள் முத்துவரிசையைபோல் ஏற்பட்டு, வரும் முறை சுரங்களுக்கு நிச்சயம் குணமளிக்கும். சுரம் காலையில் குறைந்தும், மாலையில் கூடுதலாயும், அத்துடன் குளிர் ஏற்படின் இதைக் கொடுக்கலாம்.

(2) தலைவலி :- காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போதே தாங்க முடியாத் தலைவலிக்கும்; சூரிய வெப்பத்தினால் ஏற்பட்ட தலைவலிக்கும்; பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் வழக்கமாய் வரும் தலைவலிக்கும்; சதாபடிப்பு, தையல் வேலை இவைகளில் கண்களை அதிகமாக உபயோகிப்பதால் ஏற்படும் தலைவலிக்கும் மிகச் சிறந்த மருந்து. தலைவலிகள் எல்லாம் குத்துவது போன்

றும், சம்மட்டியினால் அடிப்பது போன்றும், தலைவெடித்து விடுவது போன்றும் 'விண்விண்' என்று தெரிக்கும்படியாகவும் தான் இருக்கும்.

(3) **இரத்த சோகை** :- துக்கம், வருத்தம் போன்ற மனக் கோளாறினால் ஏற்பட்ட சோகைக்கும்; மாதவிடாயின் போது அதிக ரத்தப் போக்கின் காரணத்தினாலோ, அல்லது ஊநீர், சரீரத்தின் தாதுநீர் அதிகமாக வெளிச் சென்ற காரணத்தினாலோ ஏற்பட்ட இரத்த சோகைக்கும் நல்ல மருந்தாகும். இவ்வியாதியஸ்தர்களின் உடல் நாளுக்கு நாள் இளைத்து மெலிந்துவிடும். இளைத்த நிலைமையில்தான், தலைவலி, மூச்சுத்திணரல், சிறிதளவு வேலை செய்தாலும் மேல் மூச்சு வாங்குவதும், திணரல் அதிகமாவதும் ஏற்படுகின்றது. அத்துடன் மலச்சிக்கல், ஷை மனச்சோர்வு காணப்படும். இவ்வியாதியஸ்தர்களுக்கு இருதய படபடப்பு அடிக்கடி ஏற்படும். சில பெண்களுக்கு இரத்த சோகையினால் மாதவிடாயின்போது போக்கு மிகக் குறைந்திருக்கும். முற்றிய நிலையில் சூதகப்பாண்டு ஏற்பட்டு கைகால் வீங்கிவிடும். பலவீனத்தினால் ஏற்படும் இருதய படபடப்பிற்கும், அதிலும் இடது பக்கம் படுத்தால், அதிகரிக்கும் இருதய துடிப்புடன் படபடப்பு ஏற்படுவதற்கும் நல்ல மருந்தாகும்.

(4) பெண்களின் கெர்ப்பவெட்டை என்ற வெள்ளை ஒழுக்கு நோயின் ஆரம்பத்தில் தண்ணீர் போன்றும், பிறகு வெண்மை நிறத்துடனும், முற்றிய நிலையில் சளி மாதிரி பச்சை அல்லது பசுமை கலந்த மஞ்சள் நிறத்துடனும், வேக்காட்டுடனும் ஒழுக்கு ஏற்படும். ஸ்தனங்கள் சுருங்கி இளைத்துவிடும். பொதுவாக வறட்சியுடன் மலச்சிக்கல், தலைவலி, இருந்து கொண்டேயிருக்கும்.

(5) உதடு, வாய், ஆசனவாய் முதலிய இடங்களில் வறட்சியினால் காய்ந்தும், வெடிப்புடனும் புண்மாதிரி

நொந்தவலியும் ஏற்படலாம். சிலருக்கு மலச்சிக்கல் ஏற்பட்டு அதிகம் முக்கிய காரணத்தினால் அபானத்தில் மட்டும் வெடிப்பு கீறல் உண்டாகி இரத்தமும் கொட்டும். அபானம் சுருங்கிவிட்டது போன்ற உணர்ச்சியும்; ஆசனவாயில் சுருக்சுருக்கென்று குத்தும் உணர்ச்சியும் இருக்கும். இக்கோளாறுகளை நீக்குவதில் முதன்மையான மருந்து "நேட்ரம் மூர்" இது குடலில் போதிய அளவு தண்ணீரை உற்பத்தி செய்து வறட்சியை நீக்கி விடுவதால் ஷை வியாதிகள் சொஸ்தமாகின்றது.

(6) **உணவுப் பொருள்களில்** ஏராளமான உப்பைச் சேர்த்துக்கொண்டு சாப்பிட்டு வருபவர்களுக்கு நிறைய தாகம் ஏற்பட்டு அதனால் சிலர் வேறு பல நோய்களுக்கு ஆளாகின்றார்கள். உதாரணமாக மூத்திர உறுப்புகளை கவனிக்குமிடத்து சிறுநீர் அதிகமாக உற்பத்தியாகின்றது. அத்துடன் அவ்வியாதியஸ்தருக்கு தன் சுய உணர்வில்லாமலே சிறுநீர் வெளியாகிவிடும். இந்த விதமாக அதிக சிறுநீர் உற்பத்தியும், ஏராளமான தாகமும், அதிகப் பசியும் இம்மருந்துக்கு இருப்பதால், இது (டயபிடிஸ் இன்ஸிபிடஸ்) என்ற அதி மூத்திர ரோகத்திற்கும் கொடுக்கலாம். ஆனால் இதர குறிகளும் ஒத்திருக்க வேண்டும்.

(7) சர்ம நோயில், சிவந்தும், இரணத்துடனும் சிறு சிறு கொப்புளங்கள் தோன்றி தண்ணீர் போன்ற நிறத்துடன் நீரைக் கக்கிக் கொண்டிருக்குமானால் இதைக் கொடுக்கலாம். படைகள், வெடிப்புகள் இவற்றிலிருந்து வெளியாகும் நீர் காரத் தன்மையுடனும் தண்ணீர் போன்றும் இருக்கும்.

(8) **கல்லீரல் கோளாறுகள்** :- சோகைபிடித்து, கழுத்தும், தோல்பட்டையும் மிகவும் மெலிந்து இளைத்துப் போயிருப்பவர்களுக்கு, பித்தவுபரி, அஜீர்ண வியாதியில்,

கல்லீரல் பாகத்தை தொட்டு அமுக்கினால் வலி ஏற்படுவதையும், நாக்கு மூக்கு, உதடுகளில் மதமதப்பும், ஏதோ ஊறுவதுபோன்ற உணர்ச்சியும் இருப்பதை ஆதாரமாக வைத்து நேட்ரம் மூர் 200-ல் கொடுத்ததில், நல்ல குணம் ஏற்பட்டிருக்கின்றது. பிறகு பிரயோனியா 200 வீரியத்தில் கொடுத்து பூர்ணகுணம் ஏற்பட்டது.

கவனிப்பு :- (a) சுரம் கடுமையாயிருக்கும்போது இதைக் கொடுக்கக்கூடாது.

(b) உப்பில் அதிகப்பிரியம், கசப்பு அல்லது புளிப்பு ஆகாரங்களில் விசேஷமாக பிரியமுள்ளவர்களுக்கு இதை 200 வீரியத்தில் வாரம் 2 தடவையாக 4 தடவைகள் கொடுத்தால் ஷை குணம் மாறிவிடும்.

(c) தேள்கடி, மற்ற விஷகடிகளுக்கு உள்ளே நேட்ரம்மூர் 200 வீரியத்திலும், வெளியே ஷை கடிவாயில் இந்த மருந்தை 3x வீரியமுள்ள மாத்திரையை தண்ணீரில் குழப்பித் தடவினால் ஷை விஷம் இறங்கும்.

79. பல்சடில்லா

(Pulsatilla)

இது பல வியாதிகளுக்கு உபயோகமாகின்றது. மேலும் நீடித்த வியாதிகளுக்கும், மற்ற மருந்துகளை முறிப்பதற்கும் முதன் முதலில் கொடுக்கவேண்டிய மருந்து. இதை பெண்களின் ஔஷதம் என்றும் "நக்ஸ்வாமிகா' வை ஆண்களின் ஔஷதம் என்றும் கூறலாம்.

மனக் குறிகள் :- பணிந்து போகும் சுபாவம் அதாவது சாந்த குணமும், சொல்கேட்கும் தன்மையும், சந்தோஷமானாலும், துக்கமானாலும் அழுகை ஏற்படல் சமாதானப் படுத்துவதினால் மனத்தேர்தல் ஒரு சமயம் சிரிப்பு, மறு

சமயம் கோபம், அழுகை, வருத்தம், இவ்விதம் மனோபாவம் அடிக்கடி மாறும். வியாதியஸ்தரை "உன் உடம்புக்கு என்ன" என்று கேட்டவுடன் அவர் அப்படியே அழுது விடுவார். அழுகையின் காரணத்தினால் ஒன்றும் சொல்லாமல் தேம்பித் தேம்பி அழுவார்கள். இந்தமாதிரி மனக்குறிகள், ஆணோ, பெண்ணோ எவரிடம் காணப்பட்டாலும், அவர்களின் எவ்வித நோய்க்கும் "பல்சடில்லா" வை நிச்சயமாகக் கொடுக்கலாம். உப்பில் பிரியமில்லாமை, வெறுப்பு.

வியாதிக் குறிகள் :- நோயாளியின் குணம் அடிக்கடி மாறுவதுபோல், அவர்களின் வியாதிக் குறிகளும் அடிக்கடி மாறுபட்டுக் கொண்டே இருக்கும். உதாரணமாக உடம்பில் ஒரு பாகத்தில் ஏற்பட்ட வாதவலியானது மறுபாகத்திற்கு மாறிக்கொண்டே யிருக்கும். வயிற்றுப் போக்கு வியாதியில் மலம் ஒரு சமயம்போல் மற்றொரு சமயம் நிறத்திலோ, அளவிலோ ஒத்திருப்பதில்லை. சுரத்தில் குளிர் ஒரு சமயம்போல், மற்றொரு சமயம் இருப்பதில்லை. இரத்தப் பெருக்கு நோயில் ஒரு சமயம் குபீரென்று இரத்தம் வெளிப்படுவதும், மறுசமயம் திடீரென்று நின்றுவிடுவதும் மீண்டும் ஆரம்பித்து நின்று, நின்று வெளிப்படும்.

விசேஷக் குறிகள் :- எந்த வியாதியிலும் தாகம் இருக்காது. சிரேகத்தில் வலிகள் இடம்விட்டு இடம் அடிக்கடி மாறும். காலை நேரங்களில் வயிறு, வாய், தொண்டைக் கோளாறுகள் ஏற்படும். உதாரணமாக வாயில் ருசியில்லாமை, குமட்டல், வயிற்றுப்போக்கு அதிலும் கொழுப்புப் பதார்த்தங்களினால் அதிகரித்தல். மாலையில் மனக்கோளாறுகள் அதாவது தமக்கு தீராத வியாதி வந்துவிட்டது போல் தவிப்பர். ஷை மனக்குறிகளுடன் அழுவர். சிலருக்கு பேய் பிசாசுகளைப் பற்றிய பயம் தோன்றும். சிலருக்கு சில்லிப்பு உணர்ச்சி அதிகரிக்கும்.

கழிவுப் பொருள்கள் :- உதாரணமாக பெண்களின் வெள்ளை ஒழுக்கு (Leucorrhoea) நாள்பட்ட மூக்கில் சளி வருதல், ஜலதோஷம், தொண்டை அழற்சி, மேகவெட்டை (Gonorrhoea) காது, கண் வலிகள் போன்ற பல நோய்களினால் வெளியேற்றப்படும் பதார்த்தம் கெட்டியாய், மஞ்சள், அல்லது பச்சை நிறமாகவோ, மஞ்சள் கலந்த பச்சையாகவோ இருக்கும். அத்துடன் காரமில்லாமலும் இருக்கும். எச்சில், கோழை உப்புக் கரிக்கும். பச்சைநிற வயிற்றுப்போக்கு, அடிக்கடி ஏற்படும்.

உபயோகம் :- (1) பெண்களுக்கு மாதவிடாய் நாள் மட்டும் மிகவும் குறைந்தும், சில சமயம் அமுக்கப்பட்டு வெளியாகாமலு மிருக்கலாம். மாதவிடாய்க்கு முன்னும், மாதவிடாயின் போதும், மாதவிடாய்க்குப் பின்னும் சூதக வலி ஏற்படும். அத்துடன் வலியானது அதிகரித்து அமைதியற்ற நிலையில், போக்கு நின்று நின்று வெளியாவதும், ஷ மனக்குறியும் இருந்தால் 'பல்சடில்லா' தான் கொடுக்க வேண்டும்.

(2) பருவப் பெண்களுக்கு மாதவிடாயின் போது ஸ்தனங்களில் பால் சுரத்தல் தாளம்மை மறைந்து பெண்களுக்கு ஸ்தனத்திலுள்ள சுரப்பிகளைத் தாக்குதல். ஆண்களுக்கு தாளம்மை மறைந்தால் பீஜங்களில் வீக்கத்தை உண்டாக்கும். இவைகளுக்கு சிறந்த மருந்து. அஜீர்ணத்தினால் ஏற்படும் வயிற்று வலியில் இடுப்பிலும் சேர்ந்தே ஏக காலத்தில் வலி உண்டாகும்.

(3) சுரம் அதாவது பகலில் குறைந்தும், இல்லாமலும், சில சமயம் சில்லென்றும்: இரவில் காய்ச்சல் அதிகரித்து தாங்க முடியாத வெப்பமும், சூடும் ஏற்படும். அதே சமயத்தில் ஒரு பாகம் கொதித்தும், மறுபாகம் வியர்த்து சில்லென்றும் (அதாவது முதலில் வலதுபாகம் மற்ற சமயம்

இடது பாகம்) மாறி, மாறி காணப்படும். இச்சமயத்தில் சிலருக்கு தலைவலியும் ஒரு பக்கத்தில் மட்டும் இருக்கும். இம்மாதிரி சுரங்களில் கண்டிப்பாய் தாகம் இருக்காது. இதற்கு சிறந்த மருந்து.

(4). அசுத்த ரத்தக் குழாய்களிலுள்ள கோளாறுகளை (உதாரணமாக பச்சை நரம்புகள் சுருட்டிக் கொள்ளுதல், முடிச்சுகள்.) மூலநோய் சிலவற்றை நீக்கவல்லமையுடைய மருந்தாகும். மூலநோயில் வலி அதிகமாகவும், நேரே படுத்தால் மிகவும் அதிகப்படும். நடந்து கொடுத்தால் சமனப்படும்.

உபாதை குறைதல் :- மெதுவாக அசைவது, குளிர்ந்த, திறந்த வெளியில் உலாவுவது, குளிர்ந்த பானங்களை அருந்துவது இவைகளினால் எந்த வியாதியும் சற்று குறையும்.

உபாதை கூடுதல் :- சூடான அறை, சூடான காற்று, ஒத்தடங்கள், சூடான பானம் இவைகளினால் நோய் அதிகரிக்கும்.

கவனிப்பு :- (a) அல்லோபதிக் மருந்துகளை முறிக்கவும், (அதாவது கொயினா, பாதரஸம்,) டீ, காப்பி, ஐஸ்கிரீம் இவைகளை அளவுமீறி சாப்பிட்டதால் ஏற்படும் கோளாறுகளை நீக்கவும் முதன் முதலில் கொடுக்க வேண்டும்.

(b) பல்சடில்லா குறிகள் இருந்து, இம்மருந்தினால் குணமடையாத கேஸ்களுக்கு 'சைலீஷியாவை' க் கொடுக்கவும்.

(c) ஆசனத்தில் மூல உபத்திரவத்தின் போது இரத்தம் வடிந்து புஸ்பம் புஸ்பித்த விதமாக ஆசனம் வெளித்தள்ளி வீங்கி இருந்தால் "**பயோனியா**" என்ற மருந்தைக் கொடுக்கவும்.

80. பாப்டீஷியா

(Baptesia)

அதிக பலவீனப்படுத்தும் டைபாய்டு சுரத்திற்கும், இம்மாதிரி நீடித்த சுரத்திற்கும், அதிகமாகத் துர்வாடையுள்ள வயிற்றுப்போக்கிற்கும், சீதபேதி, டிப்தீரியா என்ற தொண்டை அடைப்பான் வியாதிக்கும் கிருமிகளினுண்டாகும் வியாதிகளுக்கும் உபயோகமாகும் மருந்து.

மனக்குறிகள் :- டைபாயிட் சுரத்தில் நோயாளி தன் அங்கங்கள் (கை, கால்கள்) சிதறிக் கிடப்பது போன்று உணர்ச்சி பிரேமை ஏற்பட்டு அவ்அங்கங்களை ஒன்று சேர்க்க முயலுதல். அவ்வாறே தன் படுக்கையைத் துழாவி கை கால்களை அடிக்கடி ஒன்று சேர்த்துக் கொள்ளுதல். தன் உடலில் இரண்டு, மூன்றாகப் பிரிந்து விட்டதுபோன்ற பொய்த்தோற்றம் ஏற்படுதல். பஞ்சமெத்தை போன்ற படுக்கையும் கரடு முரடாகத் தோன்றுதல் உடம்பெல்லாம் புண்போன்ற வலி. ('ஆர்னிக்கா'விலும் இக்குறியைக் காணலாம்.)

முக்கிய குறிகள் :- எந்த வியாதியிலும், வியாதியஸ்தரின், மலம், மூத்திரம், மூச்சு, வியர்வை, சளி, அபானக் காற்று, வாய் இவையாவும் சகிக்க முடியாத அதிக துர்நாற்ற மடிக்கும்.

வியாதிக் குறிகள் :- சுரத்தில் வியாதியஸ்தருக்கு சுரத்தின் வேகத்தைவிட திரேக அசதி மிகுதியாயிருக்கும். உதாரணமாக வியாதியஸ்தரை தூக்கத்திலிருந்து எழுப்பி ஏதேனும் கேள்விகளைக் கேட்டால், பதிலளித்துக் கொண்டே இடையில் தூங்கிவிடுவார். பார்ப்பதற்கு, மிகச் சோர்வுடனும் மனக்குழப்பத்துடன் உற்சாகமின்றியும் போதைப் பிடித்தவன் போன்றும் காணப்படுவான். அவனுடைய மலம் துர்நாற்றமுடனும், மூச்சு அடிக்கடி வேகமாகவும் இருக்கும்.

நாக்கின் குறிகள் :- முதலில் லேசான வெள்ளை மஞ்சள் பழுப்புகோடு ஏற்பட்டு, கடைசியில் காய்ந்து வெடிப்புகள் தோன்றி இரணமாகுதல். நாக்கின் நடுமத்தியில் சிகப்புக்கோடு, பிறகு மஞ்சள் நிறம் நடுமத்தியிலும், ஓரங்கள் பளபளப்பான சிகப்புநிறத்திலும் இருக்கும்.

கவனிப்பு :- மேலே சொன்ன குறிகளுடன்கூடிய வியாதிகளுக்கு 'பாப்டீஷியா'வை, 3, 6x வீரியங்களில் கொடுக்கவும். மேலும் டைபாயிட் சுரங்களுக்கு வழக்கமாய் கொடுக்கப்படுவதும், நிச்சயமாய் குணப்படுத்தக் கூடியதுமான அபூர்வமான மருந்தாகும்.

81. பாரிடா கார்ப்

(Baryta Carb)

இது நோயாளிகளின் திரேகவாகையும், மனப்போங்கையும் கவனித்து அதை ஆதாரமாக வைத்து பற்பல வியாதிகளுக்குக் கொடுக்கலாம்.

முக்கியக் குறிகள் :- உடம்பு இளைத்திருத்தல், வயிறும், தலையும் பருத்திருத்தல் நரித்துப்போய், குட்டை, குள்ளமாக வளர்ச்சி அடைந்த குழந்தைகளுக்கு அவைகளின் அறிவும் மங்கி, குறைந்து மந்த புத்தியுடன்தான் இருக்கும். முகம் கிழட்டுத் தன்மையுடன், அசட்டுக்களை வழிந்தோடும். இதேபோல, வயதானவர்களில் சிலர் ஷி. மனோ நிலைமையினால் சிறு குழந்தைகளைப் போலவே நடந்து கொள்வார்கள். ஏனென்றால் ஞாபகசக்தி மழுங்கிப்போய், அற்றுப்போய் விடுகின்ற நிலைமையில், மறந்துவிடுதல், கவனம் இல்லாமை, மந்தகுணம், பயங்கொள்ளுதல், அவநம்பிக்கை போன்ற நோய்கள் ஏற்பட்டுவிடுகின்றன. கால் பாதங்களில் நாற்றமுள்ள வியர்வை, தலையிலும் வியர்வை காணுதல்.

உபயோகம் :- (1) விசேஷமாக குழந்தைகளுக்கு தொண்டையில் ஏற்படும் கோளாறுகளுக்கு உபயோகப்படுகின்றது. டான்சிலிட்டிஸ் என்ற தொண்டைச் சுரப்பி வீங்குதல். (குறிப்பாக வலதுபக்கமுள்ள சுரப்பி வீங்கி, சீழ் கொள்ளுதல் (உள்ளே நாக்கை அழுத்திப் பார்த்தால் வெண்மை நிறத்துடன் வீங்கியும் வலியுடனும் காணப்படும்.) இவ்வியாதிக்கு காலீமூர் 30 யும், பாரிடா கார்ப் 30 யும் மாற்றி, மாற்றிக் கொடுக்கலாம். மேலும் கழுத்து, காது, தாடை, வயிறு, அக்குள், துடை போன்ற இடங்களிலுள்ள கோளங்கள் (க்ளாண்டு) வீங்கி நெறிகட்டுவதற்கும், பலவிதமான தசைக்கட்டிகளுக்கும் பாரிடா கார்ப், நன்கு வேலை செய்யும்.

(2) நரம்பு சம்பந்தமான பச்சவாத நோய்களுக்கும் உதாரணமாக, வயதானவர்களுக்கு உண்டாகும் நடுக்குவாதமும், எழுதும்போது கை நடுங்குவதும், நிற்கும்போது கால்கள் நடுங்குவதும், தள்ளாடுவதும் போன்ற நிலைமையில் இதைக் கொடுக்கலாம். ஆகாரக் குழாயில் பக்ஷவாத நிலைமையினால், கெட்டியான ஆகாரத்தை விழுங்கமுடியாது, ஆனால் தண்ணீர் போன்ற ஆகாரத்தையே தான் விழுங்கமுடியும். இம்மாதிரி ஆகாரக் குழாய் கோளாறு ஏற்பட்ட சமயங்களில் காய்ச்சல் (சுரம்) இருந்தால் பாப்டீஷியா 8x தான் கொடுக்கவேண்டும்.

(3) பால்யத்தில் கெட்ட பழக்க வழக்கங்களினால் குறிப்பாக முஷ்டிமைதுனம் போன்ற செய்கைக்கு ஆளாகி, அதனின்றும் விடுதலை அடைய விரும்புவதும், மீண்டும் அச்செய்கைக்கு பலியாகி விடுவதுமான, மனக்கோளாறுகளுக்கும், அதனால் ஏற்பட்ட ஆண்தன்மை குறைவிற்கும், மிகவும் நல்ல மருந்து. மேலும் ஷை காரணங்களினால் ஏற்பட்ட கீழ்முதுகு வலி, கீழ்முதுகில் விறைப்பும், நாற்காலியை விட்டு இலகுவில் எழுந்திருக்க முடியாமையும்

போன்ற இடுப்புவலிக்கு 200 வீரியத்தில் கொடுத்துவரவும். (இடையே மெடோரினம் 200 வீரியம் ஒருடோஸ் கொடுக்கவும்.)

கவனிப்பு :- இதற்கு முன்னும் பின்னும் 'கல்கேரியா கார்ப்' கொடுக்கக்கூடாது.

82. பாஸ்பரஸ்

(Phosphorus)

இது பாஸ்வரம் என்ற ரசாயனப் பொருளிலிருந்து தயாரிக்கப்பட்டது. சரீரவாகையும், சிலகுறிகளையும் ஆதாரமாக வைத்து கொடுக்கவேண்டிய மருந்தாகும். அதாவது ஒற்றை நாடியும், மெல்லிய சரீரத்துடன் மிக உயரமாக, வளர்ந்தும் கூட்டுநெஞ்சும், குறுகின மார்பையும் கூனல் முதுகையும் உடையவர்களாகவும் இருப்பார்கள். மேலும் அவர்கள் அதி சீக்கிரத்தில் விஷயங்களை கிரகித்துக் கொள்ளும் சக்தியை உடையவர்களாயும் இருப்பது மிக முக்கிய குறியாகும். எரிச்சல், முதுகுமுள் எலும்பில், கை, கால்களில் அதிகமாக இருக்கும்.

மனக்குறிகள் :- எளிதில் விஷயங்களை கிரகித்தல், தனிமையாய் இருக்கவும், இருட்டைக் கண்டாலும் பயப்படுதல். பரபரப்பும், ஒரு நிமிஷம் கூட அவர்களால் சும்மா இருக்க முடியாது.

முக்கியக்குறி :- பாஸ்பரஸ் கொடுக்கவேண்டிய வியாதியஸ்தர்களுக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டாலும் அவைகளிலிருந்து (கிரியசோட் மாதிரி) அதிகமான இரத்தம் வெளியாகும்.

வியாதியில் குறிகள் :- (1) இருமல், க்ஷயம் போன்ற வியாதிகளில் நோயாளிக்கு பேசமுடியாத நிலைமையும் பலவீனமும், மார்பில் அமுக்கும் உணர்ச்சியும் இடது

பக்கம் படுத்தால் இருமல் அதிகரித்தல், சாயங்காலம் முதல் நடு இரவுவரை ஓயாத இருமல்; பொதுவாக க்ஷயரோகத்திற்கு சிறந்த மருந்து. இருமலில், மஞ்சள் கோழை இரத்தம் கலந்துவரும். இட துடக்கம் வலி இருக்கும்.

(2) வயிறும், வயிற்றோட்டமும் :- வயிற்றில் ஏற்படும் அகோரப் பசியினால் அடிக்கடி ஆகாரம் சாப்பிடவேண்டும் சாப்பிடாவிட்டால் மயக்கம் ஏற்படும். அவ்விதம் சாப்பிட்ட உடனே அல்லது சாப்பிட்ட சிறிது நேரத்தில் மீண்டும் பசி. வயிற்றில் ஒன்றும் இல்லாது போன்ற உணர்ச்சி. ஐஸ்கிரீம், குளிர்ந்த பானங்களில் அதிக விருப்பம். குளிர்ந்த நீர் வயிற்றினுட் சென்று சிறிது நேரத்தில் சூடேறியவுடன் வாயாலெடுக்கப் படுதல். நாள்பட்ட வயிற்றோட்டத்தில், குழாயிலிருந்து திறந்துவிட்ட தண்ணீர் வேகமாய் வருவதேபோல் ஜீர்ணமாகாமல் போகும். ஆசனவாய் அடிக்கடி திறந்து, இச்சை ஏற்படாமல் மலம் தண்ணீர்போல் வெளிப்படும். வயிற்று கடுப்பு நோயிலும் "அபானம்" திறந்தே இருக்கும்; போக்கு ரத்தமாகவே ஏற்படும். அதிகக் கடுப்பும், எரிச்சலுடனும் இருக்கும். மலச்சிக்கலில் மலம் காய்ந்தும், நீண்டு மெல்லியதாகவும் மிகக் கஷ்டத்துடன் வெளியேற்றப்படும். இம்மாதிரி குறிகளிருப்பின் பாஸ்பரஸ் நன்கு வேலை செய்யும். இரத்த மூலத்திலும் இதன் உபயோகமுண்டு.

(3) அதிகக் காம இச்சையினால் ஏற்படும் ஒருவித பைத்தியத்திற்கும், விகாரச் செய்கைக்கும். அதாவது ஆண், பெண் இருபாலரிடையேயும் ஏற்பட்ட காம இச்சை அதிகமாகி தான் என்ன செய்கின்றோம் என்பதை அறியாமல் வியாதிஸ்தர் மர்ம ஸ்தானங்களை பிறர் பார்க்கும் படியாக, தன் ஆடைகளை விலக்கிக் கொண்டும் ஒரு நிலையில் இல்லாமல் அலைவர். இதே செய்கைகளுடன் ஏற்படும் ஹிஸ்டீரியா நோய்க்கும் பாஸ்பரஸ் கொடுக்கலாம்.

காம இச்சையிருந்தும், (நபும்சகத்துவம்) செய்கையில் ஈடுபட முடியாமை. காம இச்சை அதிகமாகி அதனால் உடனே ஸ்கலிதமாகும் ஆண்தன்மை குறைவிற்கும், காம இச்சையே ஏற்படாமலிருப்பவர்களுக்கும் உபயோகமுண்டு. நரம்புத் தளர்ச்சியை நீக்கவும், இருதயத்தைப் பலப்படுத்தவும் ஷை சரீரவாகை உடையவர்களுக்கு கொடுக்கலாம்.

(4) தொண்டை கறகறப்பு, பேசினால், தொண்டையில் வலி, இருமினாலும் வலி, இருமல் முன் இரவில் அதிகமாகி உடல் முழுவதும் நடுங்குதல், முனங்கலுடன் இருமலை அடக்கிக் கொள்வர். இம்மாதிரி ஏற்படும் நிமோனியா என்ற கபவாத சுரத்திற்கு நல்ல மருந்து. ஆனால் வலதுபக்க சுவாச கோசம் தான் பாதிக்கப்பட்டிருக்கும். மேலும் பாதிக்கப்பட்ட பாகத்தின் கன்னம் சிவப்பாகத் தென்படும். இம்மாதிரி டைபாயிட் நிமோனியாவிற்கும் கொடுக்கலாம். இடதுபக்கம் படுக்கமுடியாது, படுத்தால் உபாதை அதிகரிக்கும். ஜலதோஷத்தினால் மூக்கைச் சிந்தும்போது இரத்தம் வெளியாவதற்கும்; இருமலில், காரித் துப்பும்போது ஏற்படும் இரத்தப் பெருக்கிற்கும் பாஸ்பரஸ் நல்ல மருந்தாகும். மூக்கின் முன் எலும்பு புண்ணாகிப் புரையோடி யிருப்பதற்கும், ரத்த ஒழுக்கு துர்நாற்றத்துடன் இருப்பதற்கும், மூக்கில் சதை வளர்வதற்கும் நல்ல மருந்து. ஸ்திரீகளுக்கு மாதவிடாய்க்குப் பதிலாக மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு ஏற்படுவதற்கும் கொடுக்கலாம்.

(5) சுரம், அஸ்திசுரம், சாயங்காலம் 4 முதல் 5 மணிக்குள் ஆரம்பித்தல். காய்ச்சலுடன் படுக்கையில் தூங்கி விடுவான், தாகம் இருக்காது. இரவில் தூங்கும்போது அதிக வியர்வை பிடித்தல், அது பிசுபிசுப்பாக இருத்தல். ஆனால் உபாதைகள் தணிவதில்லை. அடிக்கடி சாப்பிடக்

கூடிய குழந்தைகளுக்கு சளியுடன் காய்ச்சல், துரிதமான மூச்சு, ஆஸ்துமா போன்ற மூச்சுதிணறல் இருப்பின், பாஸ்பரஸ் 30ம் நக்ஸ்வாமிகா 30ம் மாற்றி மாற்றிக் கொடுக்கலாம்.

எச்சரிக்கை :- இந்த மருந்தை 200 க்கு மேற்பட்ட வீரியங்களில் முற்றிப்போன வியாதிகளுக்கு கொடுக்கக் கூடாது. முற்றின க்ஷயரோகத்திற்கு 200 வீரிய மருந்தை ஒருடோஸ் கொடுத்து, பின்னர் நிலைமையை அனுசரித்து வேறு மருந்துகளை கொடுக்கவேண்டும்.

கவனிப்பு :- பாஸ்பரஸ் திரேகவாகை உடையவர்களில் பெரும்பாலோர், ஒவ்வொரு சீதோஷ்ண ஸ்திதி மாறும் காலங்களில், தலைவலி போன்ற உபாதைகளினால் கஷ்டப்படுகின்றார்கள். உதாரணமாக இடியுடன் கூடிய புயல் காற்று அடிக்கும்பொழுது தலைவலி வந்துவிடும். அப்பொழுது பாஸ்பரஸ் கொடுத்தால் குணம் ஏற்படும். புயல் போன்ற பலமான காற்று, (மழை இடியுடன்) ஏற்படுவதற்கு முன்வரும் எந்த உபாதைக்கும் பாஸ்பரஸ் கொடுத்தால் சிறந்த பலனை எதிர்பார்க்கலாம்.

83. பிரையோனியா

(Bryonia)

இந்த மருந்து எல்லாவகை சுரங்களுக்கும், சுரமேயில்லாத பல வியாதிகளுக்கும் உபயோகமாகின்றது. உதாரணமாக அஜீர்ணத்தினால் ஏற்படும் சாதாரண சுரம் முதல், கீல்வாயு சுரம், வாதசுரம், நிமோனியா, புளுரசி, டைபாயிட், சியோடைபாயிட் சுரம், விடாத நீடித்த சுரம் போன்ற கடுமையான சுரங்களுக்கும்; வாதரோக வலிகள் மார்புவலி, தலைவலி, இடுப்புவலி, முழங்கால், கணுக்கால்வலி, இவை களுக்கும், வறண்ட இருமல் சிறிதுகூட கபம் இருக்காது, இருமும்போது மார்பில்வலி, இருமும்போது தன் கை

களினால் மார்பை அழுத்திப் பிடித்துக் கொள்வார். இம் மாதிரி பல வியாதிகளுக்கு 'பிரையோனியாவை'க் கீழ்க் கண்ட முக்கியக் குறிகளை வைத்துக் கொடுக்கவேண்டும்.

மனக்குறிகள் :- சிடுசிடுப்பும், கோபம் திடீரென்று வருதல், ஆனால் உடனே மந்த குணம் ஏற்பட்டு பேசாது இருத்தல். ஜன்னியிலும், மயக்கத்திலும், உளறுவான், தன் தொழிலைப்பற்றி பிதற்றுதல், புது இடத்தில் இருப்பதாக உணர்ச்சி தன் வீட்டுக்குப் போகவேண்டுமென்று அடிக்கடி சொல்லுவான். பெருமூச்சுவிடுவான் நீண்ட மூச்சுவிட அடிக்கடி பிரியப்படுவான். (ஜன்னி போன்ற பிதற்றல் குறிகள் மாலை 3 மணிக்குப் பிறகு அதிகமாகும்.)

விசேஷக் குறிகள் :- வலிகள் போன்ற உபாதைகளில் வலிகள் குத்துவது போன்று இருப்பதும், சிறிது நகர்ந்தாலும், அசைந்தாலும் அதிகரிப்பதும்; வலியுள்ள இடங்களை இறுக அமுக்குவதினாலும், இறுகக்கட்டு வதினாலும் வலிகள் குறைந்து சமனப்படுவதே முக்கியக் குறிகளாகும். எந்த நோயிலும் வியாதியஸ்தர் அசைவின்றி இருந்தால் உபாதை குறைந்தே இருக்கும்.

வியாதியில் குறிகள் :- (1) பொதுவாக எல்லா வியாதியிலும் ஒரே தாகம், வறட்சி இருந்தாலும், குறிப்பாக வயிறு, குடல் சம்பந்தமான வியாதிகளில் வியாதியஸ்தருக்கு அதிகமான வறட்சியினால் வாய், உதடு, வயிறு, ஆசனவாய் போன்ற இடங்களில் காய்ந்து இருப்பதுவும், உதடுகளில் வெடிப்பு ஏற்படுவதும் காணப்படும். அதிக தாகத்தினால் நீண்ட நேரத்திற் கொருமுறை அதிக அளவாக தண்ணீர் குடிக்கப் பிரியப்படுதல் (குடம் குடமாக தண்ணீரைக் குடிப்பார்.) மலச்சிக்கல், மலம் காய்ந்து கருகி பெரியதாயும், உருண்டைகளாகவும் வெளிப்படும். சில சமயம் வயிற்றுப் போக்கு காலையில் ஏற்படும். சிறிது உடலை அசைத்தாலும்

போக்கு அதிகரிக்கும். குறிப்பாக கோடை காலங்களில் வழக்கத்திற்கு மாறுதலாக உணவை அதிகமாக உட்கொண்டதினால் ஏற்பட்ட வயிற்று போக்கிற்கு இதைக் கொடுக்கலாம். வாந்தி எடுப்பதும், தண்ணீரை அதிக அளவாக அருந்துவதும் இக்குறி குழந்தைகளுக்கு இருந்தாலும், பெரியவர்களுக்கு இருந்தாலும் 'பிரயோனியா' கொடுக்கவேண்டும். **நாக்கில் வெண்மையான மாசு** படிந்திருப்பதும் ஓர் முக்கியக் குறியாக நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். இக்குறி பித்தம், அஜீர்ணம் போன்ற காரணங்களினால் ஏற்படும் சுரங்களில் (வெண்மை மாசு) காணப்படுவதை மட்டிலும் ஆதாரமாய் வைத்து 'பிரயோனியா' வை 30 வீரியங்களில் கொடுத்து சுரங்கள் குணமாகியிருக்கின்றது. இம்மாதிரி 'வெண்மையான மாசு' என்ற குறியானது 'ஆண்டிமோனியம் குருடம்' என்ற மருந்துக்கும் இருக்கின்றது. ஆகையினால் மற்ற குறிகளையும் அனுசரித்துப் பிரயோகம் பண்ணவேண்டும்.

(2) **சுரம்.-** கோபம், அவமானம், ஏமாற்றம் இக்காரணங்களினாலும் சுரம் வருவதுண்டு. முன்சொன்ன தாகக் குறியுடன் வாய் வறண்டும், படபடப்பான பேச்சுடனும், சுமார் காலை 9 மணிக்கு ஆரம்பித்து மத்தியானம் 3 மணிக்கு அதிகரிப்பது அல்லது நின்று குறைந்துவிடுவது. இம்மாதிரி மலேரியா சுரத்திற்கும் சாதாரண சுரத்திற்கும் இதைக் கொடுக்கலாம். நோயுற்ற பாகத்தை அழுக்கிப் பிடித்துக் கொள்ளும் தன்மையுடன் கூடிய நிமோனியா, புளூரிசி போன்ற சுரங்களுக்கும், தாய்மார்களுக்கு பால் கட்டுவதினால் ஏற்படும் காய்ச்சலுக்கும், நாக்கில் வெண்மை மாசு, அசதி, மலச்சிக்கலுடன் வரும் டைபாயிட் சுரத்திற்கும் 'பிரயோனியா' வை 30 வீரியங்களில் கொடுக்கவும்.

(3) உடல் பூரவும் வலி, குறிப்பாக இடுப்பில் வலியுடன் ஏற்பட்ட சுரங்களுக்கு இத்துடன் 'ரஸ்டாக்ஸ்'

என்ற மருந்தையும் மாற்றி, மாற்றிக் கொடுக்கலாம். வாத ரோகங்களில் மூட்டுகள் சிவந்தும், வீங்கி விறைப்புடன் குத்தும் வலியும், **அசைந்தால் அதிகரித்தும்** இருந்தால் கொடுக்கலாம்.

(4) சுவாசாசய வியாதிகளில் வறண்ட இருமலும், இருமினால் குறிப்பாக மார்பில் வலியும், அல்லது தலையில் வலியும், ஏற்பட்டு கோழையே இல்லாமலும், இருந்தால் இதைக் கொடுக்கலாம். (சில சமயம் சிறிது கோழை வெளிப்படும்.)

(5) தாய்ப்பால் சுரக்கவைக்க 30, 200, 1000 வீரியங்களிலும் தாய்ப்பால் வற்றவைக்க 3x, 6x வீரியங்களிலும் கொடுக்கலாம். பெண்களுக்கு மாதவிடாய் கருரத்தமாய் அதிக அளவிலும் குத்துவலியுடனும் காணும்; மாதவிடாய் போக்கு தடைப்பட்டு மூக்கிலிருந்து இரத்தம் ஒழுகுதல், இத்துடன் ஏற்படும் தலைவலிக்கும் கொடுக்கலாம்.

கவனிப்பு :- அடிபட்டதினால் எலும்பு மூட்டுகளில் ஏற்பட்ட காயங்களுக்கு ஆர்னிக்காவைக் கொடுத்தும் குணமில்லை என்றால் இதைக் கொடு.

84. பெல்லடொன்னு

(Belladonna)

இது அவ்வப்போது தோன்றி மறையும் வியாதிகளுக்கும், சுரத்துடன் கூடிய எல்லா வியாதிகளுக்கும் ஆரம்பத்தில் உபயோகப்படக்கூடிய ஔஷதமாகும். மேலும் இது அக்கோனைட்டைப் போல் டாக்டர்களுக்கு அடிக்கடி உபயோகமுள்ள முக்கிய மருந்தாகும்.

மனக்குறிகள் :- மிகுந்த அலட்டியம் ஆத்திரத்தில் அவசரமாகப் பேசுதல். மூர்க்க குணம்.

தீவிர ஜன்னியில் :- புத்தி தடுமாற்றம் மிகக் கடுமையாயும், அதிகநேரம் நீடித்தும் இருப்பதில் அருகிலுள்ளவர்களை அடித்தல், கடித்தல், துப்புதல், தன் துணிகளைக் கிழித்தல், உரக்கச் சிரித்தல், பற்களை நறநற வென்று கடித்தல், படுக்கையை விட்டு தப்பித்துச் செல்ல முயற்சித்தல் போன்றும்; பல சமயங்களில் வியாதியஸ்தர் தன் பிரக்ஞையை இழந்து பிதற்றுவார். அதாவது பேய் பிசாசுகளையும், பயங்கரமான மிருகங்களையும் பார்ப்பதாகச் சொல்லுவார். அப்பொழுது தோற்றத்தினால் பயந்து படுக்கையைவிட்டு எழுந்து ஓட ஆரம்பிப்பார்.

விசேஷக் குறிகள் :- எந்த வியாதியும் திடீர் திடீரென்று ஏற்படுவதும், அவ்விதமே மறைவதும் கடுமையாக அடிக்கடி விட்டு விட்டு வலிவருதல், தலையில் அதிகமான சூடு, கண், முகம் சிவ சிவப்பாயிருத்தல். (தலையில் அதிக ரத்தம் சேர்ந்து கூடுவதினால் தலை மிகச் சூடாகவும், கை கால்கள் ஜில்லென்றும் இருக்கும்.) வலிப்புகள், இழுவை இழுத்தல், உடலை முறுக்குதல், கண்களின் பாப்பா (Pupil) விரிதல், துணியால் மூடிய பாகங்களில் வியர்வை போன்ற முக்கியக் குறிகளை பிரதானமாக வைத்து கீழ்க்கண்ட வியாதிகளுக்கு பெல்லடோனாவைக் கொடுக்கலாம்.

உபயோகம் :- (1) **சுரம்** குழந்தைகளுக்கு அவ்வப்போது தோன்றும் காய்ச்சலுக்கும் திடீரென்று சுரம் மிகுதியாய் வரும் வலிப்புகளுக்கும், கணையினால் வரும் வலிப்புகளுக்கும் மிகச் சிறந்த மருந்து. பெரியவர்களுக்கும், குழந்தைகளுக்கும் பொதுவாக துணியினால் போர்த்தியுள்ள பாகத்தில் வியர்வை கசிந்து கொண்டிருக்கும் குறி முக்கியமானதும். அத்துடன் தலைமிகச் சூடாயும், கை கால்கள் ஜில்லென்றும் இருக்கும். கண்கள் நன்றாகச் சிவந்திருக்கும்.

(2) **காலரா** வியாதியில் சிறு நீரைப்பிரிக்க பெல்லடோன்னா 3x வீரியத்தில் கொடுக்கலாம்.

(3) **வயிற்றுவலியில்** வயிற்றைத் தொட்டாலும், சிறிய அதிர்ச்சியிலும் வலி அதிகரிப்பதும்; மேலும் கீழே படுத்தால் வலி கடுமையாகி, எழுந்திருந்து நேராக நின்றால் வலி குறைந்தும், அடிக்கடி விட்டுவிட்டும் வந்தால் பெல்லடோன்னா தான் கொடுக்க வேண்டும்.

(4) **தலைவலி** - மண்டைகளின் நரம்புகள் புடைத்துக் கொண்டும் முகம் சிவந்தும் விண் விண்ணென்று தெறிப்பது போன்றும் தலை சூடாயும், தலையை லேசாக அசைத்தாலும் வலி அதிகரிப்பதும், அதிலும் முக்கியமாகக் கீழே படுத்தால் வலி அதிகரிக்குமானால் இது நல்ல மருந்தாகும். தலை க்ஷவரம் செய்துகொண்ட பிறகு, தண்ணீரில் குளித்த காரணத்தினால் வரும் தலைவலிக்கும் கொடுக்கலாம். சாதாரண தலைவலிக்கும் வழக்கமாய் கொடுக்கப்படும் மருந்து.

(5) **ருமாடிஸம்** என்ற வாதரோகங்களில் மூட்டுகள் நல்ல சிவந்த வீக்கத்துடனும், அதிக உஷ்ணத்துடனும் கடுமையான வலியுடனும் இருந்தால் இதை 30 வீரியத்தில் கொடுக்கலாம்.

(6) **கட்டிகள், சிரங்குகள்** :- தேகத்தில் திடீரென்று காணப்படும் வீக்கம் கடினமாகவும் நன்றாகச் சிவந்தும் அந்த பாகம் சூடாகவும், தொட முடியாத அளவு வலியுடனும் இருப்பதற்கும், கட்டிகள், சிரங்குகள் இவைகளுக்கு ஆரம்பத்தில் கொடுத்தால் அவைகளை முற்றவிடாமல் செய்யும், அல்லது சீக்கிரமாய் ஆற்றிவிடும்.

(7) **இரத்தப் பெருக்கு** :- மாதவிடாயின் போதும், பிரஸவம் ஆனபிறகும் ஏற்படும் இரத்தப் பெருக்கு வியாதியில் வடியும் இரத்தம் நல்ல சிகப்பாயும், சூடாகவும் இருந்தால் இதைக் கொடுக்கலாம்.

கவனிப்பு :- வியாதி எதுவாயினும் ஆரம்பத்திலேயே அதிகக் கடுமையாயும், யாதொரு முன்னறிவிப்பு இல்லாமலும் தோன்றும். மாலை 3 மணி முதல் 6 மணிக்குள் வியாதிக் குறிகள், உபாதைகள் அதிகரித்து கடுமையாகி விடும்.

85. மெக்னீஷியா கார்பானிகா

(Magnesia Carbonica)

இது ஒருவகையான உப்பு. பெரும்பாலும், சிறு குழந்தைகளின் பச்சை நிறமாக, புளிப்பு வாடையுடன் போகும் வயிற்றோட்ட வியாதிக்கு மிகச்சிறந்த மருந்து. நரம்புச் சோர்விற்கும் உடம்பிலுள்ள புளிப்பு வாசனையை அகற்றுவதற்கும் நல்ல மருந்து. பல சமயங்களில் வயிற்றுக் கடுப்பிற்கும் உபயோகமாகின்றது. வயிறு, சிறுகுடல், பெருங்குடலில் வேலைசெய்ய வல்லமை உடையது.

மனக்குறி :- பயந்த சுபாவம், கோபக் குணம் உடையவர்கள் உடலில் பொதுவாக சூடான உணர்ச்சி. பகலில் வியர்வை ஏற்படுவதும், கவலைப்படுவதும்.

உபயோகம் :- (1) . வெட்டும், வயிற்றை இறுகிப் பிடிக்கும், கடுமையான வயிற்றுவலி (காலோசிந்திஸ் மாதிரி வலி) ஆனால் இதில் பச்சையாக மலம் போகும். புளிந்த வாசனையுடன், பச்சையாக போகும் வயிற்றுப் போக்கில், அதிலும் குழந்தைகளுக்கு மிக்க உபயோகப்படுகின்றது. நுரையுடனும், (குளம் குட்டைகளில் காணப்படும் பாசி போன்ற) பச்சை நிறத்துடனும், மலத்தின் நடுவே மெழுகைப் போன்ற வெண்மை நிறத்தில் சிறுசிறு உருண்டைகள் காணப்படும். இக்குறியுள்ள வயிற்றுப் போக்கிற்கும், வயிற்றுக் கடுப்பிற்கும் கண்டிப்பாய் கொடுக்கவும். சில குழந்தைகளுக்கு

ஏற்படும் மலச்சிக்கல் வியாதிகளுக்கு, "மில்க் ஆப் மெக்னீஷியா" என்ற திரவத்தை அடிக்கடி கொடுத்து கெட்டுப் போன குடல்களை சரிப்படுத்த சிறந்த மருந்து.

(2) கெர்ப் ஸ்திரீகளுக்கு ஏற்படும் பல்வலிகளுக்குக் கொடுக்கலாம். சொத்தைப் பற்களில் வலி ஏற்படுதல், வலி தாங்கமுடியாமல், இரவில் நவிட்டால், ஆனால் நடந்து கொண்டே இருப்பதில் சிறிது வலியானது குறையும். மாதவிடாயில், பெண்களுக்கு போக்கு இரவில் அதிகரித்தும், பகலில் பெரும்பாலும் இல்லாமலும் இருந்தால் இதைக் கொடுக்கலாம். அது சமயம் வயிற்று வலியும், பிற்பாடு கறுப்பான, கட்டியான போக்கும் ஏற்படலாம்.

86. மெக்னீஸியா பாஸ்பாரிகம்

(Magnesia Phosphoricum)

இதுவும் பயோகெமிஸ்ட்ரி என்ற பன்னிரண்டு தாது உப்புக்களில் மிக முக்கியமான உப்பாகும். நரம்பு மண்டலங்களின் "கிரேமேட்டர்" என்ற சாம்பல்நிற வஸ்துக்களில் வேலை செய்கின்றபடியால், நரம்பு சம்பந்தமான சகல கோளாறுகளுக்கும், வலிப்புகளுக்கும் மிகச்சிறந்த மருந்து.

முக்கியக் குறிகள் :- வலிகள், நரம்பு, தசை வலிகள், பெல்லடோனாவைப் போல் "பளிச்பளிச்" என்றும், மின்னலைப்போல் தோன்றி மறையும் தன்மையுடனும் இருக்கும். மேலும் வலிகள் கெண்டையேறுதல் போலவும், பிடித்து இழுப்பது போன்றும், குத்துவலிகளாயும்; வலியுள்ள பாகங்களில் முறுக்குவது போலவும், இழுப்பது போன்றும் உணர்ச்சியுடன் வியாதியஸ்தர் தன் உடம்பை முன்பக்கமாக இரண்டாக வளைத்துக் கொண்டும் இருப்பர். வலிகள் எல்லாம் சூடான ஒற்றடங்களினால் சாந்தமடைவது மிக விசேஷக் குறியாகும். (அதாவது ஆர்ஸனிகம்

ஆல்பம் என்ற மருந்திற்கும் சூடான ஒற்றிடங்களினால் சமனமாகின்ற தென்றாலும், வலிகளின் தன்மையில் இந்த இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கின்றது. எப்படி என்றால் மெக்னீஷியா பாஸுக்கு 'எரிச்சல்' இல்லாத இழுக்கும் வலியையும்; ஆர்சனிகம் வலிகள் எரிச்சலுடன் கூடியும் அசதியுடனும் காணப்படும், எரிச்சல் குணம் இருக்கும் வலிகளுக்கு 'மெக்னீஷியா பாஸ்' பிரயோஜனப்படாது.) முக்கியமாக வலதுபக்கமே பாதிக்கப்படும்.

உபயோகம் :- (1) **சுரம், காய்ச்சல் இல்லாமல்,** குழந்தைகளுக்கு பல் முளைக்கும் காலத்தில் ஏற்படும் வலிப்பு, இழுப்பு நோய்களுக்கும்; (சுரத்துடன் கூடிய வலிப்புகளுக்கு 'பெல்லடோன்னா'வைக் கொடுக்கவும்) வயிற்று வலி, இடுப்புவலி, விலா எலும்பில் வலி, முகத் தசைகளில் வலி, பல்வலி அல்லது வேறு இதர வலிகளுக்கும் கொடுக்கலாம்.

(2) அச்சுக் கோர்ப்பவர்கள், வீணை, பிடில் வாசிப்பவர்கள், அதிக எழுத்து வேலை செய்பவர்கள், இவர்களின் விரல்களில் கெண்டை யேறுவதற்கும்; கர்ப்ப ஸ்திரீகளின் கை, கால்களில் கெண்டையேறுவதற்கும் மிகச் சிறந்த மருந்து (மெக்னீஷியா பாசும், கல்கேரியாசும் மாற்றி மாற்றிக் கொடுக்கவும்.)

(3) பெண்களின் மாதவிடாய் வழக்கத்திற்கு முன்னதாகவே ஏற்பட்டு, போக்கு ஆரம்பிப்பதற்கு முன் கடுமையான வலி இருக்கும். ஆனால் போக்கு ஆரம்பித்தவுடன் வலி குறைந்துவிடும். பொதுவாக மாதவிடாயின் போது ஏற்படும் சகல வயிற்று வலிகளுக்கும் முதன்மையான மருந்து.

(4) வாந்திவரும் உணர்ச்சியுடன் சதா ஏற்படும் விக்கலுக்கும், கண்களில் தண்ணீர் ததும்பும் கொட்டாவி, அடிக்கடி கொட்டாவி ஏற்படுவதற்கும் நிகரற்ற நிவாரணி

(இவ்வியாதிக்கு காலிபாஸ் 30x, மாக்பாஸ் 30xம் மாற்றி மாற்றிக் கொடுக்கவும்.)

கவனிப்பு :- (a) வலிபோன்ற சகல உபாதைகளும் குளிரினாலும், இரவுகளிலும் அதிகரிக்கும். உஷ்ணத்தினாலும், சூடான ஒற்றிடங்களினாலும் சமனப்படும்.

(b) 6, 30 வீரியங்களை சூடான தண்ணீரில் கலந்து கொடுத்தால் நன்கு வேலை செய்கின்றது. உயர்ந்த வீரியங்களை அவ்விதம் கொடுத்தால் பலன் ஏற்படுவதில்லை.

(c) குழந்தைகளுக்கு 6 மாதத்திற்குப் பின் சுமார் 2 வயது வரையிலும் அதன் விலாப்புற அல்லைகளில் குழி விழும் இழுவையுடன் கூடிய "வளர்க்கின்ற கணை" என்ற நோய்க்கு மெக்னீஷியா பாஸ் 200 வீரியத்தில் வாரம் இருமுறை 8 வாரங்கள் கொடுக்கவும்.

87. மெதாரினம்

(Medorrhinum)

விலைமாதர்களின் சேர்க்கையினால் ஏற்பட்ட மேக வெட்டை வியாதியினால் கோளாறான உடல் வாகை சீர்திருத்தவும், நீடித்த வெட்டைக்குப் பின் ஏற்படும் வாத ரோகங்களுக்கும் இந்த மருந்து தேவைப்படுகின்றது. சைகோஸிஸ் என்ற விஷத்தை (மியாசம்) போக்கவல்லது.

முக்கியக் குறிகள் :- உள்ளங் கால்களில் வலி. தொட்டாலும் வலி. அதனால் கால்களை ஊன்றி நடக்கமுடியாமை. இடுப்பு மூட்டுகளில் வலியும், விறைப்பும், வீக்கமுடன் எலும்பு மூட்டுகளில் வலி. அதிலும் அவ்வலியானது பகல நேரங்களில் அதிகரித்தும், இரவில் குறைந்தும் இருக்கும். உபாதைகள் பகலில் அதிகரிப்பது முக்கியக் குறியாகும். முக்கியமாக குதியங்கால்களில் வலியும் விறைப்பும், சற்று வீக்கம் கணுக்கால்களில் இருக்கும். கால்களில் வியர்வை.

மனக்குறிகள் :- மிகவும் அவசரக்குணம், அற்பக் காரியங்களுக்குக் கூட கோபப்படுதல். தனது வியாதி குணமாகும் என்ற நம்பிக்கையை இழந்து, தற்கொலை செய்து கொள்ளும் நோக்கத்தினால் ஏக்கம் பிடித்திருப்பார். [illegible] பேசமுடியாது மிகவும் [illegible] பேச் [illegible] இ[illegible]

உபயோகம் :- (1) நீடித்த மேகவெட்டைக்கும், வாத ரோகங்களுக்கும், மேகவெட்டையை அமுக்கியதால் ஏற்படும் இடுப்பு வலிகளுக்கும், கணுக்கால் வீக்கத்திற்கும், எந்த ஒரு வியாதியும் பிடிவாதமாய் காணப்பட்டால் இந்த மருந்தை 200 வீரியத்தில் ஒரே ஒருடோஸ் கொடுத்து பின்னர் வேறு மருந்துகளைக் கொடுக்கவும். உதாரணமாக, பிடிவாத குணமுள்ள நீர்க்கோர்வை, சுவாசகோச வியாதிகள், மூக்கடைப்பு, பிடிவாத இரத்த வெட்டை, வெள்ளை ஒழுக்கு முதலியன.

(2) மிகவும் சயாஙலப்பேர்வழிகளுக்கு ஏற்படும் **கொட்டாவி**, நீண்ட கொட்டாவி, அடக்கமுடியாத கொட்டாவி அடிக்கடி தோன்றுவதற்கு மெதாரினம் 200 ஒரு டோஸ் கொடுத்து பின்னர், மெக்னீஷியாபாஸ், காலிபாஸ் 30 வீரியங்களில் கொடுக்கவும்.

(3) **சர்மக் கோளாறு :-** சில குழந்தைகளுக்கு பிறந்த சில நாட்களில் குண்டிப்பக்கம், ஆசனத்துப்பக்கம்போன்ற இடங்களில் நெருப்பைப் போன்ற சிவந்த நிறத்தில் காணப்படும் சர்மக் கோளாறுக்கும், செப்புத் தகட்டின் நிறம் போன்று கன்றிய சிவப்பு நிறத்தில் காணப்படும் திட்டுகளுக்கும் இம்மருந்தைக் கொடுக்கவும்.

(4) [illegible] நோயில் கடுமையான அரிப்பும், ஏராளமான [illegible] இருப்பின் இதைக் கொடுக்கலாம். பொதுவாக உடல் பூராவிலும் அரிப்பும், அதை நினைத்து

விட்டால் அதிகமான அரிப்பு ஏற்படும். சில பெண்களுக்கு பகலில் யோனிக்குள்ளும் யோனிக்கு வெளியிலும் ஏற்படும் அரிப்புகளுக்கு கைகண்ட மருந்து

கவனிப்பு :- (a) மயக்கம், க்ஷீணம் ஏற்படும் நிலைமை இம்மாதிரி அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டும், [illegible] நாட்களாக இருக்கக் கூடிய [illegible] கொண்டு வீசுவதும். சுத்தமான காற்றை பெறுவதற்கு அடிக்கடி தன் அறையை விட்டு வெளியே வந்துவிடுவார். இப்பேர்வழிகளுக்கு 'மெதாரினம்' ஒருடோஸ் கொடுத்து பின்னர் வேறு மருந்துகளைக் கொடுக்கவும்.

(b) குஷ்டமோ என்று நினைக்கும்படியான அளவில், சர்மத்தில் செந்நிறத் திட்டுகள், கண்இமை புருவங்களில் இருந்தாலும், வேறு இதர பாகங்களில் இருந்தாலும் (அத்திட்டான பாகம் உணர்ச்சி குன்றியும்) ஊசி கொண்டு குத்தினால் உணர்ச்சி அவ்வளவாக ஏற்படாத நிலைமையில் இருப்பின்; அவர்களுக்கு தினமும் காலையில் நேட்ரம் மூர் 6x ஒரு டோசும், இரவில் நக்ஸ்வாமிகா 6x ஒரு டோசும் வீதம் கொடுத்துக் கொண்டு வாரத்திற்கு ஒரு தடவையாக மெதாரினம் 200 வீரியத்திலும், சிபிலினம் 200 வீரியத்திலும் கொடுத்துவர சில வாரங்களில் டை திட்டுகள் மறைந்துவிடும்.

(c) டை சர்ம நோய்களைத் தவிர இதர வியாதிகளுக்கு மெதாரினம் 200 வீரியத்தில் ஒருவேளை மருந்தே போதுமானதாகும். அத்துடன் ஆரம்ப வெள்ளை வெட்டை வியாதிக்கும். வாதரோகத்திற்கும் இம்மருந்தைக் கொடுக்கக் கூடாது. சில பெண்களுக்கு இரத்த ஒழுக்கு நீடித்திருக்குமாயின் இதை 200 வீரியத்தில் ஒருடோஸ் கொடுத்தால் பலன் ஏற்படும்.

88. மெர்கூறியஸ் கரோசிவஸ்

(Mecurius Corrosivus)

பாதரஸம் சம்பந்தப்பட்ட மருந்துகளில் இதுவும் ஒரு விதமாகத் தயாரிக்கப்பட்டு ஹோமியோபதி முறையில் மிகச் சிறப்பாக உபயோகமாகின்றது.

முக்கியக் குறிகள் :- சீதபேதியில், ரத்தம், சீதம் கலந்தும், அதிகமானவலி, அதாவது "மெர்குரி சொலுபுலிஸ்"க்கு இருப்பதைவிட, மிகக் கடுமை, மலம் கொஞ்சமாக சொட்டு, சொட்டாகவும், சீழும், ரத்தமும் ஏராளமாயும், ஆசனவாயில் கடுப்பு எப்பொழுதும் இருந்து கொண்டும் (அதாவது மலம் போகும் முன்னும், மலம் போகும் போதும், மலம் போன பிறகும்) இருப்பது தான் முக்கியக் குறி. அத்துடன் ஏக காலத்தில் நீர்த்தாரையிலும் இம் மாதிரி கடுப்பு வலியுடன் சிறுநீர் சொட்டு சொட்டாய் பிரியும். இம்மாதிரி குறி வெள்ளை வெட்டை நோயில் இருக்கும். பல் ஈறுகள் வீங்கி இரத்தம் வடியும்.

உபயோகம் :- (1) மேற்படி குறியுடன் கூடிய சீதபேதி என்ற வயிற்றுக் கடுப்பு வியாதிக்கு, 'மெர்கூறியஸ் கரோஸிவஸ்' 30 வீரியத்திலும், கொடுத்துக் கொண்டு இடையிடையே அக்கோனைட் 30 வீரியமும் கொடுத்தால் நிச்சியமாய் பலன் ஏற்படும்.

(2) தொண்டை அழற்சி நோயில், தொண்டையில் இறுக்கும் உணர்ச்சியும்; கடுமையான வேக்காடும், வீக்கமும் எரிச்சலும் இருக்கும். விழுங்கும்போது தொண்டையில் கடுமையான வலி இருக்கும். வாயில் பற்களின் ஈறுகளில் வீக்கத்துடன் இரத்தம் கொட்டும்.

(3) மேகவெட்டை நோயில் பச்சை அல்லது பச்சை கலந்த வெண்மை நிறத்துடன் வெட்டை நீர் வெளிப்படும்-

மிக முக்கியக் குறியான, கடுப்பும், எரிச்சலும் கடுமையாகி சிறுநீர் சொட்டு சொட்டாகப் பிரியும்.

கவனிப்பு :- பகலில் அதிகச் சூடும், அதிகக் குளிர் உள்ள இரவிலும், காலை, இரவு நேரங்களிலும், புளிப்புப் பதார்த்தங்களினாலும் உபாதைகள் அதிகமாகும். ஒவ்வொரு அசைவிலும் வியர்வை தோன்றும். எந்த வியாதியிலும் மெர்குறி சொலுபுலிஸ்'க்கு உண்டான குறிகள் ஒத்திருந்து, வியாதியின் உபத்திரவம் கடுமையானால், மெர்கூறியஸ் கரோஸிவஸ் கொடுக்கலாம்.

89. மெர்கூறியஸ் ஸொலுபுலிஸ்

(Mercurius Solubulis)

பாதரஸம் என்ற ஒருவகைப் பொருளை அப்படியே வீரியப்படுத்தித் தயாரிக்கப்படும்போது மெர்கூறியஸ் ஸொலுபுலிஸ் என்றும், ரசாயன முறையில் அதைப் பவுடராக மாற்றி அப்பவுடரை வீரியப்படுத்தித் தயாரிக்கப்படும் போது மெர்கூறியஸ் வீவஸ் என்றும் பெயர்கள் அழைக்கப்படுகின்றன. இவ்விரண்டிற்கும் குறிகளைப் பொருத்த வரையில் ஒன்றாகத்தான் இருக்கின்றது. வித்தியாசங்கள் எதுவும் இல்லை.

முக்கியக் குறிகள் :- வியாதி எதுவாயினும் வியர்வை வியர்த்துக் கொண்டும், அதனால் உபாதைகள் தணிவதுமில்லை. (தணியாமலிருப்பது முக்கிய குறி.) வாயில் சதா உமிழ்நீர் ஊறிக்கொண்டேயிருக்கும், 'புளிச் புளிச் என்று எச்சிலை துப்பிக் கொண்டிருப்பர். இதனால் நாக்கு ஈரமாயிருப்பினும் அதிகமாகத் தாகம் எடுக்கும். பல் ஈறுகள் பலமில்லாமலும், ரத்தக் கசிவுடனும், இரணமாகவும் இருக்கும். சொத்தைப் பற்கள் வலி எடுக்கும். வியாதிகள் இரவில் அதிகரித்தல், அதிலும் விசேஷமாக படுக்கையின் சூட்டினால் அதிகரிக்கும்; வலது பக்கமாய்

படுத்தாலும் அதிகரிக்கும். சுரப்பிகள் எல்லாம் தாக்கப்படுதல். புண்ணை ஏற்படுத்தும் குணம். சீழ்கோர்க்கும் குணம். மயிர் சிலிர்க்கும் குளிர். மலம் கழிக்க அடிக்கடி தூண்டுதல். சீதபேதியில் அதிக முக்கலும், கடுகடுப்பும்; கடுப்பு மலம் கழிந்த பிறகு இருந்து கொண்டேயிருக்கும்.

நாக்குக் குறி :- நாக்கு தடித்தும், எச்சில் ஊறிக் கொண்டும் பற்களின் சுவடுகள் படிந்தும் காணப்படும். (நாக்கில் புண்கள் கூட காணப்படும்.)

உபயோகம் :- (1) முக்கியமாகக் கிரந்தி நோய்களுக்கும், மேகவெட்டை வியாதிகளுக்கும் ஆரம்பத்தில் கொடுக்கக் கூடிய மருந்து. சர்மத்தில் தாம்பிர சிகப்பு நிறமான, தழும்புகள் வட்ட வட்டமாக ஆங்காங்கே ஏற்படுவதற்கும், தாம்பிரச் சிகப்பு நிறத்தில் உண்டான கிரந்தி கொப்புளங்களுக்கும் இதைக் கொடுத்தால் நிச்சியமாய் நிவாரணமளிக்கும்.

(2) சீதபேதியில் அதிக முக்கலுடனும், இரத்தம் கலந்தும், பச்சையாயும், மஞ்சளாயும், பச்சையும் மஞ்சளும் கலந்தும், சீதமாகவும் இரத்தம் அதிகமாகவும் அடிக்கடி போகும். கடுப்பு இருந்து கொண்டேயிருக்கும். சுரமும் இருக்கும். இம்மாதிரிக் குறிகளுள்ள, கல்லீரல் பெருத்திருக்கும் (Liver Enlargement) இதைக் கொடுக்கலாம். இந் நோயுள்ள குழந்தையோ, பெரியவர்களோ வலது பக்கம் படுக்கமாட்டார்கள். (படுக்கவும் முடியாது)

(3) வாய் நாற்றம். மூச்சுக்கூட நாற்றம் அடிப்பதற்கு சிறந்த மருந்து. டாப்ட்டன், தொண்டைப்புண், (டான்சிலிட்டிஸ்) என்ற நோயில் எச்சில் ஊறியும், மஞ்சள் நிற சீழ் தன்மையும் இருந்தால் 30 வீரியத்தில் கொடுக்கவும்.

(4) இந் முக்கியக் குறிகளுடன், கட்டிகளை, ரத்தக் கட்டிகள், கொப்புளங்கள் தோன்றி பழுக்கும் தருணத்தில்.

இரவில் வலி அதிகரிக்குமானால் இதைக் கொடுக்கலாம் கட்டிகளுக்கு ஆரம்பத்தில், பெல்லடோனா கொடுத்து பிறகு பழுக்கும் நேரத்தில் மெர்குரி ஸொலுபுலிஸ், அல்லது ஹீப்பார் சல்பர் இவைகளை குறிகளின் தன்மையை அறிந்து கொடுக்கவும். தாளம்மை என்ற கழுத்து, காது, தொண்டை வீக்கத்திற்கு முதன்மையான மருந்தாகும்.

(5) தொடையிடுக்குகளில் வரும் அரையாப்பு கட்டிகளை உடைப்பதற்கு குறைந்த வீரியத்திலும், உடையாமலும், சீழ் உண்டாக விடாமலும், உள்ளே அமுக்கப்படுவதற்கு உயர்ந்த (200 வீரியங்களில்) கொடுக்கவும்.

(6) ஆண்குறி, பெண்குறி, தலை, காதுப் பக்கம் உள்ள சுரப்பி முதலிய இடங்களில் ஏற்படும் இரணம் அகலமாயும், ஆழமில்லாமல் சுற்றளவு அதிகமாகவும், கோழை போன்ற நிறத்தில் சீழ்பிடித்தும், கொழுப்பு படர்ந்தாற் போலும், பகலில் வலியில்லாமலும், இரவில் வலியுடனும் இருந்தால் இதைக் கொடுக்கலாம்.

கவனிப்பு :- சர்மம் வறண்டு காணப்படும் வியாதியஸ்தர்களுக்கு இம்மருந்து பிரயோஜனப்படாது. நாக்கில் உமிழ்நீர் சதா ஊறிக்கொண்டிருக்கும் குறி பிரதானமாக இருந்தால் எவ்வியாதிக்கும் மெர்கூரியஸ் ஸொலுபுலிஸ் தான் கொடுக்க வேண்டும். அத்துடன் வியர்வையும் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டே இருப்பதும் முக்கியக் குறியாகும். இக்குறிகளை வைத்து இடதுபக்க டான்சிலிட்டிஸ் என்ற தொண்டை வீக்கம் சிவப்பு அல்லது செந்நிறத்திலிருந்த ஒரு வியாதியஸ்தருக்கு இந்த மருந்தை 200 வீரியத்தில் ஒருடோஸ் கொடுத்தவுடன் இந் வியாதி குணமாகிவிட்டது. இதனால் பலன் கிடைக்காத இடதுபக்கம் ஏற்படும் டான்சிலிட்டிஸ் நோய்க்கு மெர்குரி பின் அயோடைட் என்ற மருந்தைக் கொடுக்கவும்.

90. யூபடோரியம் பர்போலியேட்டம்

(Eupatorium Porfoliatum)

இது தாவர வர்க்கத்தைச் சேர்ந்த மருந்து. கடுமையானவலி, எலும்புகளில் நொறுக்கும்வலி, உடம்பு முழுவதிலும் அடிபட்டது போன்ற வலியுடன் ஏற்படும். டெங்கு சுரம் (கை, கால், முதுகு எலும்புகள் முறிந்து விட்டது போல் உள்ள வலியுடன் வரும் சுரம்) மலேரியா சுரம், இன்புளுயன்சா சுரம், பித்த சுரம், விட்டு விட்டு வரும் முறை சுரங்களுக்கும் முக்கியமான மருந்து.

முக்கியக் குறிகள் : தாகம், தண்ணீர் குடித்தால் வாந்தி அதிகமாகிவிடும். நடக்க ஆரம்பித்தால் வலிகள் அதிகரிக்கும். உடல் பூரவும் எலும்பை நொறுக்கும் கடுமையானவலி முறை சுரங்களில் முக்கியமாக குளிர் நிலைமை மாறி சுரம் ஆரம்பிக்கும்போது கசப்பான பித்தத் தண்ணீர் வாந்தியெடுக்கப்படுதல் தான் இம்மருந்தைக் கொடுப்பதற்கு முக்கிய திறவுகோல் ஆகும். நாக்கு மஞ்சளாயும், வியாதியஸ்தர் வலியினால் நிலைகொள்ளாமலும் இருப்பார்.

உபயோகம் :- (1) ஷை குறிகளுடன் கூடிய சாதாரண பித்தசுரம், முறைசுரம், இன்புளுயன்சா, மலேரியா போன்ற விட்டு விட்டு வரும் சுரங்களுக்கு 'பாப்டீஷியா' வையும், இம்மருந்தையும் மாற்றி, மாற்றி கொடுக்கலாம். எலும்பு வலி இல்லாவிட்டாலும், முறைசுரமானது காலை 7 மணி முதல் 9 மணிக்குள் தோன்றி, குளிர், சுரம், பித்தமாக வாந்தியும் ஏற்பட்டு விட்டால் உடனே 'யூபடோரியம்' தான் கொடுக்கவேண்டும். இன்புளுயன்சா சுரத்தில் முணங்குவதும் எலும்புகளில் கடுமையான இசிவுவலி தோன்றி நிலைகொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தால் கண்டிப்பாய் இதைக் கொடுக்கவும். மேலும் தொண்டை-

யில் சளி இறுக்கத்தினால் காலை நேரங்களில் கரகரப்பும், மார்பில் இரணவலி, இசிவு வலியுடன் தோன்றும் சகல நுரையீரல் (சுவாச கோச) வியாதிகளுக்கும் உபயோகப்படும்.

கவனிப்பு :- மலேரியா போன்ற முறை சுரங்கள் அடிக்கடி உண்டான காரணத்தினால் கால், பாதங்களில் மட்டும் ஏற்படும் நீர்ச்சுரப்புள்ள வீக்கத்திற்கு, இம்மருந்தையும் 'நேட்ரம் மூர்' என்ற மருந்தையும் மாற்றி, மாற்றிக் கொடுக்கலாம். ஷை வீக்கம் வயிற்றிலும் இருந்தால் 'நேட்ரம் சல்ப்' கொடுக்கவும்.

91. யூபரேஷியா

(Euphrasia)

முன் காலத்தில் ஒருவகைச் செடியின் இலைகளின் மேலே, நம் கண்களின் கருவிழியைப் போன்ற கறுப்பு நிறப் புள்ளிகள் இருப்பதைக் கண்டு, கண்களின் வியாதிகளுக்கு இம்மருந்து உபயோகப்படும் என்று "குத்து மதிப்பாக" மதித்து அதை எடுத்து மருந்தாக உபயோகித்து வந்தார்கள். நம் ஹோமியோபதி முறைப்படி அதை பரீக்ஷை செய்து பிரயோகம் செய்த பின் ஷை குத்து மதிப்பானது சரி என்று தெரியவந்தது. ஆகையினால் கண்களைப் பற்றிய சில வியாதிகளுக்கு முக்கியமாய் கொடுக்கப்படுகின்றது.

முக்கியக் குறிகள் :- கண்களிலும், மூக்கிலும் தண்ணீர் வடிதல் கண்களிலிருந்து ஒழுகும் நீர் **காரத்தன்மை** யுடனும், மூக்கிலிருந்து வடியும் நீர் காரத்தன்மையில்லாமலும் இருக்கும் (இக்குறி அல்லியம் சீபாவிற்கு நேர் எதிரிடை.)

உபயோகம் :- (1) ஷை குறியுள்ள ஜலதோஷத்திற்கும், பகலில் மட்டும் ஏற்படும் இருமலுக்கும் (இரவில் இருமல்

இருக்காது) இம்மாதிரி பகலில் மட்டும் ஏற்படும் இருமல் வியாதிக்கு (பெர்ரம் பாஸ், நேட்ரம் மூர்) இவைகளும் உபயோகப்படுகின்றது.

(2) **கண்பீளை** ஏற்பட்டு அதனால் கண்பார்வை தடைப்பட்டு, ஷை பீளையை வெளிப்பேற்ற அடிக்கடி கண்களை சிமுட்டுதல் அல்லது இமைகளை கைவிரல்களால் அமுக்கிவிடுதல். இம்மாதிரி குறிகளுடன் கூடிய கண் வலிகளுக்கும் கண்ணில் ஏற்படும் இரணங்களுக்கும் உள்ளேயும் இம்மருந்தை 6x வீரியத்தில் கொடுத்தும், வெளிப் பிரயோகமாக, இதன் தாய் திராவகம், ஒரு பங்கும், தண்ணீர் 10 பங்கும் சேர்த்த லோஷனைக் கண்களில் விட்டு வர நல்ல பலன் உண்டாகும். இரவு, பகல் எந்த நேரமும் கண்களில் ஏற்படும் நீர் வடிதலுக்கு (காரமான நீர் ஒழுகினால் 'யூபரேஷியாவும்.' காரமேயில்லாத நீர் வடிந்தால், நேட்ரம் மூர் 30 வீரியங்களில் கொடுத்து வந்தால் ஷை நோய்கள் மறைந்துவிடும். காலையில் சில குழந்தைகளுக்கு கண் இமைகள் ஒட்டிக் கொள்வதற்கும். பீளை தள்ளமுடியாமல் பிதுங்கிக் கொண்டிருப்பதற்கும் மிகச்சிறந்த மருந்து.

கவனிப்பு :- ஒரு அவுன்ஸ் டிஸ்டில் வாட்டரில் 12 துளிகள் யூபிரேஷியா தாய் திராவகமும், 8 கிரைன்ஸ் போரிக் பவுடரும் கலந்து ஷை கண் நோய்களுக்கு போட்டு வந்ததில் நல்ல பலன் ஏற்பட்டது. (அனுபவக் குறிப்பு) கண் பார்வை மங்கல் நீங்கி, பிரகாசமான பார்வையும் உண்டாகிறது.

(2) **சக்கிலச சுரப்பிகளின் வேக்காட்டினால்** இரவில் மூத்திரப் பையில் ஒருவித வேதனை ஏற்பட்டு மூத்திரம் கழிக்க அடிக்கடி எழுந்திருக்க நேரிடும். இக்குறிகளை உடைய வியாதியஸ்தருக்கு யூபரேஷியாவை 30x வீரியத்தில் மூன்றுதினம் தண்ணீரில் 5 சொட்டு வீதம் காலை, மாலை

கொடுத்ததில் ஷை நோய் தீர்ந்தவுடன் உடம்பிலும் ஒருவித சக்தியும், பலமும் ஏற்பட்டது. பசியும் நன்றாக எடுந்தது. இரத்தமும் சுத்தியானதினால் சுக்கிலத்தின் நிறமும் பிரகாசமான, நல்ல தெளிவான வெண்மை நிறத்தில் மாறியிருப்பதாக ஷை நோயாளி கூறினார். மேலும் ஷை யாருக்கு கண் பார்வையும் மிகத் தெளிவாயிருக்கின்றதாம்.

(3) வயிற்றுவலி மறைந்தால் **கண்வலி**, கண்பார்வை மங்குதல்; கண்களைப் பற்றிய கோளாறுகள் மறைந்தால் உடனே வயிற்றில் வலி ஏற்படும். இம்மாதிரி மாறி மாறித் தோன்றினால் இதை 6 வீரியத்தில் கொடுக்கவும்.

92. ரஸ்டாக்ஸி கோடண்ட்ரன்
(Rhustoxi Codendron)

இந்த மருந்து தாவர வர்க்கத்தைச் சேர்ந்த மிகக் கொடிய விஷமுள்ள செடியிலிருந்து தயாரிக்கப்படுகின்றது. பிரயோனியா என்ற மருந்துக்கு அனேக சமயங்களில் உதவி செய்யும் மருந்தாகும். மேலும் அமைதியின்மை மருந்துகளாகிய, அக்கோனைட், ஆர்ஸனிக்கம், இவைகளுடன் இதையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். சரீரத்தில் ஏற்படும் வலிகளே அமைதியின்மைக்குக் காரணமாகின்றது இம்மருந்தின் வலிகள் சரீரத்தை அசைத்தும், இங்கும் அசைந்து கொடுப்பதினால் தற்காலிகமாக சமனமாகின்றது.

முக்கியக் குறிகள் :- இம்மருந்து கொடுக்க வேண்டிய வியாதியஸ்தர்கள், அடிக்கடி படுக்கையில் புரண்டு கொண்டும், அங்கும் இங்கும் அசைந்து கொண்டும் இருப்பார்கள். வியாதி முற்றிய நிலையில் மயக்கத்துடனும், மெதுவாகப் பிதற்றிக் கொண்டும்; கேள்விகள் கேட்டால் நக்கலிலும் சொல்லுவார்கள். மிக்க விசேஷக்குறி என்னவென்றால், நோயாளியின் நாக்கின் நுனியில் முக்கோண

வடிவமுள்ள ஓர் சிவப்பு அடையாளம் காணப்படும். அல்லது சிவந்த டாகம் நுனியில் இருக்கும், சிலருக்கு உலர்ந்தும், கருப்பு சிகப்பு மாசுபடிந்தும் இருக்கலாம்.

உபயோகம் :- (1) சாதாரண சுரங்கள் (கொல்லைக்கு தண்ணீர் போன்றும் போவதுடன் ஏற்படும் காய்ச்சல்) டைபாயிட் என்ற சுரத்திற்கும், நிமோனியா என்ற கப சுரத்திற்கும், சாயங்காலம் மிக அதிகமாகும் சாதாரண சுரங்களுக்கும் இது உபயோகமாகின்றது. முறைசுரம், விட்டு விட்டு வரும் குளிர் சுரங்களில், குளிர் இருக்கும் போது இருமல் ஏற்பட்டால் இதைக் கொடுக்கலாம். (வரண்ட இருமல்).

(2) **இடுப்புவலி.** வாதரோகத்தின் வலிகள் நடக்க ஆரம்பித்தவுடன் வலி ஏற்பட்டு நடக்க, நடக்க வலிகள் (மெதுவாக நடந்து கொண்டேயிருந்தால்) சௌகரியமாயிருந்தல். இம்மாதிரி வலிகளுக்கும்; மழையிலும், ஈரத்திலும் நனைந்து இருந்த காரணத்தினாலும், கனமான பொருள்களை மிகவும் சிரமத்துடன் தூக்கியதினாலும், அதிக உடல் உழைப்பினாலும், தேகத்தின் தசைகளில் பிடிப்பும், இசிவும் வலியும் ஏற்படுவதற்கும் முக்கியமான மருந்து.

(3) **உமிழ்நீர்க கோளங்கள்** (சுரப்பிகள்) தாடை ஜ்லைகளில் வீக்கம் வலி எக்காரணத்தினால் ஏற்பட்டாலும் இதை, 30 வீரியத்தில் கொடுக்கவும். டிப்தீரியா என்ற தொண்டை அடைப்பான் வியாதிக்கும் கொடுக்கலாம். மேற்குறிகள் இருக்கவேண்டும்.

(4) **சர்மக் கோளாறுகள்** :- அரிப்பு, சொறிசிரங்கு, சிறு கொப்புளங்களுடன் கூடிய சிரங்குகள், கரப்பான்படை. அதாவது சிறு குழந்தைகளுக்கு கை, கால்களில் மங்கிய கட்டுக் கலில் தோன்றும் சிறு கொப்புளங்களில் சீழ் இல்லாமல் ஊனீர் மட்டும் வடியும். இம்மாதிரி வியாதியில்

அமைதியின்மையும் மந்தமான உணர்ச்சியும் காணப்படின் இதைக் கொடுக்கலாம். பெரியம்மை, நீர் குளுவான் அம்மை நோய்களிலும் அடிக்கடி இம்மருந்து தேவைப்படும். (அதாவது அம்மைக் கொப்புளங்கள் நிறம் மாறி டைபாய்டு சுரக்குறிகள் ஆரம்பிக்கும்போது கொடுக்க வேண்டும்.)

(5) **இளம்பிள்ளை வாதம்** :- பெரியவர்களுக்கு குளிர் காற்று தாக்கப்பட்டு, ஈரத் தரைகளில் படுத்திருப்பதைத் தவிர்த்தும், குளிரும் ஈரமுமுள்ள தரைகளில் சதா இருப்பதினாலும், ஏற்படும் வாதரோகத்திற்கும்; பெரும்பாலும் வெடி காரணங்களினால் குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாத நோய் ஏற்பட்ட சமயங்களில், 30, 200 வீரியங்களில் இம் மருந்தைக் கொடுத்து குணமாக்கலாம்.

கவனிப்பு :- சுளுக்கு, சுளுக்குபோன்ற வாதவலிகள், வியாதி நேரங்களில் அடிக்கடி கொட்டாவி விட்டுக் கொண்டேயிருத்தல் இவைகளுக்கும்; பிரஸவித்த பின் குழந்தை பெற்ற சிரமத்தினால் ஏற்படும் கோளாறுகளை நிவர்த்திக்கவும் இதைக் கொடுக்கலாம். இந்த மருந்தை **'அபிஸ் மெல்லிபிகா'** விற்கு முன்போ, பிறகோ கொடுக்கக்கூடாது.

93. ரீயம்

(Rheum)

இது சைனு தேசத்து தாவர வர்க்கத்தின் வேரிலிருந்து தயாரிக்கப்பட்டது. முக்கியமாகக் குழந்தைகளுக்கு பல் முளைக்கும் சமயங்களில் ஏற்படும் வியாதிகளிலும், பெண்கள் கர்ப்பமாக இருக்கும் சமயங்களிலும், குழந்தைகளுக்கு பால் கொடுக்கும் காலங்களிலும் உண்டாகும் கோளாறுகளுக்குத் தேவைப்படுகின்றது.

இருக்காது) இம்மாதிரி பகலில் மட்டும் ஏற்படும் இருமல் வியாதிக்கு (பெர்ரம் பாஸ், நேட்ரம் மூர்) இவைகளும் உபயோகப்படுகின்றது.

(2) **கண்பீளை** ஏற்பட்டு அதனால் கண்பார்வை தடைப்பட்டு, ஷை பீளையை வெளிப்பேற்ற அடிக்கடி கண்களை சிமுட்டுதல் அல்லது இமைகளை கைவிரல்களால் அமுக்கிவிடுதல். இம்மாதிரி குறிகளுடன் கூடிய கண் வலிகளுக்கும் கண்ணில் ஏற்படும் இரணங்களுக்கும் உள்ளேயும் இம்மருந்தை 6x வீரியத்தில் கொடுத்தும், வெளிப் பிரயோகமாக இதன் தாய் திராவகம், ஒரு பங்கும், தண்ணீர் 10 பங்கும் சேர்த்த லோஷனைக் கண்களில் விட்டு வர நல்ல பலன் உண்டாகும். இரவு, பகல் எந்த நேரமும் கண்களில் ஏற்படும் நீர் வடிதலுக்கு (காரமான நீர் ஒழுகினால் 'யூபரேஷியாவும்.' காரமேயில்லாத நீர் வடிந்தால், நேட்ரம் மூர் 30 வீரியங்களில் கொடுத்து வந்தால் ஷை நோய்கள் மறைந்துவிடும். காலையில் சில குழந்தைகளுக்கு கண் இமைகள் ஒட்டிக் கொள்வதற்கும். பீளை தள்ளமுடியாமல் பிதுங்கிக் கொண்டிருப்பதற்கும் மிகச்சிறந்த மருந்து.

கவனிப்பு :- ஒரு அவுன்ஸ் டிஸ்டில் வாட்டரில் 12 துளிகள் யூபரேஷியா தாய் திராவகமும், 8 கிரைன்ஸ் போரிக் பவுடரும் கலந்து ஷை கண் நோய்களுக்கு போட்டு வந்ததில் நல்ல பலன் ஏற்பட்டது. (அனுபவக் குறிப்பு) கண் பார்வை மங்கல் நீங்கி, பிரகாசமான பார்வையும் உண்டாகிறது.

(2) **சக்கிலச சுரப்பிகளின் வேக்காட்டி**னால் இரவில் மூத்திரப் பையில் ஒருவித வேதனை ஏற்பட்டு மூத்திரம் கழிக்க அடிக்கடி எழுந்திருக்க நேரிடும். இக்குறியை உடைய வியாதியஸ்தருக்கு யூபரேஷியாவை 30x வீரியத்தில் மூன்றுதினம் தண்ணீரில் 5 சொட்டு வீதம் காலை, மாலை

கொடுத்ததில் ஷை நோய் தீர்ந்தவுடன் உடம்பிலும் ஒருவித சக்தியும், பலமும் ஏற்பட்டது. பசியும் நன்றாக எடுக்கிறது. இரத்தமும் சுத்தியானதினால் சுக்கிலத்தின் நிறமும் பிரகாசமான, நல்ல தெளிவான வெண்மை நிறத்தில் மாறியிருப்பதாக ஷை நோயாளி கூறினார். மேலும் ஷை யாருக்கு கண் பார்வையும் மிகத் தெளிவாயிருக்கின்றதாம்.

(3) வயிற்றுவலி மறைந்தால் **கண்வலி**, கண்பார்வை மங்குதல்; கண்களைப் பற்றிய கோளாறுகள் மறைந்தால் உடனே வயிற்றில் வலி ஏற்படும். இம்மாதிரி மாறி மாறித் தோன்றினால் இதை 6 வீரியத்தில் கொடுக்கவும்.

92. ரஸ்டாக்ஸி கோடண்ட்ரன்

(Rhustoxi Codendron)

இந்த மருந்து தாவர வர்க்கத்தைச் சேர்ந்த மிகக் கொடிய விஷமுள்ள செடியிலிருந்து தயாரிக்கப்படுகின்றது. பிரயோனியா என்ற மருந்துக்கு அனேக சமயங்களில் உதவி செய்யும் மருந்தாகும். மேலும் அமைதியின்மை மருந்துகளாகிய, அக்கோனைட், ஆர்ஸனிக்கம், இவைகளுடன் இதையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். சரீரத்தில் ஏற்படும் வலிகளே அமைதியின்மைக்குக் காரணமாகின்றது இம்மருந்தின் வலிகள் சரீரத்தை அசைத்தும், இங்கும் அசைந்து கொடுப்பதினால் தற்காலிகமாக சமனமாகின்றது.

முக்கியக் குறிகள் :- இம்மருந்து கொடுக்கவேண்டிய வியாதியஸ்தர்கள், அடிக்கடி படுக்கையில் புரண்டு கொண்டும், அங்கும் இங்கும் அசைந்து கொண்டும் இருப்பார்கள். வியாதி முற்றிய நிலையில் மயக்கத்துடனும், மெதுவாகப் பிதற்றிக் கொண்டும்; கேள்விகள் கேட்டால் தக்கபதிலும் சொல்லுவார்கள். மிக்க விசேஷக்குறி என்னவென்றால், நோயாளியின் நாக்கின் நுனியில் முக்கோண

வடிவமுள்ள ஓர் சிவப்பு அடையாளம் காணப்படும். அல்லது சிவந்த பாகம் நுனியில் இருக்கும். சிலருக்கு உலர்ந்தும், கருப்பு சிகப்பு மாசுபடிந்தும் இருக்கலாம்.

உபயோகம் :- (1) சாதாரண சுரங்கள் (கொல்லைக்கு தண்ணீர் போன்றும் போவதுடன் ஏற்படும் காய்ச்சல்) டைபாயிட் என்ற சுரத்திற்கும், நிமோனியா என்ற கப சுரத்திற்கும், சாயங்காலம் மிக அதிகமாகும் சாதாரண சுரங்களுக்கும் இது உபயோகமாகின்றது. முறைசுரம், விட்டு விட்டு வரும் குளிர் சுரங்களில், குளிர் இருக்கும் போது இருமல் ஏற்பட்டால் இதைக் கொடுக்கலாம். (வரண்ட இருமல்).

(2) **இடுப்புவலி.** வாதரோகத்தின் வலிகள் நடக்க ஆரம்பித்தவுடன் வலி ஏற்பட்டு நடக்க, நடக்க வலிகள் (மெதுவாக நடந்து கொண்டேயிருந்தால்) சௌகரியமாயிருத்தல். இம்மாதிரி வலிகளுக்கும்; மழையிலும், ஈரத்திலும் நனைந்து இருந்த காரணத்தினாலும். கனமான பொருள்களை மிகவும் சிரமத்துடன் தூக்கியதினாலும், அதிக உடல் உழைப்பினாலும், திரேகத்தின் தசைகளில் பிடிப்பும், இசிவும் வலியும் ஏற்படுவதற்கும் முக்கியமான மருந்து.

(3) **உமிழ்நீர்க் கோளங்கள்** (சுரப்பிகள்) தாடை இவைகளில் வீக்கம் வலி எக்காரணத்தினால் ஏற்பட்டாலும் இதை 30 வீரியத்தில் கொடுக்கவும். டிப்தீரியா என்ற தொண்டை அடைப்பான் வியாதிக்கும் கொடுக்கலாம். மை குறிகள் இருக்கவேண்டும்.

(4) **சர்மக் கோளாறுகள் :-** அரிப்பு, சொறிசிரங்கு, சீழ் கொப்புளங்களுடன் கூடிய சிரங்குகள், கரப்பான்படை. அதாவது சிறு குழந்தைகளுக்கு கை, கால்களில் மங்கிய சிகப்புக் கலரில் தோன்றும் சிறு கொப்புளங்களில் சீழ் இல்லாமல் ஊநீர் மட்டும் வடியும். இம்மாதிரி வியாதியில்

அமைதியின்மையும் மந்தமான உணர்ச்சியும் காணப்படின் இதைக் கொடுக்கலாம். பெரியம்மை, நீர் குளுவான் அம்மை நோய்களிலும் அடிக்கடி இம்மருந்து தேவைப்படும். (அதாவது அம்மைக் கொப்புளங்கள் நிறம் மாறி டைபாய்டு சுரக்குறிகள் ஆரம்பிக்கும்போது கொடுக்க வேண்டும்.)

(5) **இளம்பிள்ளை வாதம் :-** பெரியவர்களுக்கு குளிர் காற்று தாக்கப்பட்டு, ஈரத் தரைகளில் படுத்திருப்பதை வைத்தும், குளிரும் ஈரமுமுள்ள தரைகளில் சதா இருப்பதினாலும், ஏற்படும் வாதரோகத்திற்கும்; பெரும்பாலும் மேற்படி காரணங்களினால் குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாத நோய் ஏற்பட்ட சமயங்களில், 30, 200 வீரியங்களில் இம்மருந்தைக் கொடுத்து குணமாக்கலாம்.

கவனிப்பு :- சுளுக்கு, சுளுக்குபோன்ற வாதவலிகள், வியாதி நேரங்களில் அடிக்கடி கொட்டாவி விட்டுக் கொண்டே யிருத்தல் இவைகளுக்கும்; பிரஸவித்த பின் குழந்தை பெற்ற சிரமத்தினால் ஏற்படும் கோளாறுகளை நிவர்த்திக்கவும் இதைக் கொடுக்கலாம். இந்த மருந்தை **அபிஸ் மெல்லிபிகா** விற்கு முன்போ, பிறகோ கொடுக்கக்கூடாது.

93. ரீயம்

(Rheum)

இது சைனு தேசத்து தாவர வர்க்கத்தின் வேரிலிருந்து தயாரிக்கப்பட்டது. முக்கியமாகக் குழந்தைகளுக்கு பல் முளைக்கும் சமயங்களில் ஏற்படும் வியாதிகளிலும், பெண்கள் கெர்ப்பமாக இருக்கும் சமயங்களிலும், குழந்தைகளுக்கு பால் கொடுக்கும் காலங்களிலும் உண்டாகும் கோளாறுகளுக்குத் தேவைப்படுகின்றது.

முக்கியக் குறிகள் :- உடல் முழுவதும் புளிப்பு நாற்றமுள்ள வியர்வை. இலகுவான ஆகாரம்கூட வயிற்றில் புளித்துவிடும் தன்மையை உடையவர்கள். விசித்திர வயிற்றுவலி. (அதாவது வலியின்போது எழுந்து நின்றால் வலியானது அதிகப்படும்.) சிலருக்குதான் போர்த்தியிருக்கும் போர்வையை விட்டு வெளியே, ஒருகை, அல்லது கால், அல்லது ஏதாவது ஒருபகுதி நீட்டப்படுமானால் உடனே அடிவயிற்றில் புரட்டலும், வலியும் ஏற்பட்டுவிடும்.

மலக்குறிகள் :- குழந்தைகளின் மலம் **புளிப்பு நாற்றம்**, வழுவழுப்பு காரமாகவும், கபில நிறத்தில் நுரைத்தும் அல்லது புளிப்புநாற்றமுள்ள மலத்துடன் பச்சை நிறமான தண்ணீர்போல் நீர்த்தசளிப் பொருளுடனும் இருக்கும். இம்மாதிரி நிறங்களில் மலம் கழிக்கத் தூண்டுதலுடன் புளிப்பு நாற்றம் தான் பிரதான குறியாகும். அத்துடன் குழந்தைகள் இரவு முழுவதும் கதறும். அழுது பாடாய் படுத்தும். பல பொருள்களை வேண்டும் என்று கேட்கும். கொடுத்தால் கீழே எறிந்துவிடும். (ஆகார விஷயங்களிலும் அவ்விதமாகவே பலவகையான உணவைக் கேட்டு அழும். ஒருவாய் உட்கொண்டவுடனேயே அதில் வெறுப்பு அல்லது குமட்டல் உண்டாகித் துப்பிவிடும். (வயிற்றில் பிசையும் வலியுடனும், ஆசனத்தில் கடுப்புடனும் மலம் பிரியும்போதும், பிரிந்த பிறகும் இருக்கும்.

உபயோகம் :- (1) மலம் புளிப்பு நாற்றத்துடன் வயிற்றுப் போக்கு வியாதிகளுக்கு உபயோகமாகும் மருந்துகள் **கல்கேரியா கார்ப், ஹீப்பார் சல்பர், மெக்னீஷியா கார்பும்** (பயோ கெமிக் மருந்து) **ரேட்ரம் பாஸ்.**

(2) பச்சைநிறம் மலப்போக்கு வியாதியுடனோ, அல்லது புளிப்பு நாற்றமுள்ள மலக்குறியுடனோ குழந்தைகளின் வயிற்றில் சூடும், குளிர்ந்த தரையில் படுத்துக் கொண்டும் இருக்கும்படியான (குழந்தைகளுக்கு) கல்லீரல், மண்ணீரல் பெருத்தலுக்கு மெக்னீஷியா கார்பும், ரீயமும் மாற்றி, மாற்றிக் கொடுக்கலாம்.

94. ருமெக்ஸ் க்ரிஸ்பஸ்
(Rumex Crispus)

இது ஒரு மஞ்சள் செடி என்ற தாவர வகையைச் சேர்ந்தது. இருமலுக்கு சிறந்த மருந்து. சர்மநோயில் தன் ஆடையைக் களைந்தவுடன், அதிகமாக அரிப்பு ஏற்படும் சொறி சிரங்குகளுக்கும் நல்ல மருந்து.

முக்கியக் குறிகள்:- நெஞ்சின்மேல் குழியில் கறகறப்பு, இடைவிடாமலும், கடுமையாகவும், வறட்சியுடனும் களைப்பை உண்டாக்கும் இருமல். இரவிலும், குளிர்ந்த காற்றை சுவாசிப்பதினாலும் (குளிர் காற்று ஒத்துக்கொள்ளாது) ஏதாவது பேசினாலும், தொண்டைப் பாகங்களில் அழுக்குவதினாலும் இருமல் அதிகரிக்கும். இருமலின்போது இடது மார்பின் கீழே சிறிது தைக்கும்வலி உணர்ச்சி ஏற்படும். சில சமயங்களில் ஷி இருமலுடன் காலை வேளையில் வயிற்றுப்போக்கு அதிகமாயும் பழுப்பு நிறத்திலும் போனால் மிகச் சிறந்த மருந்து. 3x முதல் 12 வீரியம் வரையிலும் கொடுக்கலாம்.

கவனிப்பு :- சரீரத்தில் சிரங்கு இல்லாமல் தேக முழுவதும் அரிப்பும், அவ்வரிப்பு இரவில் படுக்கைச் சூட்டினால் அதிகரித்தால் **"மெர்க்கூறியஸ் சொலுபுலிஸ்"** தான் கொடுக்கவேண்டும்.

95. லாக் கானினம்
(Lac Caninum)

இது நாயின் பால். நாயின் பாலை வீரியப்படுத்தி நாம் வாதநோய், டிப்திரியா, டான்சிலிட்டிஸ் ஆகிய வியாதிகளுக்கு மருந்தாக உபயோகிக்கின்றோம்.

முக்கியக் குறிகள் :- தொண்டை சம்பந்தமான வியாதி முழங்காலில் வரும் வாதரோகம் போன்றவைகள். முதல் நாள் வலதுபக்கம் வந்தால் மறுநாள் இடதுபக்கம் ஏற்படும் அல்லது சரீரத்தின் முன்பக்கம் ஒருநாள் வந்து மறுநாள் பின்பக்கம் வருமேயானால் இந்தக்குறியே பிரதானமாகும் உபாதைகள், வலிகள் அடிக்கடி பக்கம் மாறுதல்.

இதர உபயோகம் :- (1) பெண்களின் ஒவ்வொரு மாதவிடாய் தோன்றும் சமயங்களில் தொண்டையிலும், ஸ்தனங்களிலும் வீக்கம் வலி ஏற்பட்டு, மாதவிடாய் நின்ற பிறகு ஷி உபாதைகளும் மறைந்துவிடும். (சிறிது அசைந்தாலும், ஸ்தனங்களில் அதிர்ச்சி ஏற்பட்டாலும் வேதனை, வலி அதிகமாகும்.) இக்குறியுடன் கூடிய ஸ்தனங்களில் வீக்கம் வலிபோன்ற நோய் மாதவிடாய் இல்லாத மற்ற சமயங்களில் வந்தாலும் **"லாக் கானினம் 200"** வீரியத்தில் ஒரே ஒருதடவை கொடுத்து, பின்னர் **"பிரையோனியா"** கொடுக்கவும்.

(2) தாய்மார்களின் தாய்ப்பாலை வற்றவைக்க **"லாக் கானினம் 200"** வீரியத்தில் கொடுக்கலாம், வற்றிய பாலை மறுபடியும் ஊறவைக்க **"லாக் வாக்ஸினம் டிப்ளோரேட்டம்"** கொடுக்கவேண்டும்.

96. லாக்டிக் ஆஸிட்

(Lactic Acid)

நீரழிவு என்ற அதிமூத்திர ரோகத்தில், ஏராளமான மூத்திரம் பகல் இரவு அடிக்கடி பிரியும். அகோரப்பசி, அதிகதாகம். மூத்திரத்தில் அளவு கடந்த சர்க்கரை வெளியாகும். ஷி நீர் ரோகத்துடன் ருமாடிஸம் என்ற முழங்கால் மூட்டுகளில் வரும் வாத சம்பந்தமான வலிகளுக்கு நல்ல மருந்தாகும்.

முக்கியக் குறிகள் :- வயிற்றிலிருந்து ஆகாரக்குழாய் வழியாக காரமான நீர் எதுக்களித்தல். அத்துடன் எரிச்சல். உமிழ்நீர் ஏராளமாய் உற்பத்தியாதல். குமட்டலும் வாந்தியும். சாப்பிட்டால் குமட்டல் குறையும். மூத்திரத்தில் சர்க்கரை ஏராளமாயிருக்கும். பாதங்களில் அதிகமான வியர்வை. கருவுற்ற பெண்களின் உமிழ்நீர் பெருக்கு (அதிலும் காலை வேளைகளில் அதிகமாக இருக்கும்.) 200 வீரியத்தில் கொடுக்கலாம்.

97. லாச்சஸிஸ்

(Lachesis)

இது தென் அமெரிக்காவில் பிரேஸில் தேசத்தின் கட்டு வீரியன் பாம்பின் விஷத்திலிருந்து வீரியப்படுத்தியதாகும். டாக்டர் ஹெரிங் என்ற பிலாடெல்பியா தேசத்து மேதையால் கண்டுபிடிக்கப் பட்டது. இது இடது பக்கத்து உபாதைகளுக்கு சிறந்த மருந்து.

முக்கியக் குறிகள் :- எல்லா வியாதிகளும் சரீரத்தின் இடது பக்கத்தில் ஆரம்பிக்கும், அல்லது இடது பாகத்தில் அதிகமாயிருக்கும். (இடமிருந்து வலதுபக்கம் போகும்) வியாதியஸ்தர் தூங்கி எழுந்தவுடன் எல்லா உபத்திரவங்களும் அதிகமாகக் காணும். பிறகு உபாதை அதிகரிப்பிலேயே தூக்கமும் வந்துவிடும். சகல சர்ம நோய்களும் நீலம் பூத்துவிடும். நோயுள்ள பாகங்களில் தொடமுடியாத வலி. அந்த இடங்களில் ஆடைகளைக் கூட அணிந்து கொள்ள முடியாது.

மனக்குறி :- ஓயாதபேச்சு. (சலிக்காமல் பேசுவார்) ஏக காலத்தில் ஒரு விஷயத்திலிருந்து, பல விஷயங்களுக்குத் தாவி விடுவார். தனக்கு யாரேனும் விஷம் கொடுத்துக் கொன்றுவிடுவார்களோ என்ற பயம். (மருந்து தனக்கு வேண்டாம் என்று சொல்லுவார். ஜன்னியில் முனக்கம்,

கிழ்த்தாடை தொங்கிவிடும். இரவில் மயக்கம், பயங்கரமான தோற்றங்கள்.

பொதுக் குறிகள்:- ஆண், பெண் பருவமடையும் காலங்களில் ஏற்படும் கோளாறுகளுக்கும், பெண்களுக்கு மாதவிடாய் நிரந்தரமாய் (வயதான பிறகு) நிற்கும் காலங்களில் ஏற்படும் சகல கோளாறுகளுக்கும் உபயோகப்படும் தலைவலியிலும், ஜலதோஷத்திலும் மூக்கிலிருந்து சளி வெளியேறிவிட்டால் உபாதை குறையும். மாதாந்திர சூதக வழியில் சூதகம் வெளியேறிவிட்டால் உபாதி குறைந்துவிடும்.

நாக்கின் குறிகள்:- நாக்கு உலர்ந்தும், நுனியில் விரிந்தும் அடிப்பாகம் சிவந்தும் இருக்கும். நாக்கும் பல்லும் ஒட்டிக்கொள்ளும். வெளியே நீட்ட மிகவும் சிரமப்படுதல். நாக்கில் நடுக்கம். டைபாயிட் சுரங்களில் நாக்கு நடுங்கும். நீடித்த சுரங்களில், இரவில் மயக்கம், ஞாபகசக்தி குறைதல், முகம் சிவந்தும், உஷ்ண ஜ்வாலை, ஆவிபறத்தல் சூடான உணர்ச்சி தோன்றும்.

உபயோகம்:- (1) டைபாயிட் போன்ற நீடித்த சுரங்களில் மேடி நாக்கின் குறிகளுடன், வாய் அதிக நாற்றத்துடனும், உலர்ந்தும், அல்லது பிசுக்கென்ற நீருடனும் இருக்கலாம். முற்றின நிலைமையில் குடலிலிருந்து இரத்தப் பெருக்கெடுத்து இரத்தம் சிறுசிறு கட்டிகளாகவும், கரித் துண்டுகள் போன்றும் வெளிப்படுமானால் 30 வீரியத்தில் கொடுக்கவும். இத்துடன் பைரோஜன் என்ற மருந்தையும் கொடுக்கலாம். நிமோனியா சுரத்தில் அதிக வியர்வையும், இரத்தம் சீழ் கலந்த கோழையைத் துப்புவான்.

செப்டிக் சுரம் (Septic Feever):- அடி, குத்து, வெட்டுக் காயம், இவைகளினால் இரத்தம் கெட்டுப்போய் பாதிக்கப்பட்ட பாகங்களில் நீலநிறம் பூத்து ஏற்படும் சுரங்களுக்கும்; புண்கள் (புண்களிலிருந்து இரத்தம் நீத்துப்போய்

